# வீறுகவியரசர் முடியரசன் கவிதைகள்

## பொருண்மைவகைத் தொகுப்பு (புரட்சி—நிகர்மை)

தொகுப்பாசிரியர்
பாரி முடியரசன்

### உள்ளுறை

பக்கம்

**பதிப்புரை**
**முன்னுரை**

**புரட்சி — நிகர்மை**
1. மொழிப் புரட்சி
2. சாதி ஏது ?
3. பொதுமை
4. அழகின் சிரிப்பு
5. எழில்
6. நிலவு
7. படைத்தோன் வாழ்க
8. தொழிலாளி
9. கூண்டுக் கிளி
10. விறகு வெட்டி
11. குதிரை நினைத்தால்
12. உணர்வார் யாரோ
13. துன்பமடா துன்பம்
14. பட்டண வாழ்வு
15. பட்டிக்காட்டன்
16. புலியேறென எழுவாய்
17. புதருள் கனி
18. புதுமைப் பெண்
19. கவிதைப் பெண்
20. இறப்பே வா
21. தமிழன் ஏக்கம்
22. புண்படுமா?
23. சொல்லும் செயலும்
24. ஏழை ஏது?
25. பாரதியும் கவிதையும்
26. எண்ணம்
27. உணவு
28. பாரதி — வீரன்
29. உரிமை
30. குயிலெனக் கூவுவோம்
31. தலைமை வகிப்போம்
32. மூடம் என்று மாறுமோ!
33. மாந்தன் கற்பனை
34. ஏறு முன்னேறு
35. உறங்கிய வீணை
36. ஐந்து பூதம்
37. நற்பணியாற்றுவோம்
38. நெஞ்சத் துடிப்பு
39. நியாய விலைக்கடை
40. கண்ணீர்த்துளி
41. உலகை நினையுங்கள்
42. திருமணச் சந்தை
43. உலகம் சிவக்கும்
44. தேவ தாசி
45. ஒப்பனை மகளிர்
46. உரிமையும் கடமையும்
47. தீண்டாமை
48. நல்ல சமையமடா
49. வாழ்வுப் பாதையில் பக்தி
50. பாரதி கண்ட பெண்ணுரிமை
51. இதுவா முன்னேற்றம்?
52. பெண்ணின் பெருமை
53. அண்ணல் நடந்த அடிச்சுவடு
54. சிரித்த முகம்
55. சீரழிந்து போகாதே
56. பொய்மைகள் மாயும்
57. இயற்கைப் பெரியார்
58. உடைத்தெறிந்தார்
59. தண்டுன்றும் பெரியார்
60. ஆதவன்
61. போராட்ட வீரர்
62 பகலோன் வாழ்க
63. புரட்சித் தலைவன்
64. அரசு நாட்டினான்
65. அண்ணா வழியில் அயராதுழைப்போம்
66. ஏடெடுத்தேன் பாட்டெழுத
67. புதியதொரு விதி செய்வோம்
68. பகடைக் காய்
69. ஏர் நின்றால்
70. பொதுமை காண்போம்
71. பூக்கட்டும் புதுமை
72. யாவும் பொதுமையடா
73. உலகை மாற்றுவோம்
74. துன்பத்துடிப்பு
75. தீ பரவட்டும்
76. அந்நாள் எந்நாள்?
77. சிறுத்தையே விழித்தெழு
78. ஆரியப் பேரரசு
79. ஏற்றம் பெறுமா இந்தியா?
80. பொங்குதற்கு வீடில்லை
81. தமிழர் திருநாள்
82. விண்வெளிப் போருக்கா விஞ்ஞானம்
83. விழா மட்டும் போதுமா?
84. புரட்சிப் பாவலன்
85. தட்டி எழுப்பிய தலைவர்கள்

**வீறுகவியரசர் முடியரசனார் புகழ் மாலை**
**வீறுகவியரசர் முடியரசனார் வாழ்க்கைக் குறிப்பு**
**பாரி முடியரசன் பற்றி**

# புரட்சி–நிகர்மை

**[வீறுகவியரசர் முடியரசனார் ‘புரட்சி, பொதுவுடைமை, பொதுமை, உரிமை, விடுதலை, மொழிப்புரட்சி, மறுமலர்ச்சி, பகுத்தறிவு, சீர்திருத்தம், சாதியொழிப்பு, பெண்ணியம், உழவர், தொழிலாளர், மாந்த–பொருளாதார நிகர்மை’ பற்றிப் பாடிய கவிதைகள் இப்பொருண்மையில் தொகுக்கப்பட்டுள்ளன]**

**(இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ள கவிதைககளின் தலைப்புகளுக்குக் கீழ், அக்கவிதைகள் இடம்பெற்ற நூல்களின் பெயர்கள் அடைப்புக் குறிக்குள் தரப் பெற்றுள்ளன)**

## 1. மொழிப் புரட்சி

**(‘பூங்கொடி’ காப்பியத்திலிருந்து சில அடிகள்)**

...... ...... ...... ......
நம்நாட் டகத்தே நயமிலாப் புன்மொழி
திணிப்பதற் கொருசிலர் செய்தனர் சூழ்ச்சி;
1துணுக்குற் றெழுந்தனர் தூயநல் மனமுளோர்;
தாய்மொழி வளர்ச்சி தளர்ந்தஇந் நாட்டில்
நோய்என மடமை நுழைந்து பரந்தது;
எழுத்தும் அறியார் படிப்பும் உணரார்
கழுத்திற் பிறமொழி கட்டுதல் நன்றோ?
என்றநல் லுரையை இகழ்ந்தனர் ஆள்வோர்;

கன்றிய நெஞ்சங் கனன்றது; தமிழர்
பொறுக்கும் அளவே பொறுப்பர், மீறின்
ஒறுத்ததன் பிறகே ஓய்வும் உணவும்
நினைவர்; இதுதான் நெடுநாள் இயல்பு;
2கனலும் 3புனலும் 4கரைமிகின் தடுக்க
உலகில் ஒருபொருள் உளதென அறியோம்;

மூக்கினை வருடின் 5மூங்கையும் சினப்பான்;
காக்கும் உயிரினும் மேம்படு கனிமொழி
தாய்மொழி யதனைத் தகவிலார் குழுமி
ஆய்வஞ் சனையால் அழிக்க முனையின்
ஊமையிற் கீழாய் உறங்கிக் கிடப்பரோ?

போர்ப்படை திரண்டது போர்ப்பறை ஆர்த்தது;
6கோற்படை வீரரைக் குவித்தனர் அரசினர்;
அஞ்சிலர் நெஞ்சில் ஆண்மை ஏறினார்
வஞ்சினம் சாற்றினர் வாகை சூடவே;
மானம்7மீக் கூர்ந்தவர் மறியல் செய்தனர்;
8கூனல் நெஞ்சினர் கொடுங்கோல் செலுத்தினர்;

அடித்தனர் துரத்தினர், 9அடவி 10நாப்பண்
துடித்திடக் கொண்டுபோய் விடுத்தனர், புலிவாய்
தப்பிப் பிழைத்துத் தாய்மார் பல்லோர்
அப்பணி மீண்டும் ஆற்றினர்; அவர்தமைக்
கொடுஞ்சிறைக் கூட்டுள் கொடுங்கோல் அடைத்தது;

தொடும்பணி எதையும் துணிவுடன் ஆற்றக்
கடும்புயல் என்னக் கனன்றெழும் காளையர்
கொடியுடைக் கையர் கூடி எழுந்தனர்;
தடியடி தாங்கினர் தரையிற் செந்நீர்
சிந்தினர் மொழிப்பயிர் 11செழிப்பான் வேண்டி;
குருதி கண்டும் உறுதி குலைந்திலர்
முறுகி எழுந்தனர்; மூண்டெழும் மக்கள்
உணர்ச்சியும் அதனோ டுள்ளெழும் எண்ணமும்
பணத்திமிர்க் கடங்கும் பான்மைய அலவே!

கிளர்ந்தெழு வீரரைக் கொடுஞ்சிறைக் கிடத்தின்
தளர்ந்12திறும் புரட்சிஎன் றுளந்தனிற் கொண்டோர்
சிறையகந் தொறுமிடம் இலாமல் அடைத்தனர்;
சிறையகம் வீரர்தம் சிந்தையை அழிக்குமோ?
குறைமதி யாளர்தம் கொள்கை அஃதாம்;
சிறையகம் போலச் சிந்தனை வளர்க்கும்
உறைவிடம் மற்றொன் றுலகில் உளதோ?
எண்ணமும் கருத்தும் எலியோ? பொறியுள்
நண்ணிய பின்னர் நசுக்க ஒல்லுமோ?

...... ...... ...... ......

---

**அருஞ்சொற் பொருள்:–**
1.துணுக்குற்று–அச்சமுற்று. 2.கனல்–தீ. 3.புனல்–நீர். 4.கரைமிகின்–எல்லை கடந்தால். 5.மூங்கை–ஊமை. 6.கோற்படை வீரர்–ஊர்காவலர். 7.மீக்கூர்ந்தவர்–மேம்பட்டவர். 8.கூனல்–குறுகிய. 9.அடவி–காடு. 10.நாப்பண்–நடுவில். 11.செழிப்பான்–செழிக்க. 12.இறும்–அழியும்.

## 2. சாதி ஏது ?

**(‘பூங்கொடி’ காப்பியத்திலிருந்து சில அடிகள்)**

...... ...... ...... ......
சாதி என்றொரு சொல்லினைச் சாற்றினீர்
ஆதியில் நம்மிடம் அச்சொல் இருந்ததோ?
பாதியில் புகுந்தது பாழ்படும் அதுதான்;
தொழிலாற் பெறுபெயர் இழிவாய் முடிந்தது;
அழியும் நாள்தான் அணிமையில் உள்ளது;
பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குமென் றோதிய
திருக்குறள் உண்மைநும் செவிப்புக விலையோ?
[1]கதிரும் நிலவும் காற்றும் மழையும்
எதிரும் உமக்கும் எமக்கும் ஒன்றே!
தவிர்த்தெமை நும்பாற் சாருதல் உண்டோ?
கபிலர் அகவல் கண்டதும் உண்டோ?
சாதிப் பெயர்சொலித் தாழ்வும் உயர்வும்
ஓதித் திரியின் உலகம் வெறுக்கும்;
பிறப்பால் தாழ்வுரை பேசுவீ ராயின்
சிறப்பால் நீவிர் செப்புநும் முன்னையர்
மூலங் காணின் ஞாலஞ் சிரிக்கும்;
காலங் கருதிக் கருத்தினை மாற்றுமின்’
...... ...... ...... ......

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. கதிர்–கதிரவன்.

## 3. பொதுமை

**('இளம்பெருவழுதி' நாடகக் காப்பியத்திலிருந்து:–.......)**

**பாண்டிய அவைக்களப் புலவர் வெண்டலை நாகனாருடன் பாண்டிய இளவரசன் வழுதியும் படைத்தலைவனின் தங்கை குழலியும் உரையாடும் காட்சி–2 இலிருந்து சிலஅடிகள்:–**

வழுதி : அறந்தரு கல்வி வயங்கெழு போர்மறம்
சிறந்த தெதுவெனச் செப்புதிர் பெரியீர்!

நாகனார் : இருவிழி யவற்றுள் எவ்விழி சிறந்தது?
பெருமை சிறுமை பேசுதல் யாங்ஙனம்?
இலக்கியம் இலக்கணம் எனுமிவ் விரண்டு
கலைக்குட் சிறந்தது காணல் முறையோ?
ஆண்மை பெண்மை ஆயிரு தன்மையுள்
மேன்மையென் றொன்றை விளம்பல் தகுமோ?
செறிதரும் அறிவு செங்கள வலிமை
விரிநீர் வைப்பிற் கிரண்டும் வேண்டும்;
மறுவறு கல்வி மனநலங் காக்கும்;
நிறைவுறு மறமோ நீணிலங் காக்கும்;

வழுதி : (நகைத்துக் கொண்டே)
பேசிய கல்வி பெண்களுக் குரித்தோ?

குழலி : (வழுதியைக் குறும்பாகப் பார்த்து)
குறுமனங் கொண்டோர் கோதையர் உயர்வை
வெருவின ராகி விழைதல் செய்யார்;

வழுதி : வெருவுவா ரீங்கிலர் விழைவா ரீண்டுளர்;

நாகனார் : (இருவரையும் அமைதிப்படுத்தக் கையமர்த்தி)
தண்ணிய தென்றற்குப் பெண்டிர் விலக்கோ?
மண்ணும் ஒளியும் மழையும் பொதுமை
எண்ணும் எழுத்தும் இருபாற் பொதுமை;
கண்க ளிரண்டுள் காண்டற் குரித்தென
ஒன்றுவிட் டொன்றை உரைப்பா ருளரோ?
செவிக ளிரண்டுள் கேட்டற் குரிய
செவியீ தென்று செப்புநர் உண்டோ?
எவருங் கல்விக் குரிய ராவர்;
இவர்தாம் அவர்தாங் கற்றற் குரியரென்
றெவர்தாம் வரையறை இயற்றற் குரியர்?
......... ........ ......... .........

நாகனார் : தாய்க்குலம் விழித்தெழின் தாயகஞ் செழிக்கும்
தாய்மொழி ஆல்போல் தழைக்கும் கொழிக்கும்
உயர்மொழி தனிமொழி செம்மொழி நம்மொழி
அம்மொழி வளர்க்க அரிவையர் முந்துறின்
எம்மிற் சிறந்தோர் எவருளர் அம்ம
........ ........ ......... .........

***** ***** *****

## 4. அழகின் சிரிப்பு

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

**('இயற்கை' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளது)**

எண்சீர் விருத்தம்

அலைகடலின் அப்புறத்தே ஓரக் கோட்டில்
அடரிருளை அகற்றியபின் கிழக்கு வானில்
கலையாத செந்நிறத்தைப் பூசி விட்டுக்
காதலியைக் காணவரும் காத லன்போல்
தலைகாட்டிக் கதிரவன்தான் சிரித்துக் காட்டும்
தன்மையினில், மகிழ்வூட்டும் அழகு தன்னில்
கலையழகு சிரித்துவிளை யாடக் கண்டு
கழனிகளின் வரப்போரம் நடந்து சென்றேன்
1

முழந்தாளிற் கையூன்றிக் குனிந்து நின்று
முன்தானை எடுத்திடையில் இறுகக் கட்டிச்
சுழன்றாடும் குழல்மாதர் கால்வ யிற்றுச்
சோற்றுக்கு நாற்றுநடும் போது தன்னால்
எழுந்தாடும் கையசைவில், வீட்டுக் காரன்
ஏர்பிடித்துக் களைத்திருப்பான் என்று சொல்லி
விழுந்தோடி உணவுகொண்டு வந்த பாவை
விளையாடி உணவூட்டும் காட்சி தன்னில்,
2

நீர்சேந்தி நிறைத்தகுடம் இடுப்பில் வைத்து
நெளியஒரு கைவீசிச் செல்லும் சிற்றூர்
சேர்மாதர் மென்னடையில், குருவி காக்கை
செழுங்கதிரைத் தின்னாமல் காப்ப தற்கு
வார்தொடுத்த கவண்வீசிக் கூவுங் காலை
வாயெழுப்பும் இசைக்குரலில், மண்ணை வெட்டி
நீர்கட்டும் தொழிலாளி நீள்பு யத்தில்
நின்றுநடம் செய்கின்ற அழகைக் கண்டேன்
3

கால்முளைத்த தாமரையின் மொக்குள் போலக்
காட்சிதரும் குஞ்சுகள்தம் வாயில் கோழி
வேல்மூக்கால் அன்புகலந் திரையை யூட்டும்
வேளையிலும், வானத்து வீதி செல்லும்
பால்மதியப் பெண்தனது விண்மீன் என்னும்
பல்விரித்துச் சிரிக்கின்ற போதும், மண்மேல்
கால்மடித்துத் தவழ்கின்ற குழந்தை பேசும்
காலத்தும் நல்லழகின் சிரிப்பைக் கண்டேன்
4

வெம்புலியின் பாய்ச்சல்தனில், வீரன் ஏந்தும்
வேல்நுனியில், தோள்வலியில், படம்வி ரித்து
வெம்பிஎழும் நாகத்தின் ஆட்டந் தன்னில்,
விரிகொம்பு மான்விழியில், தேனை உண்ணத்
தும்பிஎழுந் தார்க்கின்ற முல்லைக் காட்டில்;
தோகைவிரித் தாடுகின்ற மயிலி டத்தில்,
செம்பவழக் கொடிக்கடலின் அலைக்கூட் டத்தில்
சேர்ந்திருக்கும் அழகெல்லாம் சிரிக்கக் கண்டேன்
5

இங்கெல்லாம் சிரிக்கின்ற அழகு கண்டேன்
இனியதமிழ் பேசுகின்ற மனிதன் வாழ்வில்
பொங்கிவரும் அழகில்லை! உழைத்துண் டாக்கும்
பொருளெல்லாம் பிறர்நுகரப் பெற்ற தாலோ
தங்கள்குலம் வாழாமல் சுரண்டு வோரைத்
தரைமட்டம் ஆக்கஎழும் எண்ணத் தாலோ
மங்குமவன் முகத்தினிலே சிரிப்பும் இல்லை!
மனிதரினம் விலங்கினமாய் வாழல் நன்றோ?
6

மக்கள்நலம் பேணுகின்றோம் என்று சொல்லி
மணிப்பீடம் ஏறிவிட்டோர் மதத்தின் பீடம்
தக்கதுணை என்றெண்ணி அயர்ந்து விட்டார்;
தறிகெட்டுத் திரிகின்றார், மேடை ஏறிக்
கொக்கரித்தல் ஓயவில்லை; சட்டத் தாலும்
கொடுமைகளும் மாயவிலை; அறிவு மாய்க்கும்
அக்குணத்தார் ஆட்சியிலே அழகும் இல்லை
ஆதலினால் வாழ்க்கையிலே சிரிப்பும் இல்லை!
7

ஆற்றாலும் மலையாலும் சோலை யாலும்
அழகுசிரித் தாடுகின்ற நாட்டில் வாழ்வீர்!
சோற்றாலே துயருறுவோர் தமிழர் என்னும்

சொற்கேட்டுத் துடித்திலதோ உங்கள் உள்ளம்?
மாற்றாரின் காலடியில் நாட்டை விட்டீர்!
மடிகின்றீர்! இக்கேட்டை அழிக்கும் எண்ணம்
தோற்றாதோ உங்களிடம்? அடிமை வாழ்வு
தொலையாதோ? அழகிங்கே சிரிப்ப தென்றோ?
8

---

**பாடற் குறிப்பு:–** கோவையில் 1950 மே 27, 28 தேதிகளில் பாவேந்தர் பாரதிதாசனார் தலைமையில் நடைபெற்ற முத்தமிழ் வளர்ச்சி மாநாட்டுக் கவியரங்கில் முதற் பரிசில் பெற்றது இக்கவிதை. பாவேந்தருடன் நாவலர் சோமசுந்தர பாரதியார், பன்மொழிப் புலவர் கா.அப்பாத்துரையார் ஆகியோரும் கவிதைத் தேர்வுக்குழுவில் இருந்தனர். கொடி கட்டிப் பறந்த திரைப்படக் கவிஞர்கள் உட்படப் பல சிறந்த கவிஞர்கள் இக் கவியரங்கில் கலந்து கொண்டனர். வாணிதாசனுக்கு 2ஆம் பரிசு.

## 5. எழில்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

**('இயற்கை' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 9 எண்சீர் விருத்தங்களில், 3 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

கொடிதாங்கி உரிமைப்போர்க் களத்துச் சென்ற
குமரனவன் உயிர்நீங்க ஆள்வோர் தந்த
அடிதாங்கித் தலையிழிந்து கொட்டும் செந்நீர்,
அடிமைஎனும் சிறுமையினை அழிப்பான் வேண்டி
நெடிதோங்கும் பிறனாட்சி தொலைக்கும் போரில்
நின்றிருந்த பெரியோன்தன் அகன்ற மார்பு
வெடிதாங்கிச் சிந்துகின்ற குருதி, யார்க்கும்
விளங்காத எழில்காட்டக் கண்டேன் கண்டேன்
1

"மனவிருளை அகற்றிடுக சிந்தித் தாய்க!
மறைப்பின்றி உரைத்திடுக! இங்ஙன் செய்யின்
நனவுலகில் மனிதரென வாழ்வோம்!" என்று
நவின்றவனை "அடைத்திடுக கொடுஞ்சி றைக்குள்"
எனவுரைத்துக் கொடுநஞ்சைக் கொடுத்தான் வேந்தன்
"எனதுயிரிற் பெருங்கொள்கை விடுதல் ஏலேன்
சினவுயிரை விடுதல்எனக் கெளிதாம்" என்று
செப்பிஅவன் குடித்தெறிந்த கிண்ணத் துள்ளே
2

நாட்டுக்குச் செய்தபெருந் தொண்டுக் காக
நரிக்குணத்தர் அவற்களித்த துக்கு மேடை
காட்டுகின்ற சுருள்கயிற்றில், இறந்து பட்ட
காளையவன் சவக்குழியில், எலும்புக் கூட்டில்,
நாட்டிற்காச் செக்கிழுத்து மெலிந்த தோளில்,
நல்லதமிழ் நாட்டெழுந்த இந்திப் போரில்
தேட்டாளர் முகங்களிலே அறுத்தெ றிந்த
திருத்தாலிக் கயிற்றில்நான் எழிலைக் கண்டேன்.
3

## 6. நிலவு
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

**('இயற்கை' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 8 எண்சீர் விருத்தங்களில், 3 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

ஒளிமிகுந்த குளிர்நிலவே! உன்னைக் கண்டேன்
உள்ளமெல்லாம் உவகையுற இன்பங் கொண்டேன்;
களிமிகுந்த காதலருக் கின்பத் தோணி!
கடைந்தெடுத்த வெண்முத்தம் நின்றன் மேனி;
தளிர்போலும் குழவிகளின் கதறல் நீக்கும்
தாயர்தமக் குதவிடுவாய்! உலகைக் காக்கும்
எளிமைமிகு தொழிலாளர் அயர்ந்த போதில்
எழுந்துமுகம் காட்டிமகிழ் வூட்டும் மாது!
1

ஒருபொழுதும் வயிராற உண்ணல் காணா
துயிர்நிற்க இரந்துண்ணும் ஏழை, திங்கள்
வருபொழுது அரைவயிறு மட்டும் உண்டு
வருந்துகிற உழைப்பாளி, நிறைய உண்ணும்
பெருவயிற்றுப் பணக்காரன் யாவ ரேனும்
பிழையாது நிலவளித்து மாட மீதும்
சிறுகுடிசை மீதுமொளி வீசி இன்பம்
சேர்க்கின்ற பொதுவுடைமை ஆட்சி கண்டேன்
2

*பொதுவுடைமை ஆட்சியினை இரவுப் போதில்
புரிகின்ற முழுமதியே! உன்னைக் கண்டு
மதுவுண்ட வண்டானேன்; இன்பப் பாடல்
வாய்குளிர மனங்குளிரப் பாடி நின்றேன்;
புதுவுலகம் விரைவினில்நாம் காண வேண்டின்
பொலிவுபெறும் முழுமதியர் ஆட்சி வேண்டும்
இதுவுண்மை என நினைந்தேன்; களங்கம் உன்பால்
இருக்கின்ற தெனஒருவன் இயம்பினனே!
3

---

**பாடற் குறிப்பு:–** *இப்பாடல் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

## 7. படைத்தோன் வாழ்க!
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

**கற்பனை உலகம்**
பிருந்தா வனத்தின் பேரெழில் கண்டேன்
பிறந்தார் உறுபயன் பெற்றேன் அன்றே;
அப்பே ரெழில்நலம் அவனியில் காணத்
தப்பியோர் விழிப்பயன் தப்பியோர் ஆவர்;
எண்ண இயலா வண்ண மலர்கள்
கண்கவர் வனப்பொடு கற்பனை பெருக்கும்;
நிலமிசைப் படுபுல், நிமிர்தரு செடிகள்;
வலைநிகர் கொடிகள் வகைவகை யாகக்
கைபுனைந் தியற்றிய காட்சியே காட்சி!
இருவிழி எதுவரை எட்டுமோ அதுவரை
பரவிய எல்லை படைத்ததப் பூங்கா;
பசுமையும் தண்மையும் பாங்குடன் குழைத்துப்
பூசிய தென்னப் பொலிபூங் காமிசை
வீசிய விழியோர் வியப்புற் றாங்கே
இமையா நாட்டத் திமையோர் ஆவர்;
விண்ணுல குண்டென விளம்புவர் கண்டிலேன்
கண்ணெதிர் கண்டேன்அக் கற்பனை உலகை;

**நீரின் விந்தைகள்**
நீரால் விளைத்திடும் விந்தைகள் எத்தனை!
நேரிற் காணின் அல்லது நிலைமையைப்

பாரித் துரைக்கப் பற்றுமோ ஒருநா?
ஆயினும் ஒருசில அறைகுவன் கேண்மின்!
உரமிலா உள்ளத் தொருவன்மற் றாங்கே
மருவு மவர்தம் வயமே யாகி
இயங்குதல் உலகத் தியற்கை அதுபோல்
தனக்கென ஒருநிறம் இல்லாத் தண்ணீர்
மினுக்கிடும் பலநிற விளக்கொளி சார்தலால்
அதனதன் நிறமாய் அழகொளி காட்டிப்
புதுவிருந் தளிக்கும் போமவர் விழிக்கே!
நாடக அரங்கில் நாலுந் திரையெனப்
பாடொலி அருவிப் பாய்ச்ச லோவெனப்
பலவகை நிறநீர் பாங்குடன் இறங்கிச்
சலசல ஒலியுடன் ஓடும் ஒருபால்;
குற்றப் பட்டோர் கொடுஞ்சிறை யதனுள்
உற்றிடல் போல ஒருபால் அந்நீர்
தொட்டிச் சிறையுள் துளங்குதல் இன்றிக்
கட்டுப் பட்டுக் கிடப்பது கண்டேன்;

**ஊற்றுக் குழல்நீர்**

ஊற்றுக் குழல்நீர் காட்டும் வித்தை
வேற்றோ ரிடத்தும் கண்டே னல்லேன்;
விரிகுடை யோவென ஒருபாற் காணும்
வரிசிலை யோவென ஒருபால் வளையும்,
இனிமேல் தனிமை ஏலேன் என்றே
அணிமைத் தொட்டி யகத்துள் வீழ்ந்து
மாயும் ஒருபால், மற்றொரு பாங்கர்ப்
பிரிந்தவர் கூடும் பெற்றிமை போலப்
பொருந்தும் இருபுறத் திருந்து வருநீர்;
இருபுலப் பகைவர் எதிர்எதிர் நின்று
பொருது வீழும் பான்மையே போல
அணிஅணி யாக அவ்விடை மோதும்,
எண்பே ராயமும் ஐம்பெருங் குழுவும்
தன்புடை சூழத் தனிவீற் றிருக்கும்
மன்னவன் போல மற்றவை சூழ்தர
மதர்த்து நிற்கும் மற்றொன் றொருபால்,
நிரல்பட அரிவையர் நின்று நடம்புரி
செயலெனப் பெரியவும் சிறியவும் ஆகி
ஆடி அசைதரும் அழகினை ஒருபால்
நாடி விழியால் நலம்நுகர்ந் திருந்தேன்;

**அச்சமும் இன்பமும்**

நலத்தகு நண்பர் உளத்தெழும் விழைவால்
அளப்பரும் ஆழமும் அகலமும் உற்ற
குளத்தினில் இயந்திரத் தோணிகள் ஏறி
விரைந்தோம், நானோ வியர்வியர்த் திருந்தேன்;
இருந்தஎன் நண்பர் ஏளனம் செய்தனர்,
வீரம் பழித்தனர், விடுத்தேன் அச்சம்;
நீரில்அத் தோணி நீந்துங் காலை
உலகை மறந்தேன் உயர்விற் பறந்தேன்
அட்டா இன்பம்! அத்தனை இன்பம்
அஞ்சுதல் ஒழிந்தார் நெஞ்சினில் இன்பம்
விஞ்சுதல் உறுதிஇவ் விளக்கமும் பெற்றேன்;

**படைத்தவன் வாழ்க**

மீண்டும் திரும்பி மேடையில் நின்று
காண்டகும் அந்தக் காட்சியை நோக்கி
உடைத்தோ இவ்வெழிற் குவமை? இதனைப்
படைத்தோன் வாழி! படைத்தோன் வாழி!
என்றேன்; நண்பன் ''இறைவனோ'' என்றனன்;
அன்றே என்றேன்; ''அரசனோ'' என்றான்;
அறியா துரைத்தனை ஆருயிர் நண்பா!
உறுதி குலையா உழைப்பினை நல்கிக்
குருதியை நீராக் கொட்டிய ஏழை
பாரில்இப் பூங்கா படைத்துத் தந்தனன்
ஆரிதை உணர்வார்? அவனை வாழ்த்தினேன்;
இதன்நலம் அறியான் பிறர்நலம் பேணுவான்
இதமுடன் உழைக்குமவ் வேழையை வாழ்த்தினேன்;
வாழிய அவன்குலம் வாழிய நன்றே!

---

**பாடற் குறிப்பு:–** மைசூரிலுள்ள பிருந்தாவனத்தைக் கண்டு, மனங்குளிர்ந்து பாடியது..

## 8. தொழிலாளி

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

மூச்சடக்கிக் கடலகத்தே மூழ்கி நல்ல
முத்தெடுக்கும் தொழிலாளி வாழ்க்கை தன்னில்
மூச்சிருக்க வேண்டியநல் வசதி இல்லை.
முதலாளி பஞ்சணையில் கொஞ்சும் மஞ்சள்
பூச்சுடைய மங்கையரை அழகு செய்யப்
பூமிக்குள் அஞ்சாது நுழைந்து மின்னைப்
பாய்ச்சுகின்ற தங்கத்தைக் கொடுக்கின் றானே
பாவம்அவன் அங்கத்தில் ஒன்றும் இல்லை! 1

ஆலையிலே ஆடைகளை ஆக்கு கின்றான்
ஆனாலும் அன்னவனுக் காடை இல்லை
காலையிலே உழைக்கின்றான் விதைக்கின் றான்நெற்
களஞ்சியத்தை நிறைக்கின்றான் உடல்வ ருந்தும்
வேலையிலே குறைவில்லை பசியை நீக்க
வேண்டியநல் உணவெதுவும் இல்லை! இல்லை!
மாலையிலே உளம்நொந்து செல்லு கின்றான்
மறமிக்க தொழிலாளி நிலைமை நன்றோ? 2

ஆடையிலே அழுக்ககற்றித் தூய்மை ஆக்கி
அழகுசெய்து தருகின்றோன், பொலிவு குன்றத்
தாடையிலே வளருமதை வழித்தெ றிந்து
தளிர்க்கின்ற முடிவெட்டி அழகு செய்வோன்,
கோடையிலே வருந்தாமல் முள்ளால் கல்லால்
கொடுமையொன்றும் நேராமல் நடப்ப தற்குச்
சோடையின்றிச் செருப்பளிப்போன் இவர்க ளெல்லாம்
தொடக்கூடாச் சாதிஎன்றால் தொலைக வையம்! 3

வளமிக்க நாடென்பர் இந்த நாட்டில்
வாழஒரு வழியின்றி வறுமை தன்னால்
உளம்நொந்து கூலிகளாய்ச் செல்லு கின்றார்
ஒப்பற்ற என்னினத்தார்; வேற்று நாட்டார்
கிழங்கென்றும் கீரைஎன்றும் எண்ணி நம்மைக்
கீழாக்கி விட்டஇந்த நிலை யொழிக்கக்
களங்காண வேண்டாவோ வீரம் மிக்க
காளைகளே ஏனின்னும் பாமு றக்கம்? 4

## 9. கூண்டுக் கிளி

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நேரிசை ஆசிரியப்பா

கனிமரப் பூம்பொழில் களிப்புடன் சேர்ந்தே
இனிதென வதிந்தேன், இடரொரு சிறிதும்

உற்றே னல்லேன், உரிமை யாவும்
பெற்றே வாழ்ந்தேன் பெரும்பகை யின்றி,
எங்கோ பிறந்தான் எங்கோ வளர்ந்தான்
இங்கே வந்தான் என்னையும் கண்டான்
வலையினை விரித்தான் வளத்துடன் வாழ்ந்த
நிலையினை இழந்தேன், நீள்சிறைக் கூண்டுள்
அடைத்தான் என்னை அஞ்சிறை வெட்டி;
அடைத்தனன் ஆயினும் அருங்கனி தருவான்
பாலுங் கொணர்வான் பசியே இல்லை.
ஆலும் வேம்பும் ஆமோ அச்சுகம்?
அடிமை வாழ்வு கொடிது! கொடிது!
விடியா தோநான் விடுதலை பெறவே?
துடையா ரோஎன் துயரினை? எனவே
துடியாத் துடித்தேன் துவண்டதென் உள்ளம்,
வடியாக் கிளவி வழங்கும் சிறுவன்
படியாப் பருவம் பழுதிலா உள்ளம்
கொண்டவன் ஓர்நாள் அண்டையில் வந்து
விளையாட் டுணர்வால் விடுதலை தந்தான்;
தலைகாட் டாமல் தப்பி ஓடிட
முனைந்தேன் சிறகோ முறிந்தது கண்டேன்.
நினைந்தேன் நடந்தே நெடுங்கான் ஏக;
பிதுங்கும் பெருவிழி அச்சங் காட்டப்
பதுங்கி வந்தது பாழும் பூனை;
ஒதுங்கி நடப்பினும் உயிர்பெறல் அரிதென
மீண்டும் சென்று கூண்டுள் நுழைந்தேன்
மீளா அடிமை நேர்ந்தது மேலும்;
என்னிலை தானே இந்நாட் டவர்க்கும்!
நன்னிலை தந்தான் நலமுயர் காந்தி
விடுதலை என்றே வெளியில் வந்தனர்;
கெடுதலை உள்ளம் கிடைத்ததைச் சுருட்டும்
சுரண்டல் பூனை துரத்தல் காணீர்!
இருண்ட வாழ்வுதான் ஏகுவ தென்றோ?
பூனைகள் தொலையும் பொழுதுதான் என்றோ?
கொடுமை கொடுமை என்று
கூவிச் சலித்தது கூண்டுக் கிளியே!

## 10. விறகு வெட்டி

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

அறுசீர் விருத்தம்

மனிதரின் நிலைமை கண்டு
 மனத்தினில் கவலை கொண்டு
தனியிடம் சென்றேன் ஓர்நாள்;
 'தடியனே மூடா!' என்று
முனியனை அடித்துக் கையை
 முறுக்கியே இழுத்துச் சென்றார்,
'இனிஎனை அடிக்க வேண்டாம்
 இமைப்பினில் இறப்பேன் ஐயோ!' 1

என்றவன் குரலைக் கேட்டேன்
 இடிந்ததென் உள்ளம் ஆங்கே;
கொன்றிடும் கூட்டத் தோடும்
 கோட்டையுள் நுழைந்தேன்; நீதி
மன்றினில் தலைமை தாங்கும்
 மனிதரும் வினவ, ஒய்ந்து
குன்றிய உயிரைத் தாங்கும்
 கூலியும் வாய்தி றந்தான் 2

'இரண்டுநாள் உண்டே னில்லை,
 இருமலால் துடித்தாள் பெண்டு;
சுருண்டன பிள்ளை எல்லாம்
 சோற்றுநீர் இன்மை யாலே,
இரந்துயிர் வாழ்வ தற்கும்
 என்மனம் இடந்த ராமல்
விரைந்துநான் விறகு வெட்ட
 வெளிப்புறக் காட்டில் சென்றேன் 3

காய்ந்ததோர் மரத்தில் ஏறிக்
 கடிதினில் வெட்டும் போழ்து
தேய்ந்ததன் உள்ளம் நோவத்
 திட்டினார்; இறங்கி வந்தேன்;
ஓய்ந்ததன் உடலில் குச்சி
 ஒடிந்திட அடித்தார்; கீழே
சாய்ந்தபின் நடந்த தேதும்
 சற்றுமே அறியேன்' என்றான் 4

'மற்றவர் காட்டிற் சென்று
 மரத்தினை வெட்டி னேனென்
றுற்றதை உரைத்தாய்! சிறையில்
 ஒன்றரை மாதம் தங்கு!
மற்றது மறுத்தா யாகில்
 மரத்தினில் விறகு வெட்டி
விற்றதில் ஐந்து ரூபா
 வைத்திடு வெளியில் செல்வாய்!' 5

என்றனர் அறத்தைக் காப்போர்;
 இடிதலை வீழ்ந்த தென்ன
நின்றனன்; நிமிர்ந்து கண்ணில்
 நீரினைச் சொரிந்தான்; 'ஐயோ!'
என்றனன், 'ஏழை காசுக்
 கெவ்விடம் செல்வேன்; என்னைக்
கொன்றிடல் நன்றாம்; ஈசன்
 கொடுத்ததிவ் விதியோ?' என்றான் 6

விதிவிதி என்று மக்கள்
 வீணினில் மாய்ந்து, சூழ்ச்சிச்
சதியினில் சிக்கி அந்தோ!
 சாய்ந்திடும் நிலைமை கண்டும்
மதியொரு சிறிது மின்றி
 மாற்றிட மனமு மின்றி
வதிவது நன்றோ? நாட்டீர்!
 வளமிகக் காண்போம் வாரீர். 7

---

**பாடற் குறிப்பு:—** ஊர்ப்புறத்தே ஒருமரத்தில் விறகு வெட்டிக் கொண்டிருந்த ஒருவனை அடித்துத் துன்புறுத்திய கொடுமையைக் கண்டு மனம் நொந்து பாடிய பாடல்.

## 11. *குதிரை நினைத்தால்...?

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

கத்திரியால் அழகுசெய்த பிடர்நி மிர்த்துக்
 கடிவாளம் கவ்விச்செல் புரவி மீது
மெத்தையமைத் தோரிளைஞன் அமர்ந்தி ருந்தான்
 மெதுவாகச் செல்லமனம் ஒருப்ப டாமல்
வித்தைபயில் குதிரையென விரைய வேண்டி
 விரித்துவிட்டான் கைச்சவுக்கை; அடியும் பட்டுப்
பத்துமடங் கதிகரித்த வேகங் கொண்டு
 பறந்ததுவே அப்புரவி, செல்லுங் காலை 1

"தூக்குவது போதாதோ? இவனை நீண்ட
 தொலைவுள்ள ஊருக்குச் சுமந்து வந்தேன்
தாக்குகிறான் கைச்சவுக்கால் கெடுவான் என்ன,
 தருகின்ற உணவுக்கா இந்தத் தொல்லை?
போக்கற்ற உலகத்தில் குனிந்து தந்தால்
 பொல்லாத மனிதரவர் எல்லாம் செய்வர்;
காக்கின்ற உழைப்பாளி ஓடஓடக்

கணவான்கள் விரட்டுகிறார்'' என்ற எண்ணம் 2

உள்ளத்தை உறுத்தியதால் வேகங் குன்றி
ஊர்ந்துசெல, மேலமர்ந்த காளை நன்கு
பள்ளத்தை உண்டாக்கும் வண்ணம், காலைப்
பதித்துள்ள செருப்பாணி தாக்கச் செந்நீர்
வெள்ளத்தைப் பாய்ச்சியது புரவி மேனி;
விளையாட்டா அவனென்ணி விட்டான்; மேலும்
மெள்ளத்தான் செல்கிறதென் றெண்ணிச் சாட்டை
மேன்மேலும் சுழற்றிவிட்டான் விரைந்து செல்ல 3

வில்விட்ட அம்பெனவே விரைந்த தாங்கே
வெலவெலத்துப் போனான்அப் புரவி மேலோன்;
பல்விட்ட கடிவாளம் இறுகப் பற்றிப்
படுத்துக்கொண் டகம்நடுங்கி அவனி ருந்த
வெல்வெட்டு மெத்தையுடன் உருண்டு ருண்டு
வீழ்ந்திடவே உதறிற்று; நெறிக்கி டந்த
கல்வெட்டிச் சிதறுண்ட மண்டை செந்நீர்
கசிந்திடவே உலகிருந்து நீங்கி விட்டான் 4

பாட்டாளிக் கூட்டத்தைக் குதிரை யாக்கும்
பணக்காரர் வாழ்வுமிந்த நிலையே தானோ?
மாட்டோடு மனிதரையும் மதிக்கின் றார்கள்
மனம்நொந்து பொறுத்திருப்பர் அளவு மீறின்
காட்டாரோ தம்வலிமை? இங்கு வாழக்
கருதாரோ தொழிலாளர்? உரிமை கேட்க
மாட்டாரோ? அவரெல்லாம் உருத்தெ ழுந்தால்
மனம்புரவிச் செயல்தன்னைக் காட்டி டாதோ! 5

---

**பாடற் குறிப்பு:–** *இத்தலைப்பில் உள்ள பாடல்கள் சாகித்திய அகாதெமியால் இந்திய மொழிகள் அனைத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

## 12. உணர்வார் யாரோ?

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

உழைத்தேன் நன்றே; உணவே இல்லை;
திளைப்பான் ஒருவன் தீயன செய்தே;
என்னுடற் குருதி இறைத்து விளைந்த
பெரும்பயன் பெற்றே பெரியோன் ஆனான்;
அருமைத் தேனீ! அரிதின் ஓடிச்
சேர்த்தனை தேனை; சிதைத்த ஒருவன்
உண்டான் அந்தோ! உன்போல் நானும்
உள்ளேன்; இதனை உணர்வார் யாரோ?
ஒருநாள் இங்கே திருநாள் என்றார்
ஆண்டவ னுடனே ஐயரும் இருந்தார்
அலுக்கத் தூக்கி அயர்ந்தேன்; பின்னர்
சோறு கேட்டேன் "சோம்பல் பயலே!
திமிரா உனக்கு? திருட்டுத் தடியா!
பொறுடா என்றார் பூசுரர்; என்றன்
தோளை முறித்த தோடுடைச் செவியன்
அருகிற் சென்றே அப்பா! என்றேன்!
"விதிவிதி'' என்றான் குறைமதி யோனே.

## 13. துன்பமடா துன்பம்!

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

துன்பமடா துன்பம் – வறுமைத்
துன்பமடா துன்பம்

பசித்துயரால் சிறுமகவு பால்சுவைக்கப் பாலின்றிப்
பரிந்தன்னை முகம்நோக்கப் பாவையவள் நீர்ததும்பந
சித்துருகும் மனத்தோடு நயனத்தால் பேசுகின்றாள்
நானென்ன சொல்லிடுவேன்? மரமுண்டு கயிறுண்டு
(துன்)

எத்தனைநாள் பட்டினியால் இன்னலுற்று வாழ்ந்திடுவோம்
இன்னல்தரும் நோய்வந்தே இருவரையும் பற்றியது
பித்தனைப்போல் மருத்துவன்பால் சென்றுநிலை கூறியதும்
பணமிருந்தால் பேசென்றான் என்செய்வேன் பேருலகில்
(துன்)

மாள்வதற்கு விட்டாரா? மாட்டிவிட்டார் கைவிலங்கு
மனிதனுயிர் காப்பதற்கோர் வகையுண்டா? நலிவுதுடைத்(து)
ஆள்வதற்கும் கற்றாரா? அதுவுமில்லை! இந்நிலையில்
அறமெங்கே? வாழ்வெங்கே அன்பூறும் வழியெங்கே
(துன்)

## 14. பட்டண வாழ்வு

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

பட்டணத்தைப் பார்ப்பதற்கு நீண்ட நாளாப்
படிந்திருந்த ஆர்வந்தான் தூண்ட, ஓர்நாள்
துட்டெடுத்துப் புகைவண்டி ஏறிச் சென்றேன்
சொல்லரிய காட்சிஎலாம் கண்டேன் கண்டேன்;
விட்டெரிக்கும் விளக்குண்டு 'விர்'ரென் றோடும்
விசைவண்டி பலவுண்டு, கப்ப லோடு
கட்டுமரம் மிதந்தாடும் கடலும் உண்டு,
கரடிபுலி காட்டுகிற நிலையம் உண்டு, 1

மக்களுக்குச் சட்டத்தால் அறம்வ ழுங்கும்
மாமன்றம் உண்டு,கடற் கரையின் ஓரம்
எக்களித்துத் திரிகின்ற பெண்கள் பள்ளி
எழில்காட்டி நிற்பதுண்டு, உயர்நூல் சேர்ந்த
தக்கஒரு நூல்நிலைய இருப்பும் உண்டு,
தனலால்கள் குழுவுண்டு, எழில்சேர் மாதர்
தொக்கிருக்கும் மயிலாப்பூர் அல்லிக் கேணி
தொடர்ந்திருக்கும் தியாகநகர் அதுவுங் கண்டேன்
2

இன்னும்பல் காட்சிகளைக் கண்ட பின்னும்
இன்பத்தைக் காணவில்லை, எனது நெஞ்சு
துன்புற்றுத் துன்புற்றுத் துடிக்கு தந்தோ
தொழிலாளர் நிலைகண்டு; மூச்சு வாங்க
இன்னலுற்றுச் சுமைவண்டி 'ரிக்ஷா' வண்டி
இழுக்கின்ற விலங்குநிலை மாந்தர் கண்டேன்,
துன்னுமழை வெய்யிலிலும் வழியின் ஓரம்
துணையோடு வாழ்கின்ற மக்கள் கண்டேன் 3

கடலுக்குள் வலைவீசும் மக்கள் கூட்டம்
கரையோரம் வாழ்கின்றார்; காற்ற டித்தால்
தடதடவென் றோடிவிடும் அவர்கள் வீடு;
தவறாமல் தெருத்தோறும் கோவி லுண்டு;
மடமையொடு சாதிபல உண்டு; பிச்சை
வாழ்வினரும் மிகவுண்டு; கண்டி வற்றைத்
திடமிக்க என்னுள்ளம் நொந்து சிற்றூர்
திரும்பிவந்தேன்; சிறுமைஎலாம் அழிவ தென்றோ? 4

---

**பாடற் குறிப்பு:–** முதன் முதலாகச் சென்னைப் பட்டிணத்தைக் கண்டு பாடிய பாடல்.

## 15. பட்டிக்காட்டான்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

உழைப்பே என்னுயிர், களைப்பே யின்றி
உழுவேன், நடுவேன், உறுகளை எடுப்பேன்,
கண்ணெனக் காத்துக் கதிர்முற் றியபின்
அறுப்பேன், சுமப்பேன்; ஆண்டை வீட்டில்
நிறைப்பேன், மகிழ்வேன், நிலத்தவர் மகிழ்வார்;
இல்லம் செல்வேன் என்மனை யாட்டி
எலும்புடன் தோலென இருக்கும் பிள்ளையை
அடித்திடல் கண்டதும் அடித்ததேன்? என்பேன்;
''சோறு சோறெனச் சொல்லி அழுதால்
சோற்றுக் கெங்கே போவது? சொல்வீர்''
என்பாள்; வல்லிடி இதயம் பாயும்;
களஞ்சியம் நிறைத்தோம் கஞ்சி இல்லை!
காலம் வருமெனக் கலங்கி இருந்தேன்;
இவ்வகை வாழ்நாள் இயங்க, ஓர்நாள்
நோயுற் றுடலம் நொந்தேன்; பின்னர்த்
தொடர்ந்தது நோய்தான் தொல்லைகள் உற்றேன்;
உள்ளூர் மருத்துவர் உரைத்த மருந்துகள்
உண்டேன் பயனிலை; ஒருவர் வந்தார்
'நகரம் சென்றால் நன்மை பெறலாம்'
என்றனர் என்பால் இருப்பே இல்லை
உழன்றேன் உழன்றேன் உற்றார் ஒருவர்
பார்க்க வந்தார் 'பகவான் காப்பார்
திருப்பதி சென்று தீர்த்தம் ஆடி
முடிஎடுப் பேனென முடிவுசெய் தால்நோய்
விலகும்' என்று விளம்பினர்; கையில்
இல்லை யாயினும் என்னுயிர் வேட்கையால்
வேண்டிக் கொண்டேன் விரைந்தன சின்னாள்;
ஓய்ந்தது நோயும் உழைத்துழைத் தில்லாள்
ஊட்ட ஊட்ட உடலுரம் பெற்றேன்;
உற்றார் சொன்ன உரைதவ றாமல்
காளைகள் காட்டிக் கடன்பணம் பெற்றுத்
திருப்பதி சென்றேன் திருவருள் பெறவே;
அருச்சனை செய்யவும் முடிஎடுப் பதற்கும்
இரண்டு சீட்டுகள் ஈந்தனர்; அவற்றை
அன்பால் பணிவால் அருச்சகர்க் களித்தேன்;
இரண்டில் ஒன்றை என்கையிற் கொடுத்து
''முடிஎடுக்க அங்கே முதலிற் செல்வாய்''
என்றோர் நாவிதர் இருக்கும் இடத்தைச்
சுட்டிக் காட்டச் சுருக்கெனச் சொன்னேன்;
நாவிதர் எடுக்கவா நானிங்கு வந்தேன்?
உள்ளூர் நாவிதர் உண்டு பலபேர்,
அவரை ஒதுக்கி ஆண்டவன் தனக்கே
வைத்துளேன் முடியை, வம்புசெய் யாமல்
நீரே எடுத்தருள் புரிவதே நேர்மை
என்றேன் அருச்சகர் எரிந்து விழுந்தார்;
''அற்பனே! இவ்விடம் அருச்சனை மட்டும்
நடத்துவோம் நடந்திடு அங்கே'' என்றார்;
அருச்சனை மட்டும் ஆண்டவர் ஏற்பார்
முடிநீர் எடுத்தால் முகஞ்சுளிப் பாரோ?
என்றேன்; அங்கே இருந்த பட்டை
நாமம் போட்டவர் ''நாயே பேயே''
என்றெல்லாம் பேசி இடித்தார் அடித்தார்;
''ஐயா என்னை அடிக்க வேண்டாம்
உயர்ந்த சாதியை உவப்பார் கடவுள்,
நாவிதன் தாழ்ந்தவன் நயவார் அவனை
என்றதால் இவரை என்முடி எடுக்க
வேண்டினேன் தவறோ? விளம்புவீர்'' என்றேன்;
''பட்டிக் காட்டான் பட்டிக் காட்டான்''
என்றெனை இகழ்ந்தார் அங்கிருந் தோரோ.

## 16. புலியேறென எழுவாய்
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

பதினாறுசீர்ச் சந்த விருத்தம்

உழுவார்கரம் உயர்வாய்வர
உலகோர்முயல் திருநாள்
உனதாகிய திருநாடொரு
தமிழ்நாடென வருநாள்
குழுவார்கழை பிழிபாகுடன்
முறியாமுனை அரிசி
குழைவாயமு துணவாகிடக்
குலமாதர்கள் தருநாள் 1

எழுஞாயிறு புலர்காலையில்
எழில்வான்மிசை வருமே
இதுநாள்வரை துயராய்வரு
பனிநாள்இனி அறுமே
தொழுவாய்கதிர் தொழுவாய்கதிர்
சுடரால்நலந் தரலால்
சுடுவாய்பகை விடுவாய்மயல்
துணிவாயெழு தமிழா 2

புழுவாவுனை இகழ்வார்முனம்
புலியேறென எழுவாய்
பொதுவாழ்வினில் நிலையோடிரு
புதுவாழ்வினை அடைவாய்
தொழுதேவளர் உடல்வாழ்வது
தொலையாயெனில் உனையே
தொழுநோயொடு திரிவாரினும்
இகழ்வாரிதை நினைவாய் 3

மொழிவாழவும் இனம்வாழவும்
முயல்வாய்தமிழ் மகனே
முரணாதொரு முகமாயெழு
முடியாததும் உளதோ?
இழிவாகிய நிலைஓடிட
எடுவாள்பகை மலையோ?
எழுவாய்தலை நிமிர்வாய்உனை
எதிர்வாரினி இலையே. 4

## 17. புதருள் கனி
**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

**(இப்பாடல் உண்மைப் படப்பிடிப்பு)**

எண்சீரில் புதியவடிவம்

உருத்தெழுந்த மார்பகத்தாள்,
வில்லொடித்த புருவத்தாள்,
உள்ளத்தே தைத்தோடிப்
பாய்கின்ற வேல்விழியாள்,

கருத்தெழுந்த மேகத்தைப்
புறங்கண்ட சுரிகுழலாள்,
கன்னத்தில் அழகொளியாள்,
அன்னத்தின் எழில்நடையாள்,

சிரித்தெழுந்த செவ்விதழாள்,
இன்மொழியாள், அழகெல்லாம்
சேர்த்தெழுந்த உடலுடையாள்,
அவளைக்கண் டென்மனத்தை

மறுத்தெழுந்த ஆர்வத்தால்
யாரென்றேன் விதவைஎன்றாள்;

மனமுடைந்தேன் மதியிழந்தேன்
உன்மத்த நிலையடைந்தேன் 1

அச்சச்சோ! அவள்நுகர
முடியாத மலரானாள்!
அகங்கவரும் எழில்கொண்ட
சிலையானாள்! கோழைமன

அச்சத்தார் முட்புதராம்
அதனடுவே கனியானாள்!
ஆவலெலாம் பாழன்றோ!
இளம்பருவ எழில்நிறைந்த

பச்சைமயில் இவளன்றோ!
பாவையிவள் நாள்முழுதும்
பதியின்றித் துயருறவோ!
அறமிதுவோ! விதவை எனும்

கொச்சைமொழி இல்லாமல்
செய்திடுவேன் என்றுறுதி
கொண்டுன்றன் விருப்பம்யா
தெனவினவக், கோதையவள் 2

சிந்துகின்ற நீர்துடைத்து
"விருப்பந்தான் ஆனாலும்
சீறிடுவர் உறவினர்தாம்
சாதியினில் ஒதுக்கிடுவர்

நிந்தனைகள் பேசிடுவர்
நேர்நிற்க ஆற்றலிலேன்
நீறாகிப் போகாதோ
நேர்மையற்ற சட்டமெலாம்

நொந்துழலும் என்னிலையை
அறியாது பெற்றோரும்
நோயென்று செப்புகின்றார்
செய்வதெதும் நானறியேன்

இந்தநிலை உள்ளளவும்
எப்படிநான் ஒப்பிடுவேன்"
என்றுருகிச் சொல்லிவிட்டு
முகமாறிப் போய்விட்டாள். 3

## 18. புதுமைப்பெண்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

கலிவெண்பா

**தோழி :**
என்னடி உன்முகம் இப்படி வெண்மையதாய்ச்
சின்னத் தனமும் சிறிதுநிலை மாறியதேன்?

உண்ணா துறங்கா திருப்பதுமேன்? என்னுயிரே!
கண்ணே! இதனுண்மைக் காரணத்தைச் செப்பாயோ?

**தலைவி :**
நல்லபசி இல்லை நலமில்லை வேறொன்றும்
இல்லையடி என்அன்பே! இப்படிஏன் வாட்டுகிறாய்?

**தோழி :**
ஆமாம்நீ ஏனுரைப்பாய் அன்பில்லை என்னிடத்தே
ஏமாற்றுச் சொற்கள் இயம்புகிறாய் போய்வருவேன்

**தலைவி :**
நில்லடி என்தோழி நேர்ந்ததையே சொல்லுகிறேன்
பல்லை விரித்துப் பரிகாசம் பண்ணாதே

நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லைஎன்பார்
நெஞ்சகம் நீயன்றோ நேரிழையே! தாயறியாச்

சூலுண்டோ? உண்மையைநான் சொல்லி விடுகின்றேன்
மாலுண்டேன் காதல் மதுவால் மனந்தளர்ந்தேன்

**தோழி :**
காதல் மதுவா? கட்டழகன் யாரோடி?
ஈதென்ன விந்தை! எனக்குரைப்பாய் யாரென்று

**தலைவி :**
தன்மானங் கொண்டோர், தமிழ்வீரர், நாட்டுமக்கள்
நன்மானங் காக்க நயந்துதொண்டு செய்கின்றார்,

அண்ணா துரைபோல் அழகாகப் பேசுகின்றார்,
பெண்ணாப் பிறந்தார் பெறுமிழிவு நீக்குகின்றார்

அன்னார்பால் என்னெஞ்சம் ஆழ்ந்ததடி; சேர்ந்துறையும்
நன்னாள்தான் கூடுமட்டும் நல்லுறக்கம் வந்திடுமோ?

**தோழி :**
போதுமடி உன்காதல்! பொல்லாப்பு வந்துவிடும்;
தீதுபல நேருமடி; தேசத்தார் தூற்றிடுவார்;

அன்பால் மணப்பதற் கம்மான் மகனிருக்க
வன்பில் விரும்பேல் மறந்துவிடு மற்றவரை!

**தலைவி :**
காய்ச்சும் இரும்பு கவர்ந்திட்ட நீர்போல
ஆச்சுதடி என்மனம் அன்பர் அவரிடத்தே

நாட்டார்கள் காதல் நலமறியார் புல்லுரைக்கும்
வீட்டார்கள் சொல்கின்ற வெற்றுரைக்கும் நானஞ்சேன்

உள்ளம் விழைந்த ஒருவரை விட்டுவிட்டு
கள்ளச் செயல்புரியக் கற்பறியா நல்லகுலப்

பெண்ணென்றா எண்ணினைநீ? பேதைமையால் கூறுகிறாய்
கண்ணின் இமைபோலக் காப்பவனே! என்னுளத்தைத்

தொட்டார்க் குரியளாய்த் தோள்தோய்ந்து வாழலன்றிக்
கட்டாயக் கல்யாணங் கண்டிப்பாய் நான்வேண்டேன்

அஞ்சிஅஞ்சி வாழ்ந்த அரிவையர்கள் இந்நாளில்
மிஞ்சிவிட்ட செய்கையினை மேல்நடத்திக் காட்டுகிறேன்

என்றுரைத்துச் சின்னாளில் ஏறனைய காதலனை
மன்றலன்று கொண்டாள் மகிழ்ந்து.

## 19. கவிதைப் பெண்

**(நூல்:—முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

உணவில்லை உடையில்லை என்று வாட்டும்
ஓயாத கவலையில்லை; அந்த நாளில்
மணல்நின்று கடல்கண்டேன் வானில் நிற்கும்
மதிகண்டேன் மலர்கண்டேன் வயல்கள் கண்டேன்
தணல்கூரும் கதிர்கண்டேன் அங்கங் கெல்லாம்
தணியாத காதலுடன் கவிதை என்னும்
அணங்கிருந்து புன்னகைத்துக் கடைக்கண் ணோக்கால்

அருகழைப்பாள் பேசாமல் நானி ருப்பேன் 1

இதழ்விரித்துத் தென்றலெனப் பாட்டி சைப்பாள்
எழில்மயிலாய்த் தோகைவிரித் தாடி நிற்பாள்
விதவிதமாம் நிறங்கொண்ட துகிலு டுத்து
விளையாடிச் செவ்வானில் காட்சி நல்கப்
புதுமாலைப் பொழுதாகி நின்றி ருப்பாள்
பூமணத்தை வீசிடுவாள் மயங்கி ருட்டில்
மதிமுகத்தைக் காட்டிடுவாள் எனைம யக்கி
வந்தணைப்பாள் இன்பத்தைக் கண்டு ணர்ந்தேன் 2

உயிராகி உணர்வாகி என்ன கத்தே
ஊடாடிச் சொல்லரிய மகிழ்வ ளித்துச்
செயிரேதும் இல்லாத காதல் கொண்டு
சேர்ந்துறைந்தாள்; சின்னாளில் செம்பொற் றாலிக்
கயிறதுவால் பெண்ணொருத்தி மனைவி யானாள்
இல்லறத்துக் கடன்பலவும் முறையாப் பேணி
வயிறுநிறை செயலொன்றே தலையா எண்ணி
வாழ்ந்தேன்நான் ஆயினுமோர் சுவையே யில்லை 3

மனஞ்சலித்துக் கடற்கரையிற் சோர்ந்து நின்றேன்
மனங்கவர்ந்த கவிதைப்பெண் வந்து நின்றாள்;
எனைமயக்கி ஏகிவிட்ட எழில ணங்கே
என்துயரம் அறியாயோ? மற்றொ ருத்தி
தனைமணந்தேன் எனநினைந்தோ சென்று விட்டாய்?
தவிக்கின்றேன் உனைக்காண அருகில் வாவா!
எனைமறத்தல் சரியாமோ? முறையோ? என்றேன்
"என்னன்பா! உனைமறவேன் உண்மை சொல்வேன் 4

உன்மனைவி பணிவிடையில் உனக்குப் பாவை
உவந்தளிக்கும் இன்பமதில் மதலை நல்கும்
இன்னமுத மழலைதனில் விழியில் மெய்யில்
இற்கிழத்தி புலந்திருக்கும் விழியில் பேச்சில்
என்னையினிக் காண்பரிது; குடல்வ ளர்க்க
இரந்துண்போன் பொற்கரத்தில் உழைப்பால் ஓங்கும்
வன்புயத்தில் விதவையர்கண் சிந்தும் நீரில்
வாழ்கின்றேன் வாஅங்கே என்று சென்றாள் 5

## 20. இறப்பே வா!

**(நூல்:–முடியரசன் கவிதைகள்)**

எண்சீர் விருத்தம்

கனிந்தபழச் சுவைமொழியைக் கழறி நல்ல
களிப்பூட்டும் சிறுமகவு, தண்டெ டுத்துக்
குனிந்துநடை தளர்கின்ற மூத்தோர், வீரம்
கொண்டஇளங் காளையர்கள், உலக இன்பம்
முனிந்தவர்கள், பிணியுற்றோர், அரசர், ஏழை
முதலாக உள்ளோரைப் பரத்தை போல
மனமுவந்து மருவுகின்றாய் என்னு ரைக்கு
மறுப்புண்டோ இறப்பென்னும் எழில ணங்கே! 1

உன்னைக்கண் டஞ்சுகிறார் கோழை மாந்தர்
உவக்கின்றேன் உனைத்தழுவ வருக மாதே!
பொன்னைப்போல் புழுவைப்போல் வருத்துநோய் போல்
பொல்லாத பாம்பினைப்போல் வந்தால் ஏலேன்
தன்னைப்போல் மாந்தரெலாம் எண்ணச் செய்யும்
தனிப்புரட்சி யுருவில்வரின் அணைத்துக் கொள்வேன்
மின்னைப்போல் வருபவளே இதழ்தா ராயோ?
மிடிபட்ட என்னினத்தை வெறுத்து விட்டேன். 2

மக்கள்படும் இனனல்கண் டஞ்சி நீக்க
மனம்வைத்துப் பாடுபடும் தொண்டர் தம்மை
மிக்குவரு காதலினால் அணைத்துக் கொள்ள
மிகக்கொடிய துப்பாக்கிக் குண்டாய் நஞ்சாய்க்

கொக்கரித்து வருகின்றாய் அதனைக் கண்டு
கொடியவள்நீ என்கின்றார்; புரட்சி என்னும்
மக்களைநீ பெற்றெடுக்க மருவு கின்றாய்
ஆதலினால் மதிக்கின்றேன் உன்னை நன்றே 3

## 21. தமிழன் ஏக்கம்

**(நூல்:–காவியப் பாவை)**

தமிழன் என்றதுமே – மிகப்பரி
தாபம் பிறக்குதம்மா!
இமயம் வென்றானே – அவன் இன்று
ஏற்றங் குறைந்தானே! 1

சமையம் போகாதோ? – தொல்லைதரும்
சாதி தொலையாதோ?
சமத்துவ வாழ்வு – மீண்டும்
தளிர்த்துச் செழிக்காதோ? 2

உழுபவன் ஒருவன் – உடைதர
உழைப்பவன் ஒருவன்
பழமையின் பேரால் – பயன்பெறப்
பார்ப்பவன் வேற்றவனோ? 3

அழுதிடும் பாலன் – பசியால்
ஆவி தொலைந்தாலும்
கழுவுவர் பாலால் – அந்தோ
கல்லுருத் தேவுகளை 4

ஓட்டைக் குடிசையுள்ளே – உணவின்றி
ஒட்டி உலர்ந்த மகன்
வேட்டியும் இல்லாமல் – அவனுறும்
வேதனை தீராதே? 5

மாட்டினும் கீழாக – மனிதன்
மாண்டிடும் தீயநிலை
ஓட்டிட வேண்டுமம்மா – உண்மையை
ஓர்ந்திட வேண்டுமம்மா 6

## 22. புண்படுமா?

**(நூல்:–காவியப் பாவை)**

மாணவச் செல்வங்களே – நும்பால்
மாசுகள் நேர்கையிலே
நாணிடப் பேசிடுவான் – உங்கள்
நன்மையை நாடிடுவான் 1

குற்றம் புரிந்துவிடின் – உங்கள்
கொள்கை திரிந்துவிடின்
சற்றும் தயங்கலிலான் – வன்சொல்
சாற்றிட முன்வருவான் 2

புண்படும் உங்கள் மனம் – என்று
பூட்டிய வாயினனாய்க்
கண்படை கொள்ளுவனேல் – ஆசான்
கல்வியைக் காப்பவனோ? 3

நோயினைத் தீர்ப்பதற்கே – கற்ற
நூலின் மருத்துவன்பால்
போயுடல் காட்டிடுங்கால் – அப்பிணி
போக்குதற் கீவதென்ன? 4

வெல்லமும் சர்க்கரையும் – தந்தால்
வேதனை தீர்ந்திடுமோ?

சொல்லவுங் கைக்குதம்மா – அந்தச்
சூரண மாத்திரைகள்! 5

கையினிற் சீழிருந்தால் – நல்ல
கத்தியி னாலறுப்பான்
மெய்யினில் புண்படுமே – என்றால்
மேனி நலம்பெறுமோ? 6

சாதிச் சழக்குகளும் – பொய்மைச்
சாத்திரக் குப்பைகளும்
மோதிப் பகைக்குணத்தால் – சண்டை
மூண்டு மலிந்ததுவே! 7

மூட மதிச்செயலால் – மாந்தர்
மொய்ம்பு சிதைந்தனரே!
நாடு நலிந்ததுவே – மன்பதை
நாற்றம் மிகுந்ததுவே! 8

இச்சமு தாயமதை – மாற்றி
ஏற்றங் கொடுப்பதென்றால்
எச்செயல் ஏற்றதுவோ – நன்றே
எண்ணித் துணிந்திடுவீர்! 9

உற்ற புரட்சியினால் – அன்றி
ஓர்நலம் கூடிடுமோ?
மற்றவர் புண்படுவார் – என்றால்
மன்பதை சீர்பெறுமோ? 10

## 23. சொல்லும் செயலும்

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

சாதி தொலைந்திடச் சொலுந்தோழா – உன்பால்
சாற்றிடு வேனொரு மொழிகேளாய்
–சாதி

தொடுப்பு

வீதியில் எங்கணும் பேசி முழக்கினை
வீட்டினுள் வந்ததும் பூசி வளர்த்தனை
–சாதி

முடிப்பு

பேருக்கும் புகழுக்கும் பேசத் துடித்தாய்
பேதங்கள் கண்டுள்ளம் கூசி நடித்தாய்
ஊருக்கு மாத்திரம் கூறி முடித்தாய்
உள்ளத்தில் இல்லத்தில் எங்கே விடுத்தாய்
–சாதி

சாதியின் பேராலே வீதிகள் வைத்தாய்
சங்கங்கள் ஒவ்வொரு சாதிக்கும் வைத்தாய்
ஓதிடும் பள்ளியில் ஒட்டியே வைத்தாய்
உண்மையில் தேர்தலில் ஓங்கிட வைத்தாய்
–சாதி

## 24. ஏழை ஏது?

**(நூல்:–காவியப் பாவை)**

எடுப்பு

ஏழை ஏது செல்வர் ஏது – நாம்
இந்த உலகில் பிறக்கும் போது
–ஏழை

தொடுப்பு

நாளை மண்ணில் சாகும் போது
நாம் வகுத்த பேதம் ஏது
–ஏழை

முடிப்பு

இடையில் வந்த வேறு பாடே
இனியும் நின்றால் வளரும் கேடே
உடையும் உணவும் உடைமை யாவும்
உலக மாந்தர் பொதுமை யாகும்
–ஏழை

உயர்வும் தாழ்வும் பிறப்பில் ஏது
உலகில் அதனால் விளையும் தீது
துயரம் நீங்க மனிதர் யாரும்
தோழ ரானால் இன்பம் சேரும்
–ஏழை

## 25. பாரதியும் கவிதையும்

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

நேரிசை ஆசிரியப்பா

**அவனோர் பரிதி**

...........................................

கவிஎனப் பிறந்தவன் காணும் இயற்கைத்
தாயின் மடியில் தவழ்ந்து மகிழ்ந்தவன்
உலகப் பள்ளியில் ஓதித் தெளிந்தவன்
அஞ்சுதல் இல்லா ஆண்மையன் நறுமணப்
பாமலர் தொடுத்துப் பாடுவ தவன்தொழில்
கவிதை மணிப்பெயர்க் காதலி கொழுநன்
வையம் முழுதும் வணங்கிப் பணியப்
பாட்டுத் திறத்தால் பாலித் திருந்தோன்
கவிஞர் தம்முள் மணிமுடி யரசன்
புதுமை பூக்கும் பொதுமைப் பூங்கா
பழமையை ஒதுக்கிப் பாயும் ஆறு
செவியில் இன்னிசை சேர்க்கும் அருவி
எட்டய புரத்தில் எழுந்திடும் பரிதி
அவனே பாரதி வாழிய அவன்பேர்!

**எனக்குப் பாட்டன்**

இசைதரு கவிதை இயம்பிய பாரதி
பாட்டைப் பண்ணொடு கேட்ட பட்டிக்
காட்டான் பகர்ந்ததாக் கவிமணி இசைத்தபின்
யானுங் கூறல் நாணுந் தகைத்தே
இருப்பினும் உரிமை எனக்கும் உண்டு;
பாரதி தாசன் பரம்பரை வந்தோர்
பலர்பலர் ஆவர்; பாப்புனை தொழிலால்
யானுமம் மரபே யாவரும் அறிகுவர்;
பாரதி தாசனைத் தந்தோன் பாரதி
அத்தகு முறையால் அவன்என் பாட்டன்
பாட்டன் பாட்டினைப் பாடுவன் கேண்மோ!

**அவன்தரும் நன்னூல்**

*கதிரோன் மறைதல் காணா நாட்டிற்
காரிருள் நுழையக் கண்டதப் பாட்டு;
வீட்டில் நாட்டில் வெறுத்தோம் தமிழைக்
கண்ணயர்ந் திருந்தோம் கண்டனன் துடித்துப்
பாரெலாம் தமிழொலி பரப்புக என்றே
ஆணை தந்த(து) அவன்நூ லன்றோ?
நெஞ்சில் உரமிலார் நிமிர்ந்து நடந்திட
வஞ்சனை போக்கி வாழ்வு மலர்ந்திட
உடலும் உளமும் உரம்பெறப் பாடிச்
சோதிடம் இகழ்எனச் சொல்லும் அந்நூல்;

**சமநிலைப் பாடல்**
ஏழை அடிமை சாதியில் இழிந்தோர்
இல்லை! எவரும் ஒருநிகர் எனவே
சாற்றி முழங்கும் சமநிலைப் பாடல்

**கண்ணீர்த் துளிகள்**
குளத்தில் மரத்தில் குடிகொளும் பேயென
உளத்தில் நடுக்குறும் உரமிலார் அதற்கு
மந்திரம் சூனியம் யந்திரம் என்பார்
அந்தியில் பகலில் அஞ்சியே சாவார்
சிப்பாய் தலையில் சிவப்பைக் காணின்
அப்பா என்றே அப்பால் ஒளிவார்
கஞ்சி யில்லாக் காரணம் ஓரார்
பஞ்சம் பஞ்சமெனப் பரிதவித் திருப்பார்
நிலையினைக் கண்டு நெஞ்சு பொறாஅது
கதறிச் சிந்திய கண்ணீர்த் துளிகள்
பாரதி தந்த பாடல்கள் ஆகும்;

**வழக்கிடும் மன்றம்**
கற்பெனப் படுவது கன்னியர் தமக்கே
வற்புறுத் துவதை ஒப்புதல் செய்யோம்
ஆடவர் தமக்கும் அதனை வைப்போம்
ஏடுகள் செய்வோம் இளைப்பிலை உமக்கு
மாடுகள் அல்லம் மாதர்கள் நாங்கள்
சட்டம் செய்வோம் பட்டம் ஆள்வோம்
கட்டினைத் தகர்ப்போம் எனக்கனல் கக்கி
மங்கையர் வழக்கிடும் மன்றமும் ஆகும்;

**மறைநூல்**
கூடும் பொருளின் கூட்டம் தெய்வம்
விண்ணும் மண்ணும் வெயிலும் நிழலும்
அறிவும் உயிரும் அனைத்தும் அஃதே
எழுதுகோல் தெய்வமென் எழுத்துந் தெய்வம்
குழந்தையுங் கூளமுந் தெய்வ மென்றே
கடவுட் கொள்கை கழறும் மறைநூல்;

**புரட்சிச் சின்னம்**
சத்திரம் சாவடி தண்ணீர்ப் பந்தர்
வைத்தன போதும்! வாழ்வில் ஒளிதர
ஏழை மாந்தருக் கெழுத்தறி வித்து
வீடுகள் தோறும் கலைவிளக் கேற்றுக
வீதிகள் எங்கணும் வேண்டுக பள்ளி
கல்வி இலாததோர் ஊரினைக் காணின்
ஒளிநெருப் புண்ண ஊட்டுக என்று
பொங்கி எழுந்த புரட்சிச் சின்னம்;

**விடுதலை முரசம்**
பறையர் குறவர் பரவர் மறவர்
திறமை மிகுத்திடும் தீதறு தொழிலைப்
புரிந்தன ராகிப் புகழ்தரு கல்வி
அறிவால் உயர்ந்திட அகிலம் எல்லாம்
வீறிட் டெழுந்த விடுதலை முரசம்;

**போர்ப்படை வரிசை**
வேதனை தந்திட வேற்படை வரினும்
தலையில் வானம் தகர்ந்து வீழினும்
அச்சம் இல்லை அச்சம் இல்லைஎன்
றார்த்தெழுங் கவிதை போர்ப்படை வரிசை;

**புதுமைக் கருவூலம்**
செத்தபின் செல்லும் உலகம் உள்ளனல்
பித்துரை பேயுரைஎன் றூதிய சங்கம்;
சுதந்திர தாகம் தணிக்கும் சுனைநீர்;
அடிமையில் மோகம் அழிக்கும் சுடரொளி;
தாய்கை விலங்குகள் தகர்க்கும் சிற்றுளி
இன்னல்கள் தீர்க்கும் இனியநன் மருந்து;
ஒருவற் குணவிலை எனும்உரை கூறின்
உலகை அழிப்போம் எனவெழும் அணுவெடி;
சாதி மதங்களைச் சாய்த்திடும் கொடுவாள்;

**அறிவுரை தருநூல்**
கற்றோர் மற்றோர் கற்பதற் கெளியது;
தேன்படு சுளைஎனத் தித்தித் திருப்பது;
தாய்மொழி மறந்து தாழ்வினில் விழுந்து
தமிழர் எனும்பெயர் தாங்கிடும் அன்பர்
ஆணவம் அடங்க அறிவுரை புகல்வது;

**என்னால் ஒல்லுமோ?**
“திங்களைக் கண்ணிலான் சிறப்புறுத் தல்போல்
பாரதிப் புலவனைப் பகர்வன்” என்று
பாரதி தாசன் பாடின ராயின்
எளியேன் என்னால் இயம்பிடல் ஒல்லுமோ?

**அவனும் நாமும்**
வாழத் தமிழ்மொழி வழிகள் காட்டினன்
நீளத் திரிந்து நெறிதடு மாறிக்
கண்குரு டாகிக் காலங் கழித்தோம்
நாட்டுணர் வூட்டும் பாட்டுகள் சொன்னான்
கேட்டில செவிகள் கிடந்தனம் செவிடாய்
இசைத்தமிழ் பாடினான் இனித்தது தெரிந்தும்
வசைக்கிலக் காகித் தமிழிசை மறந்து
வாய்திற வாமல் ஊமைய ராகி
வாழ்ந்தோம், மங்கையர் வாழ்வினிற் புதுமை
மலர்ந்திடக் காணோம், மதவெறி கொண்டோம்,
பழமைச் சேற்றில் படிந்தோம், மூடச்
செயல்கள் பலவும் சேர்த்தோம் அந்தோ?
ஒற்றுமை விடுத்தோம், கற்றவை மறந்தோம்,
செற்றிடு விலங்குச் செயல்கள் மிகுத்தோம்,
அவன்மொழி மறந்தோம், ஆர்ப்பரித் திருந்தோம்,
மண்டபங் கண்டோம், மாலைகள் சூட்டினோம்,
கவிதைத் தொகுப்பெலாம் கண்கவர் முறையில்
அச்சில் வெளியிட் டகமிக மகிழ்ந்தோம்;

**கயமை வேண்டா**
ஐயகோ பற்பல பாடல்கள் காணோம்
சிதைந்தன சிற்சில, சீரில சிற்சில,
கவிதையை மறைத்தோம், கவிஞனைக் குறைத்தோம்,
பாரதி முகத்தில் படரும் மீசையை
நறுக்குந் தொழிலில் நாம்புகல் நன்றோ?
கத்திரி வேலை காட்டுதல் தீமை;
உலகம் பழிக்கும்; ஓங்குயர் கவிஞன்
கண்ணைக் குத்துங் கயமை வேண்டா

**வாழிய உலகு**
அவனை உணர்வோம் அவன்வழி நடப்போம்
நாடும் மொழியும் நலம்பெறச் செய்வோம்
வாழிய பாரதி! வாழிய தமிழ்மொழி!
வாழிய தமிழினம் வாழிய!
வாழிய தமிழகம் வாழிய உலகே!

---

**பாடற் குறிப்பு:–**
24–9–1955 அன்று காரைக்குடி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற பாரதி விழாக் கவியரங்கில் பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்:–** *கதிரோன் மறைதல் காணா நாட்டிற், காரிருள் நுழையக் கண்டது அப்பாட்டு – என்பது, ஆங்கிலப் பேரரசில் கதிரவன் மறைவதில்லை என்று சொல்லி வந்ததையும் நம் நாட்டை விட்டு ஆங்கிலேயரை அகற்றிவிட்ட மையால் அவ்வாட்சியில் கதிரவன் மறைதல் கண்டமையையும் குறிக்கிறது.

## 26. எண்ணம்

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

**{'தமிழியம்'என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 18 எண்சீர் விருத்தங்களிலிருந்து ,4 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன}**

என்னாட்டிற் பிறர்க்கடிமை செய்யேன், ஏய்ப்போர்க்
கிடமில்லை, செல்வத்தைக் கொள்ளை கொண்டு
தின்பார்க்கும் இடமீயேன் என்றெ ழுந்தார்,
திமிர்அரசு கொடுஞ்சிறைக்குள் அடைத்தும் அஞ்சார்,
பின்னீர்க்கும் தீண்டாமை ஒழிக என்றார்,
பிளவுதரும் மதவெறியை ஒழிக்கக் காந்தி
தன்னாட்டு மதவெறியன் குண்டு தாங்கிச்
சாய்ந்ததொரு செயற்கரிய தியாக எண்ணம் 1

*****தென்னாட்டைத் [1]தொன்றுமுதிர் காலங் கண்ட
தேன்மொழியை அவ்வினத்தை இழித்துப் பேசின்
[2]வெங்காட்டச் செய்திடுவேன் எனச்சி னந்து
[3]விறல்மிகுக்கும் செயல்செய்தார், சிறையும் சென்றார்
இந்நாட்டிற் சாதிமுறை ஒழிக என்றார்,
இகழ்வுரையும் கல்லடியும் பெற்றாரேனும்
முன்னோக்கிச் செல்கின்றார், உரமே மிக்கார்,
மூடமதி இருள்[4]செகுக்குங் கதிரே போல்வார்.
2

*****உடல்பழுத்தும் நரைமுதிர்ந்து நடந்து செல்ல
ஊற்றுக்கோல் துணைகொண்டும் தளரா நெஞ்சர்,
மடம்படுத்த பழமைஎலாம் வேர றுந்து
மடமடெனச் சாய்ந்தொழியத் தமிழர் வாழும்
இடமெல்லாம் புயல்வீசப் புரட்சி செய்தார்,
இளைஞர்படை அறிஞர்படை பெருகக் கண்டார்,
திடங்கொண்ட நம்பெரியார் அரிய செய்தார்,
திருவிடத்தின் மன்னரெனும் உரிமை எண்ணம்;
3

அரசிருக்கை தமிழ்மொழிக்கே நல்க வேண்டும்
ஆள்வோரும் இதையுணர வேண்டும் ஈது
தரிசுநிலம் அன்றெமக்கும் உணர்ச்சி யுண்டு
தமிழ்மொழிக்கே உயிரீயும் இளைஞர் உண்டு
பரவிவரும் தென்றலென இனிது சொல்வோம்
படியாமற் புறக்கணித்தால் வெகுள்வோம் போரின்
முரசொலியே கேட்குமென உரைப்ப தெல்லாம்
முடியரசர் வளர்த்ததமிழ் வாழும் எண்ணம்.
4

---

**பாடற் குறிப்பு:–** **இவ்விரு பாடல்களும் தந்தை பெரியாரைக் குறிக்கின்றன.

**அருஞ்சொற் பொருள்–**
1. தொன்றுமுதிர் – பழமை மிகுந்த. 2. வெங்காட்ட – புறமுதுகிட.
3. விறல்மிகுக்கும் – வலிமை மிகுந்த. 4. செகுக்கும் – அழிக்கும்.

## 27. உணவு

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

கலிவெண்பா

உணவுதனைப் பற்றி உயர்கவிதை யாக்கக்
கனவுலகிற் சென்றேன்: கடும்பசியோ என்வயிற்றில்

ஆடித் திரிந்துழல ஐயையோ என்புலமை
ஓடித் தறிகெட் டொருசொல் வரக்காணேன்:

பாழ்பசி வந்துவிடின் பத்தும் பறந்துபோம்
சூழ்நிலையை இன்றுணர்ந்தேன்: தூய மனத்தெளிவும்

பொங்கும் கவியுணர்வும் பூரிக்கும் நன்மகிழ்வும்
தங்குமோ இவ்வுலகில் சாரும் உணவின்றேல்?

அன்பேது? நெஞ்சில் நிறைவே(து)? அறிவமைதி
என்பதுதான் ஏதேது? வாழ்க்கை வளமெய்த

உண்டியொன்றே வேண்டுவ(து): உண்மையீ தென்பதனைக்
கண்டுணர்ந்தேன் ஆதலினால் கால்வயிறே னும்நிரப்பிச்

செய்யுள் புனைவமெனச் சிந்தித்துச் சேயிழாய்!
உய்யும் வகையுண்டோ உண்டி சிறிதுண்டோ?

என்றேன்; செவியேற்ற ஏந்திழையாள் ஓடிவந்து
"சென்ற முதல்நாளிற் செய்தபடி செய்தேன்"

எனவுரைத்தாள், பொங்கலோ? என்றெழுந்தேன்; "இல்லை
மனவருத்தம் பொங்கலலால் மற்றில்லை பக்கத்துப்

பெண்ணொருத்தி நெஞ்சிரங்கிப் பேருதவி செய்தமையால்
உண்ண வழியுண்(டு) ஒருநா ழிகைபொறுப்பீர்!

ஆக்கிப் படைக்கின்றேன் அத்தான்" என; அவளை
நோக்கிமுகம் தாழ்த்திப்பின் நூலெடுத்தேன் பாப்புனைய;

சித்தம் கலங்கியதால் சீர்தளைகள் மாய்ந்தனவே
எத்துயரம் வந்தாலும் எல்லை கடந்தறியேன்

பாவை நிறுத்திவிட்டேன்; பையன் சிறுவனைஎன்
பாவை அடிக்கப் பதறுவதைக் கேட்டெழுந்(து)

ஏனடித்தாய்? என்றேன்; "திருடியதால்" என்றவுடன்
நான்துடித்து நாமடித்துச் செய்தனையோ? என்றதட்ட,

"ஆமாம், பசியப்பா அன்னம் திருடிவிட்டேன்
தீமை இனிச்செய்யேன் சீற்றம் தவிர்"கென்றான்;

வாயடைத்துப் போயினேன்; வாழ்வில் உணவின்றேல்
தீயனதாம் பல்கும், திருட்டுத் தொழில்பெருகும்

என்றுணர்ந்து மன்னித் திளையவனை விட்டுவிட்டேன்;
முன்றில்முன் என்சிறுவர் மோதி அடிதடிகள்

செய்திருந்தார்; சீறிச் சினந்துரைத்தேன்; ஓர்சிறுவன்
மெய்யுரைத்தான்; "என்னின் மிகுபண்டம் அண்ணனுக்(கு)

அன்னை கொடுத்தாள், அதனால் பிணக்குற்றோம்
என்னை அடிக்காதீர்!" என்றுரைத் தோடிவிட்டான்;

ஓஓ! அதுசரியே, ஓரிடத்தில் உண்டிமிகின்
ஓவாப் பகைமூளும், ஓநாய்ச் செயல்விஞ்சும்,

பாரிற் சமமாகப் [1]பாத்தூண் கொடுத்துவிடின்
போரில் இறங்குகின்ற புன்மைகள்தாம் உண்டோ?

வயிற்றுக் கவலையின்றேல் வாழ்க்கைவளம் எய்தும்
[2]அயிர்ப்பில்லை; "உண்டிமுதற் றேஉணவின் பிண்ட"
மெனச்

சாத்தன் பகர்ந்ததற்பின் சான்றின்னும் வேண்டுவதோ?
ஏத்துங் கலையுணர்(வு) எங்கே உணவின்றேல்?

செய்யுளெழ வில்லை; செயலின்றி நானிருந்தேன்;
பையவந் தென்துணைவி "பூசைப் பணியாற்ற

எல்லாம் அமைத்தேன் எழுக''வெனச் சொல்லியதும்
நல்லாய்! பசியால் நலிவெய்தும் போது

கடவுள் உணர்வகத்தில் காணல்எளி தாமோ?
மடமை தொலைத்துயர்த்தும் மாண்புள்ள கல்வி

பயில்என்றால் பையன் பசிஎன்று தேம்பி
அயர்கின்றான் ஆதலினால் கல்வி அறிவேது?

தூய அறமேது தொல்லை பெருகலன்றி?
ஆய கலையே(து) அறியாமை சூழலன்றி?

நாட்டிற் பசியிருந்தால் நல்லனவே தோன்றாஎன்
றீட்டி உணவூட்டல் ஏற்ற அறமென்று

வாழ்வுதனை அப்பணிக்கே வைத்தமணி மேகலைசொல்
நாளும் நினைவிருத்தி நாம்வாழ வேண்டும்;

இரந்துமுயிர் வாழும் இழிநிலையை நீக்கப்
பரந்துதொண்டு செய்வதற்குப் பக்குவமும் வேண்டும்;

அறிவு வளர்ந்தால் அடிமைமனம் மாயும்;
அறிவு வளரஎனில் அப்பசியை மாய்க்கத்

திறம்வேண்டும்; ஏர்த்தொழிலைத் தேய்க்காமல் காக்கும்
உரம்வேண்டும்; அத்தொழிலோர் உள்ளத்தில் இன்பொன்றே

நிற்கச் செயல்வேண்டும்! நேரிழையே என்றுரைத்தேன்;
"நிற்கட்டும் சொற்பொழிவு! நேற்றுரைத்த சொல்லுக்கு

மாற்றம் உரைக்கின்றீர் [3]மாண்டநல்ல சங்கத்தார்
சோற்றுக் கவலையினால் சொல்லியநற் பாட்டுகள்

நன்றுநன் றென்றீரே நானெதைத்தான் நம்புவது?''
நன்றுரைத்தாள்; பேதாய்! எடுத்துரைப்பேன்; சோறின்றிப்

பாடிய பாட்டெல்லாம் கோடிபெறும் பான்மையவேல்
வாடி வதங்காத வாழ்வவர்கள் பெற்றிருந்தால்

அப்பப்பா! நூற்செல்வம் ஆயிரம் ஆயிரமாச்
செப்பிக் குவித்திருக்க மாட்டாரோ? தீப்பசியால்

பாட்டுவரும் என்னுமுரை பாழாக வேண்டுமிங்கே
நாட்டிற்பா வல்லார் நலிவெய்தக் கண்டிருந்தும்

பாரா தவர்போலப் பாசாங்கு செய்துவிட்(டு)
ஆரா வறுமையில் ஆழ்த்துகிறார் அந்தோ!

ஒருவன் பசியால் உலகுக்கே தீமை
வருமென்றால் அவ்வுணவு வாழ்வுக்கே அச்சன்றோ?

வாழ்க்கை வளமுறநாம் வேண்டின் உணவொன்றே
ஆக்கும் பொருளென் றறிந்ததனைக் காத்தோம்பிப்

பாரதனில் யார்க்கும் பகிர்ந்துண்டு வாழ்வதற்கே
ஒருறுதி கொள்வோம் உவந்து.

---

**பாடற் குறிப்பு:–** 2–3–1956 அன்று திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில், 'வாழ்க்கை வளமுற – உணவு' என்ற தலைப்பில், பாடப் பெற்றது.

**அருஞ்சொற் பொருள்–:**
1. பாத்தூண் கொடுத்து விடின் – பகுத்து உணவு கொடுத்து விட்டால். 2. அயிர்ப்பு – ஐயம். 3. மாண்ட– மாட்சிமைப்பட்ட.

## 28. பாரதி – வீரன்
**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

.................................

பாரதியின் புகழ்பாட விழைந்து வந்த
பாவலர்காள்! அவையோரே! வணக்கம்; என்னை
வீரன்புகழ் பாடென்று விதித்து விட்டார்
வீரத்தை மீசைதனிற் கண்டார் போலும் 1

பாரதியின் தாசனுக்குப் 'பொன்னி' கண்ட
பரம்பரையில் வந்தமையால் வீரம் என்பால்
சேருமெனக் கருதினரோ? யாது சொல்வேன்!
செந்தமிழில் தாய்நாட்டில் பற்று மிக்கோர்
ஆருமுரம் மிகப்பெற்று வீர ராவர்;
அப்பற்றும் கவிநெஞ்சும் வாய்க்கப் பெற்ற
பாரதியை வீரன்தான் என்று கூறல்
பசுவின்பால் வெண்ணிறந்தான் என்றல் போலாம் 2

**யார் கவிஞன்?**
காசுக்குப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
கைம்மாறு விழைந்துபுகழ் பெறுதல் வேண்டி
மாசற்ற கொள்கைக்கு மாறாய் நெஞ்சை
மறைத்துவிட்டுப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
தேசத்தைத் தன்னினத்தைத் தாழ்த்தி விட்டுத்
தேட்டையிடப் பாடுபவன் கவிஞன் அல்லன்;
மீசைக்கும் கூழுக்கும் ஆசைப் பட்டு
மேல்விழுந்து பாடுபவன் கவிஞன் அல்லன். 3

ஆட்சிக்கும் அஞ்சாமல், யாவ ரேனும்
ஆள்கஎனத் துஞ்சாமல், தனது நாட்டின்
மீட்சிக்குப் பாடுபவன் கவிஞன் ஆவன்;
மேலோங்கு கொடுமைகளைக் காணும்போது
காட்சிக்குப் புலியாகிக் கொடுமை மாளக்
கவிதைகளைப் பாய்ச்சுபவன் கவிஞன் ஆவன்;
தாழ்ச்சிசொலும் அடிமையலன் மக்கட் கெல்லாம்
தலைவனெனப் பாடுபவன் கவிஞன், வீரன். 4

**முடியரசன்**
படைவலியால் நிலவுலகை ஆள்வர் மன்னர்;
பாவலனாம் பாரதியோ உணர்ச்சி யூட்டும்
[1]தொடைவலியால் வையத்தை ஆண்டு கொண்டு
தொழுதேத்தும் முடியரசன் ஆனான் கண்டீர்
நடையழகு விளங்குகவி யரசன் பாட்டு
நாடாண்ட பேரரசை நடுங்க வைத்த
படைவரிசை; அப்படையால் உரிமை வேட்கை
பாருக்கு நல்கியவன் வீரன் அன்றோ? 5

**பாட்டு மறவன்**
இருளடைந்த கண்களுக்கும் ஒளியை யூட்டி
இடிகின்ற நெஞ்சத்தில் உறுதி ஏற்றி
மருளடைந்த மதியினர்க்குத் தெளிவு கூட்டி
[2]மடிபடிந்த தேகத்தில் வீரம் மூட்டிச்
சுருள்நரம்பில் முறுக்கேற்றிக் குருதி தன்னில்
சூடேற்றித் தோளுக்கு வன்மை ஏற்றி
அருள்கின்ற பாடலெலாம் ஆக்கித் தந்தோன்
'ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு' மறவன் அன்றோ? 6

**மன்னர் கோலம்**
எழில்முகத்தில் சுருள்மீசை வீரங் காட்டும்;
இருவிழிகள் கனல்கக்கி ஏற்றங் காட்டும்;
தொழில்கவிதை யானாலும் மக்கட் குற்ற

துயர்நீக்கும் செங்கோலாய்க் கைக்கோல் காட்டும்;
விழியுயர்த்த இருபுருவம் வில்லாய்த் தோன்றும்;
வெண்மைதரு தலைப்பாகை மகுடங் காட்டும்;
பழிதவிர்த்த பாடலெலாம் படைகள் காட்டும்;
பகைநடுக்கும் பேச்செல்லாம் முரசங் காட்டும்;
7

**அவன் ஆணை**
வலியற்ற தோளுடைய மாந்தர் தம்மை
வகைகெட்டுக் கிலிபிடித்த நெஞ்சர் தம்மை
நலிவுற்றுத் துயர்மிஞ்சச் சாதி நூறு
நவில்கின்ற கொடுமனத்துச் சழக்கர் தம்மைப்
பொலிவுற்ற வீட்டுமொழி கல்லார் தம்மைப்
பொய்ம்மொழிகள் உரைப்பவரைப் போபோ என்று
புலியேற்றைப் போல்மொழிந்து வீரங் காட்டிப்
புத்துலகை வாவாஎன் றழைக்கும் வேந்தன்
8

**படைத்தலைவன்**
வணிகத்தின் பெயராலே உள்நு ழைந்து
வளஞ்சுரண்டி வாழ்வுயர்ந்து மக்கள் தம்மைப்
பணிவித்து நயவஞ்சர் துணையால் நாட்டைப்
பாழ்படுத்திப் பக்குவமா அடிமை யாக்கித்
துணிவுளத்தால் ஆண்டிருந்த வெள்ளை ஆட்சி
தூள்தூளாய்ப் போவதற்குத் தமிழர் நாட்டில்
அணிவகுத்த வீரர்தமை ஆக்கித் தந்த
ஆண்மகன்யார்? பாரதிதான் வீரன் அன்றோ?
9

**வஞ்சினம்**
''மிகவிரைவில் தமிழின்ஒளி உலகம் எங்கும்
மேலோங்கும்; இலையேல்என் பெயரை மாற்றி
இகழுங்கள்'' எனக்கன்று சூளு ரைத்தான்;
எவர்மொழிக்கும் தலைவணங்கும் நம்மை நோக்கிப்
''புகழ்மிக்க தமிழ்மொழியை உலகமெல்லாம்,
புகுகின்ற தெருவெல்லாம் முழங்கச் செய்வீர்!
வகைகெட்டுப் போகாதீர்!'' என்று ரைத்து
வாழ்வுதந்த வீரனுக்கு வணக்கம் செய்வோம்
10

''பொய்மிகுந்து துயர்செய்யும் கலியைக் கொன்று
பூவுலகில் கிருதயுகம் கொணர்வேன்'' என்ற
மெய்மிகுந்த பேராற்றல் கொண்ட வீரன்;
மிகைசெய்யும் பழமையினைச் சாடி, மக்கள்
உய்வழியைத் தருவீரன்; ''ஒருவன் உண்ண
உணவின்றேல் உலகத்தை அழிப்போம்'' என்று
கைவலிமை காட்டியவன் பாடல் எல்லாம்
காட்டுகிற வீரத்தைக் காட்டப் போமோ?
11

காலனெனப் பேர்சொன்னால் போதும் நம்மோர்
கால்நடுங்கும் கைநடுங்கும் துடிப்ப டங்கும்
மேலனைத்தும் வியர்வரும்பும்; மனிதன் பண்பாம்;
வீரமிகும் நெஞ்சுடையான் அஞ்சான்; கூற்றைக்
காலனெனும் பேரானைக் கூவி, உன்னைப்
புல்லெனவே கருதுகின்றேன் வாடா என்றன்
காலருகே மிதிக்கின்றேன்'' என்று ரைத்த
கவிவீரம் நினைப்போர்க்கு வீரம் ஊட்டும்
12

**அச்சமிலான்**
பாண்டவரில் மூத்தவனாம் தருமன் தன்னைப்
பண்புடையான் அறமுடையான் என்று சொல்லி
ஆண்டவனாப் போற்றுகின்றார்; அவனி ழைத்த
பெரும்பிழையை ஆர்சொல்வார்? அஞ்சு கின்றார்;
''தீண்டரிய சூதாடிப் பணயம் என்று
தேயத்தை வைத்திழந்தான்; சீசீ நாட்டை
ஆண்டஇவன் சிறியர்செயல் செய்தான்'' என்றே
அரசுமுறை பிழைத்தமையை வீரன் சொன்னான்
13

**சாதிப் பூசல்**
சாதியினால் தாழ்வுயர்வு பேசிப் பேசிச்
சாத்திரத்தை வேதத்தைச் சான்று காட்டிப்
பாதியில்நாம் படுகுழியில் வீழ்ந்து விட்டோம்;
பறையனென்றும் குறவனென்றும் பார்ப்பான் என்றும்
ஆதியிலே இல்லாத பழக்கந் தன்னை
அணுகவிட்டோம்; அடிமையுற்றோம்; மிடிமைப் பட்டோம்;
ஆதலினால் சாதியினை ஒழிக்க வேண்டி
'ஆடுவமே' எனும்பாடல் பாடித் தந்தான் 14

**தோற்றுவிட்டான்!**
பொல்லாத கொடுமைகளை விளைத்து நிற்கும்
பொய்ம்மைகளை அழித்தொழிக்கும் சாதிப் போரில்
எல்லாரும் ஓர்குலமாய் வாழ்க என்றும்
எல்லாரும் சமமென்ப துறுதி யென்றும்
சொல்லாளன் பாரதிதான் வெற்றிச் சங்கம்
துணிந்தூதி விட்டாலும் தோல்வி கண்டான்;
இல்லாத சாதிகளுக் கின்னும் ஆட்சி
எங்கெங்கும் காணுகின்றோம் சாதிச் சூழ்ச்சி
15

தோற்றாலும் வீரமுளான் ஓய்தல் கொள்ளான்
மீண்டும்போர் தொடுப்பதற்கே எண்ணங் கொள்வான்;
ஆற்றல்மிகும் பாரதியும் சாதிப் போரில்
ஆணினத்தை நம்பியதால் தோல்வி கண்டான்
நாற்றமிகு சமுதாயச் சழக்க கற்ற
நாரியரைக் குழந்தைகளை அண்டி நின்றே
''ஏற்றமென்றும் தாழ்ச்சியென்றும் சாதி கூறல்
இல்லையடி பாவமடி பாப்பா'' என்றான்,
16

வளர்ந்துவரும் பரம்பரைக்கு வீரம் ஊட்டின்
வாகைபெறும் நாளைக்குச் சாதிப் போரில்;
தளர்ந்தொழியும் அப்பகைமை இந்த நாட்டில்;
சமத்துவந்தான் வளர்ந்துவரும் என்று நம்பிக்
களங்கண்டான்; பாரதியைப் போற்று கின்ற
காசினியீர்! பிறவியினால் உயர்வும் தாழ்வும்
உளங்கொண்டு வாழ்வீரேல் மீண்டும் தோற்பான்;
உரமுடையன் அவன்வெல்வான் சாதி தோற்றால்;
17

**உண்மைத் தெய்வம்**
கடவுள்தம் பெயராலே பகைமை காட்டிக்
கணக்கில்லாத் தேவுகளைப் படைத்துக் கூட்டி
மடமையிலே மூழ்கிஇருள் சூழ நெஞ்சம்
மயங்குகையில் இளம்பரிதி என்னத் தோன்றி
''அடகெடுவீர்! அறிவிலிகாள்! உண்மை ஒன்றே
ஆண்டவனாம் பிறவெல்லாம் பொய்யாம்'' என்று
திடமுடைய வீரனலால் வேறு யார்தான்
தெளிந்துரைக்க வல்லார்கள்? வாழ்க வீரன்!
18

**போர் முழக்கம்**
மாதர்தமை இழிவுசெய்யும் மடமைக் கோட்டை
மதிலிடிந்து பொடியாகத் தகர்ப்போம் மாய்ப்போம்
வேதமுறை பழையமுறை என்று சொல்லி
விரைந்தெழுந்தால் தீயிட்டுக் கொளுத்தி மாய்ப்போம்
[3]தாதமுறை ஆணுக்கு வேண்டா என்றால்
தையலர்க்கும் அம்முறையை வேண்டா என்போம்
காதலர்க்குக் கற்புமுறை பொதுவில் வைப்போம்
கண்ணிரண்டும் சரிசமமாக் காண்போம் என்றான்
19

**வாழ்க வீரம்!**

அரசியலில் வீரனவன் சமுதா யத்தின்
ஆணவத்தைத் தகர்த்தெறியும் வீரன் ஆவன்
முரசொலியை முழக்குகின்ற தமிழின் வீரன்
மூத்ததமிழ்க் கவிவீரன் பாடல் தன்னைப்
பரசிநிதம் போற்றலுடன் அவன்வ குத்த
பண்புடைய நெறியினில்நாம் செல்ல வேண்டும்
சுருதிவிட்டுப் பாடாமல் நேர்மை செய்வோம்
தூய்மைமிகு வீரத்தை வாழ்த்து வோமே.
20

---

**பாடற் குறிப்பு:–** 1.11.1958 அன்று, காரைக்குடி இந்து மதாபிமான சங்கக் கவியரங்கில், 'பாரதி–வீரன்' என்ற தலைப்பில் பாடப் பெற்றது.
**அருஞ்சொற் பொருள்:–** 1. தொடைவலி – பாட்டு வல்லமை. 2. மடிபடிந்த – சோம்பல் மிகுந்த. 3. தாதமுறை – அடிமை முறை.

## 29. உரிமை

**(நூல்:–கவியரங்கில் முடியரசன்)**

எண்சீர் விருத்தம்

சமயத்தில் உதவுகின்ற தமிழர் பண்பால்
தலைமைபெறும் [1]பரந்தாமப் பெரியோய்! எங்கள்
தமிழாய்ந்த புலவர்படைத் தலைவ ரேறே
தமிழ்ச்சிங்கப் [2]பாரதியே! இவ்வ ரங்கில்
அமிழ்தெனும்நம் தமிழ்பாடக் குழுமி வந்த
அன்புடையீர்! தாய்க்குலத்தீர்! உரிமை காக்கும்
எமதருமை மதுரைநகர்ப் பேரூர் வாழ்வீர்!
என்கவிதை தலைவணங்கிப் பாடு கின்றேன்
1

**காஞ்சித் தென்றல்**

தென்பொதிய மலைஒன்றே தமிழர்க் காகத்
தென்றலெனும் மென்காற்றை நல்கிற் றென்பர்;
அன்புடையீர்! காஞ்சிபுரப் பேரூர் தானும்
[3]அறிஞரென்ற தென்றலொன்றை நல்கக் கண்டோம்;
வன்புடைய வாடைவரின் பொதியத் தென்றல்
வாயடங்கும்; இத்தென்றல் வாடை காணின்
தென்புடைய புயலாகிப் பகையை மாய்க்கும்
தெருவெல்லாம் மணம்பரப்பும் வாழ்க தென்றல்
2

**உரிமை அஞ்சாது**

நாடுமொழி இனங்காக்கத் தொடுக்கும் போரில்
நல்லுரிமை வேட்கையினைத் தடுப்ப தற்குக்
கூடுசிறைக் கம்பிக்கும் வலிமை யில்லை;
கொட்டுகின்ற குருதியினைக் கண்ட போதும்,
நாடுகிற பதவிதனை யிழந்த போதும்,
நடுக்குறுத்தும் கொடுவறுமை வந்த போதும்,
கேடுபல தொடர்ந்தாலும், தூக்கு மேடை
கிடைத்தாலும் அஞ்சாதிவ் வுரிமை வேட்கை
3

**காந்தியார்**

கட்டிவந்த பொருள்விற்க ஆங்கி லத்தார்
கடல்கடந்து நுழைந்திங்கு நம்மை நாமே
முட்டவிட்டுத் தந்திரமாக் கவர்ந்து நாட்டின்
முழுவுரிமை கைக்கொண்டார்; அடிமை யாகிக்
கெட்டிருக்கும் மாந்தரிலே காந்தி தோன்றிக்
கிளர்ந்தெழுந்தார்; அயலவர்கள் நாட்டை ஆள
விட்டிருந்த நிலைபோதும் எனக்க னன்று
வீரப்போர் தொடுத்ததுமேன்? உரிமை வேட்கை
4

**வ.உ.சி.**

முத்திருக்கும் தண்கடலில் முத்தெ டுத்து,
முகில்முட்டும் மலையகத்துச் சந்த னத்தின்
எத்திசையும் மணக்கின்ற மரமெ டுத்து,
மிளகெடுத்து, மயில்தோகை இறகெ டுத்துப்
பத்திபத்தி யாய்க்கலங்கள் விற்கச் சென்ற
பழங்கடலிற் சிதம்பரனார் கப்பல் ஓட்டி
எத்துயர்க்கும் அஞ்சாமற் செக்கி ழுத்தும்
ஏன்சிறையில் வாடினர்காண்? உரிமை வேட்கை
5

**பெரியாரும் அறிஞரும்**

நமக்கென்று நாடுண்டு; மொழியும் உண்டு;
நாகரிகத் தொன்மைமிகும் இனமும் உண்டு,
சுமக்கின்ற அடிமைமனம் போதும் போதும்;
சுரண்டுகின்ற வடவரொடு தொடர்பு போதும்;
எமக்கென்று தனியாட்சித் திருநா டிங்கே
எழுப்பிடுவோம் எனக்கிளர்ந்து போர்தொடுத்துத்
தமக்குநிகர் பெரியாரும் அறிஞர் தாமும்
தனிமுழக்கம் புரிவதுமேன்? உரிமை வேட்கை
6

உயர்தனிச்செம் மொழிவழங்கும் தமிழர் நாட்டில்
உரமில்லா வளமில்லா வரம்பும் இல்லா
அயல்மொழிகள் நுழைந்துவரும் கொடுமை கண்ட
அறிஞர்குழாம் புலவர்குழாம் வெகுண்டெ ழுந்து
மயலொழிக்கப் புறப்படுதல் உரிமை வேட்கை;
மண்ணெண்ணெய்த் துணைகொண்டு பிறமொ ழிக்கு
நயமுடனே வரவுரைத்தல் [4]அடிமை வேட்கை;
நமதுதமிழ் வாழ்த்திடுதல் அறிவு வேட்கை;
7

**உரிமை எது?**

தெருவழியில் நடந்துசெல உரிமை யுண்டு;
தெருநடுவிற் போவதுமோர் உரிமை யாமோ?
பெருவழியில் ஊர்திக்கும் உரிமை யுண்டு;
பேணாமல் நடப்பவர்க்குத் தீமை யுண்டு;
வருபவரைக் காணுரிமை கண்ணுக் குண்டு
வழிதவறி முறைகெட்டு மாதர் தம்பால்
கருவிழியைச் செலுத்துகிற கயமை நோக்கம்
கண்ணுக்கு வேண்டியநல் லுரிமை யன்று
8

தன்னுரிமை வேண்டுமென நினைவோ ரெல்லாம்,
தம்மைப்போல் மற்றவரும் விழைவ ரென்று
மன்னுயிரின் உரிமைஎலாம் மதித்தல் வேண்டும்;
மானமுடன் தன்னுரிமை போற்ற லாலே
பன்னரிய பொதுவுரிமைக் கிடுக்கண் செய்தல்
பகுத்தறிவுக் கொவ்வாத உரிமை யாகும்;
சின்னஒரு புழுவேனும் உரிமை காக்கச்
சீறுவதை நம்கண்ணால் காணு கின்றோம்
9

**பெண்ணுரிமை**

தற்காத்துத் தற்கொண்டான் தன்னைப் பேணித்
தகைசான்ற சொற்காத்துச் சோர்வ கற்றிக்
கற்கின்ற நூல்கற்றுக் கணவன் நெஞ்சக்
கருத்துணர்ந்து கனிகின்ற அன்பு காட்டி
இற்காத்தல் மாதர்தமக் குரிமை யாகும்;
இகழ்வாகப் பிறர்பேச ஊரைச் சுற்றிப்
பற்காட்டி உடல்மினுக்கிப் பண்பு கெட்டுப்
பகட்டுவதைப் பெண்ணுரிமை என்று சொல்லார்
10

**மாணவரும் தொண்டரும்**

கற்கின்ற மாணவர்க்கும் உரிமையுண்டு
கடமைகளும் உண்டென்று கருதல் வேண்டும்;

கற்பிக்கும் ஆசானை மதிக்க வேண்டும்
கல்வியினில் கருத்தூன்றிப் படித்தல் வேண்டும்;
முற்போக்குக் கட்சிகளில் தொண்டர் கட்கும்
முழூவுரிமை உண்டெனினும் தலைவன் சொல்லில்
நிற்கின்ற நிலைவேண்டும்; உரிமை வேட்டோர்
கடமையையும் நெஞ்சிருத்தின் நாடு நன்றாம்
11

**சொல்லும் செயலும்**

அனைத்துலக நிலைபேசி, அமைதி ஓங்க
ஆர்ப்பரித்து, நாடுபிடிக் கின்ற எண்ணம்
தினைத்துணையும் எமக்கில்லை என்ற கொள்கை
தீவிரமாப் பேசுகிற அண்டை நாட்டார்,
முனைத்தெழுந்து பிறரெல்லைக் கோட்டைத் தாண்டி
மீணடுமவர் உலகப்போர் மூளு தற்கு
நினைக்கின்றார்; பிறருரிமை பறிப்ப தற்கு
நினைப்பவரைத் தடுப்பதுநம் உரிமை யாகும்
12

**எழுத்துரிமை**

எழுத்தாளர் மன்றத்திற் பாடு கின்றேன்
எழுத்துரிமை ஓரளவு உரைத்தல் வேண்டும்;
எழுத்தாளர்க் கிந்நாட்டிற் பஞ்ச மில்லை
ஏனென்றால் அஃதொன்றே எளிமை யாகும்;
முழுத்தாளில் எழுதமட்டுந் தெரிந்தாற் போதும்
மொழியறிவு, கலையுணர்வு, கல்வி ஆற்றல்,
தழைத்தோங்கும் சிந்தனைகள் ஒன்றும் வேண்டா;
தமிழெழுத்துச் சிலமட்டுந் தெரிந்தாற்போதும்
13

இருக்கின்ற தமிழ்நூலைப் படிப்ப துண்டா?
எவரெவரோ சிந்தித்து வரைந்த நூலில்
பொறுக்குகின்ற பேரெல்லாம் இந்த நாட்டிற்
புகழ்மிக்க எழுத்தாளர்! அவரை எல்லாம்
உருத்ததட்டித் தடுப்பதற்கோர் வகையும் இல்லை;
ஓரிருவர் தடுத்தாலும் உரிமை என்பார்;
கிறுக்கரிடம் அகப்பட்ட தமிழ ணங்கே!
கேடின்றி நினக்குரிமை கிடைப்ப தென்றோ?
14

தமிழெழுதிச் சோறுண்டு வாழ்ந்தி ருப்போர்
தனிமொழியைத் தாய்மொழியை இகழ்ந்து பேசித்
தமிழகத்தில் தமிழில்எழுத் தாளர் ஆவர்;
தப்பின்றிக் கலப்பின்றி எழுதும் முன்னோர்
தமிழெல்லாம் பழித்துரைக்கும் கயமை யிங்கு
தழைப்பதுவோ உரிமை? அது மடமை; எங்கள்
தமிழிகழ்வோர் நாவடக்கக் கொதித்துப் பாயும்
தன்மானம் உடமையன்றோ உரிமை யாகும்
15

எழுத்தாளர் நெஞ்சத்தில் உரிமை வேண்டும்;
எப்படியோ உண்டுடுத்து மற்றோ ரைப்போல்
பிழைத்தாலே போதுமென எழுதிக் கொட்டி
வால்பிடித்துப் பின்செல்லல் உரிமை யன்று;
வழுக்காணின் அஞ்சாமல் எழுதி, வாய்மை
வாழ்வதற்கு வழிவகுத்தல் உரிமை யாகும்;
இழுக்கான நடையெழுதிப் பிறரைத் தாக்கி
எழுதுவதே தொழிலாதல் உரிமையன்று
16

எழுத்துரிமை எனச்சொல்லி எழுதித் தீர்க்கும்
ஏடுகளில் சிலவற்றைக் காணின் அங்குப்
புழுத்திருக்கும் கயமைகளே காணும்; எண்ணும்
புலன்நடுங்கும் கைநடுங்கும் கண்கள் கூசும்;
கொழுத்தவர்கள் குடித்தனத்தில் நடக்குந் தீமை
கொடுப்பதற்கோ செய்தித்தாள்? படிப்பார் நெஞ்சை
அழுக்காக்கிக் கெடுப்பதற்கோ உரிமை? நல்ல
அறிவுடையார் இச்செயலைச் சிறுமை என்பர்
17

**பேச்சுரிமை**

அன்றிருந்த அரசரிடம் குறைகள் காணின்
அருகிருந்து வற்புறுத்தி அறமு ரைத்தார்
நன்றுடைய தமிழ்ப்புலவர்; வரிகு றைக்க
நயவுரைகள் புகன்றிருந்தார்; அரசு மன்றில்
சென்றிருந்து வழக்குரைத்தாள் கற்பின் செல்வி;
செந்தமிழின் முன்னூல்கள் செப்பும் உண்மை
ஒன்றுண்டு; முடியரசன் ஆட்சி தன்னில்
உரிமையெலாம் இருந்ததென உணரு கின்றோம்
18

அரசியலில் குறைகாணின் இடித்து ரைக்கும்
அவ்வுரிமை அனைவர்க்கும் வேண்டும் இன்று;
முறைசெய்வோர் அவ்வுரிமை பறிப்ப தற்கு
முனைவதுவும் நன்றன்று, செவிகொ டுத்துப்
பரிவுடனே ஏற்பதிலோர் நன்மை யுண்டு,
பாராளும் முறைமையது; வேண்டு மென்றே
நரிபடைத்த குணமுடையார் குறைகள் சொல்லி
நால்வருண முறைபுகுத்தல் உரிமை யன்று
19

பேச்சுரிமை உண்டென்று சங்கம் ஏறிப்
பித்தரைப்போல் மனம்போன போக்கில் எல்லாம்
தீச்சொல்லை வழங்குவதும் உரிமை யன்று;
தெளிவான கருத்தொன்றே கூறல் வேண்டும்;
மூச்சுக்கு முந்நூறு வசவு சொல்லி
முறைகெட்டுப் பேசுவதும் உரிமை யாமோ?
ஏச்சாலே என்னபயன்? எதிரி யுள்ளம்
ஏற்கும்வகை பேசுதலே உரிமை யாகும்
20

சிந்தனையை எண்ணத்தை அடிமை யாக்கிச்
செயற்படினோர் நலமில்லை; அறிவு கொண்டு
சிந்திக்க முனைவதுவும் சிந்தித் தாய்ந்த
சீர்மைகளைப் பேசுவதும் உரிமை யாகும்;
நிந்தனையைக் கைவிட்டு, நிலைமை சொல்லும்
நேரத்தில் நடுநின்று, கேட்போர்க் கெல்லாம்
புந்தியினில் படும்வகையில் புகல வேண்டும்;
புகலுங்கால் நாகாத்தல் உரிமை யாகும்
21

**விடுதலைப் போர்**

*தென்றல்தவழ் நாட்டினரே! முரசொ லித்துத்
தென்னகத்தைத் திருநாட்டை மீட்ப தற்கு
மன்றங்கள் அமைத்திடுவீர்? போர்வாள் ஏந்தும்
மாவீரர் படைசேர்ப்பீர்! இனமு ழக்கம்
நின்றெங்கும் எழுப்பிடுவீர்! சிறையைக் காட்டின்
நிமிர்ந்திருந்து முல்லைமலர்ச் சோலை என்பீர்!
கொன்றொழிக்கக் கயிறெடுத்தால் கழுத்தைக் காட்டிக்
குலவுமெழில் முத்தாரம் என்று கொள்வீர்!
22

*வீரமிகு நம்நாடு பாரில் ஓங்க
விடுதலைப்போர் தொடங்கிடுவீர்! உரிமை பெற்றுத்
தீரமிகு தனியரசாய் மக்க ளாட்சி
செழித்தோங்கச் செய்வதுநும் உரிமை யாகும்;
கூறறிவுத் திராவிடன்பால் அடுத்தி ருக்கும்
குடிலர்களைச் சகுனிகளை உடன்பி றந்தும்
மாறுபடு வீடணரை விழித்தி ருந்து
மாற்றிடுவீர்! நம்நாடு வாழ்க நன்றே
23

---

**பாடற் குறிப்பு:—** 8.11.1959 அன்று, மதுரை எழுத்தாளர் மன்றக் கவியரங்கில் பாடப்பெற்றது.

அருஞ்சொற் பொருள்:–
1. பரந்தாம – பேராசிரியர் அ.கி. பரந்தாமனார்.
2. பாரதி – நாவலர் சோமசுந்தர பாரதியார்.
3. காஞ்சித் தென்றல் – கவியரங்கைச் சுவைத்துக் கொண்டிருந்த அறிஞர் அண்ணா. 4.அடிமை வேட்கை – பொது நிலையங்களிலிருந்த இந்தி எழுத்துகளைத் தார் கொண்டழித்த பொழுது மண்ணெண்ணெய் வைத்துத் தாரை அழித்தனர் சிலர். அதைக் குறிக்கிறது.
*தென்றல், முரசொலி, தென்னகம், திருநாடு, மன்றம், போர்வாள், இனமுழக்கம் முல்லை, எழில், முத்தாரம், என்னும் முன்னேற்ற இதழ்களின் பெயர்கள் அமைத்திருத்தல் காண்க.
*.நம்நாடு, விடுதலை, திராவிடன் என்னும் முன்னேற்ற இதழ்களின் பெயர்கள் அமைத்திருத்தல் காண்க.

## 30. குயிலெனக் கூவுவோம்
(நூல்:–பாடுங் குயில்)

மலர்விரி சோலையை நாடிடுவோம்
மயிலென மகிழ்வுடன் ஆடிடுவோம்
மலர்தொறும் வண்டெனப் பாடிடுவோம்
மனங்கவர் குயிலெனக் கூவிடுவோம் 1

கூவிடுங் குரல்தனைத் தடுத்திடவே
கொடுமைகள் வருமெனில் துடித்தெழுவோம்
ஏவிடும் வேலுரு வெடுத்திடுவோம்
எதிர்த்திடும் பகைதனை அடக்கிடுவோம் 2

கனிநிகர் கவிதைகள் படைத்திடுவோம்
காவியம் பற்பல தொடுத்திடுவோம்
இனிமைகள் யாவையும் படைத்திடுவோம்
இடர்தருஞ் செயல்களைத் தடுத்திடுவோம் 3

வறுமையின் கொடுமையைப் போக்கிடுவோம்
வளமைகள் யாவுமே ஆக்கிடுவோம்
சிறுமைகள் நம்மிடம் நீக்கிடுவோம்
சிந்தனை நெஞ்சினில் தேக்கிடுவோம் 4

உழைப்பினை நலமுறக் காட்டிடுவோம்
உரிமையை உலகினில் நாட்டிடுவோம்
பிழைப்பினைப் பறித்திடும் கூட்டமதைப்
பெரும்புலி போலெழுந் தோட்டிடுவோம் 5

உறிஞ்சிடும் அட்டைகள் உலவிடுமேல்
உலகமும் அறநெறி விலகிடுமே
அறிந்திடின் அனைவரும் நலமுறலாம்
அமைதியும் நிலமிசை நடமிடலாம் 6

இயற்கையின் விளைவெனும் உடைமையெலாம்
யாவரும் பெறஒரு தடையிலையாம்
செயற்கையில் அவைதனி யுடைமையெனில்
சிறியவர் செயலது மடமையுமாம் 7

நலமுற அனைவரும் கூடிடுவோம்
நாட்டினில் அமைதியை நாடிடுவோம்
மலர்விரி சோலையைத் தேடிடுவோம்
மனங்கவர் குயிலெனப் பாடிடுவோம் 8

## 31. தலைமை வகிப்போம்
(நூல்:–பாடுங் குயில்)

சுரண்டலும் பதுக்கலும் ஒழிப்போம் – அதற்குத்
துணைவரும் பகைதனை அழிப்போம்
இரண்டிலும் பிழைப்பவர்ப் பழிப்போம் – அவர்க்கே
இனியொரு விதிமுறை விதிப்போம் 1

மனிதனை உழைப்பினை மதிப்போம் – கொடிய
வறுமையை இடரினை மிதிப்போம்
இனியநல் லுலகினைப் படைப்போம் – அங்கே
எதிர்வரும் தடைகளை உடைப்போம் 2

உடையவர் எளியவர் இருப்பார் – அதுதான்
உலகினில் விதியென வகுப்பார்
கடையவர் உயரியர் பிறப்பால் – இருப்பர்
கடவுளின் செயலென உரைப்பார் 3

கடவுளை விதியினை மறுப்போம் – தூய
கடமையை உரிமையை மதிப்போம்
மடமையை அடிமையை வெறுப்போம் – நல்ல
மதியினை உணர்வினை வளர்ப்போம் 4

வயல்களில் உழைப்பினைக் கொடுப்போம் – அங்கே
வருபயன் அனைத்தையும் எடுப்போம்
துயரிலை எனமடல் விடுப்போம் – உழைப்பால்
சுரந்திடும் பொருள்களை மடுப்போம் 5

பொறிகளுந் தறிகளும் வளர்ப்போம் – அங்கே
புதுநெறி முறைகளில் உழைப்போம்
நிறைவுறு பொருள்களை விளைப்போம் – நாட்டின்
நிலையுயர் வெய்திடச் செழிப்போம் 6

புதுமுறை உலகினைப் படைப்போம் – அங்கே
பொதுமையில் அறநெறி விரிப்போம்
உதவிடும் மனத்தொடு சிறப்போம் – உலகில்
ஒருசரி நிகரென இருப்போம் 7

அயர்வினைப் பகையெனத் தகர்ப்போம் – நாளும்
அவரவர் கடமையை உகப்போம்
அயலவர் சுரண்டிடின் செகுப்போம் – அந்த
அணியினில் தலைமையை வகிப்போம் 8

## 32. மூடம் என்று மாறுமோ!
(நூல்:–பாடுங் குயில்)

கடவுள் கடவுள் என்கிறாய் – நாளுங்
கயமை யாவுஞ் செய்கிறாய்
மடமை நோக்கிச் செல்கிறாய் – நல்ல
மதியை அந்தோ கொல்கிறாய் 1

கல்வி தெய்வம் என்கிறாய் – நாளுங்
கற்க என்ன செய்கிறாய்?
செல்வந் தெய்வம் என்கிறாய் – அதனைத்
தேடத் தீமை செய்திறாய் 2

சின்னம் உன்றன் மெய்யிலே – செய்யுஞ்
செயல்கள் எல்லாம் பொய்யிலே
சொன்ன வேதங் கையிலே – வஞ்சம்
சூது நெஞ்சப் பையிலே 3

எத்தி வாழப் பார்க்கிறாய் – அதனுள்
இறைவன் பேரைச் சேர்க்கிறாய்
கொத்துங் கழுகுப் போக்கினால் – உன்றன்
கொள்கை நன்மை யாக்குமோ? 4

செய்யுந் தீமை யாவுமே – அந்தத்
தேவன் என்றால் தீருமோ?
பொய்யும் மெய்ம்மை யாகுமோ? – காட்டுப்
பூனை புலியென் றாகுமோ? 5

நூறு நூறு சாதிகள் – இங்கு

நுவலுங் கோடி வீதிகள்
வேறு வேறு நீதிகள் – சொல்லி
வேத மென்றும் ஓதினாய் 6

ஏழை செல்வன் ஏனெனில் – அந்த
இறைவன் என்று வீணிலே
மோழை வாதங் கூறினாய் – உன்றன்
மூடம் என்று மாறுமோ? 7

நெஞ்சின் மாசை ஓட்டுவாய் – நல்ல
நினைவை யங்கே கூட்டுவாய்
வஞ்சம் நீக்கி வீட்டுவாய் – செய்கை
வாய்மை யாக்கிக் காட்டுவாய் 8

## 33. மாந்தன் கற்பனை
(நூல்:–பாடுங் குயில்)

கற்பனைமிக்கான் உலகில் – அதனால்
கடவுளைத் தந்தான் சிலையில்
அற்புதஞ் சொன்னான் கதையில் – நல்ல
அறிவைம றந்தான் தரையில் 1

கல்வியைக் கற்பனைக் கண்ணால் – கண்டு
கலைமகள் என்றவன் சொன்னான்
பல்வகைச் செல்வமுங் கண்டான் – தெய்வப்
பற்றால் திருமகள் என்றான் 2

தோற்றமும் வாழ்தலுங் கண்டான் – செத்துப்
தொலையும் ஒடுக்கமும் கண்டான்
நாட்படு கற்பனை கொண்டான் – மூன்றும்
நான்முகன் மாலரன் என்றான் 3

பூமியுந் தேவியில் சேரும் – தோற்றப்
பொலிவொரு மன்மதன் ஆகும்
சாமியென் றெத்தையுங் கூறும் – மாந்தன்
சாற்றிய கற்பனை பாரும் 4

வானுயர் கோபுரங் கட்டிக் – கோவில்
வாயிலில் வந்துகை கட்டித்
தானொரு மண்குடில்கட்டி – வாழ்ந்து
தலையெழுத் தென்றவன் மட்டி 5

அருள்தரும் ஆண்டவன் என்றான் – மக்கள்
அன்பினை நெஞ்சினில் கொன்றான்
பொருள்தரும் என்றுபு கன்றான் – உழைக்கும்
பொழுதெலாம் சோம்பலில் நின்றான் 6

குற்றங்கள் எல்லாம் புரிவான் – சுற்றிக்
கோவிலி னுள்ளே வருவான்
முற்றிய தேங்காய் தருவான் – பாலும்
மொய்த்துள பூவுஞ் சொரிவான் 7

அத்தனைப் பாவமுந் தீரும் – என்றே
அங்கவன் நம்பியே கூறும்
பித்தனைப் போலஎல் லாரும் – செய்தால்
[1]பீழைகள் எப்படித் தீரும்? 8

---

**பாடற் குறிப்பு:–** 3.10.1975 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1. பீழை – குற்றம்.

## 34. ஏறு முன்னேறு(
நூல்:–பாடுங் குயில்)

உழைப்புக்கு நல்லதோர் காலம் – வந்தால்
ஓங்கிவ ளர்ந்திடு மேயிந்த ஞாலம்
பிழைப்புக்குப் போடாதே தாளம் – சென்று
பின்பாட்டுக் கூட்டத்தில் பாடாதே மேலும் 1

தன்மானம் ஒன்றையே நாடு – பெற்ற
தாயகந் தானுனக் கெப்போதும் வீடு
எந்நாளும் பாட்டாளி யோடு – கூடி
எங்கெங்குந் தோளேற்றிப் படவேண்டும் பாடு 2

எங்கெங்குக் காணினுந் தேம்பல் – மக்கள்
எவ்வெவர் வாழ்விலும் இன்பங்கள் கூம்பல்
பொங்கிப்ப டர்ந்திடும் சோம்பல் – கொண்டு
போற்றிவ ளர்த்ததால் வந்ததித் தீம்பு 3

சோம்பலை மாய்த்திடல் வேண்டும் – நின்றன்
தோளில்உ ழைப்பினைச் சேர்த்திடல் வேண்டும்
மாம்பழக் கொட்டையைத் தோண்டி – நட்டு
மாஞ்செடி தந்திடும் மந்திரம் வேண்டாம் 4

உன்னை உழைப்பினை நம்பு – யாரோ
ஓதிய வேதத்தை நம்பினால் வம்பு
பொன்னை வளர்த்திடுந் தெம்பு – நாட்டிற்
பூத்துக் குலுங்கிட நாடிக் கிளம்பு 5

ஆலைத் தொழில்புரிந் தாலும் – பள்ளி
ஆசிரி யப்பணி ஏற்றிருந் தாலும்
சீலைத் தொழில்புரிந் தாலும் – எங்கும்
சீருடன் நின்கடன் ஆற்றுக நாளும் 6

நாட்டையும் உன்னையுஞ் சேர்த்து – நெஞ்சில்
நாளும் நினைத்தே உழைத்திடு வோர்த்து
வீட்டையும் நாட்டையும் பார்த்து – தம்பி
வீறுகொண் டேஎழு தோள்களை ஆர்த்து 7

நான்முகன் உன்மண்டை ஓட்டில் – ஏதோ
நாட்டினன் என்பதை நெஞ்சைவிட் டோட்டில்
ஏன்வறு மைத்துயர் நாட்டில்? – தம்பி
ஏறுமுன் னேறுழைப் பாலுயர் கோட்டில் 8

---

**பாடற் குறிப்பு:–** 4.10.1975 ஆம் நாள் பாடியது.

## 35. உறங்கிய வீணை
(நூல்:–பாடுங் குயில்)

உறங்கிய வீணையில் அடங்கிய ஓசையை
ஒருநாள் கைவிரல் எழுப்பும் – செவி
மறவா இனிமையைக் கொடுக்கும் – அது
மாந்தரின் நெஞ்சினில் நிலைக்கும்
1

எழுப்பிய ஓசையை அடக்கிடும் ஆசையில்
எழுந்தால் மனமிகத் துடிக்கும் – தரும்
இடரால் விழிபுனல் வடிக்கும் – பின்
சுடர்போல் உணர்வுகள் வெடிக்கும்
2

மீட்டிய விரல்களை வாட்டிட நினைத்தால்
மேதினி எவ்விதம் பொறுக்கும்? – அது
தீ தென வேசொலி வெறுக்கும் – பின்
தீமைகள் யாவையும் ஒறுக்கும்
3

இனிமையில் மூழ்கிய இருசெவி அடைத்தால்
இசைதனை மனமா மறக்கும்? — ஆசை
எழுமடங் கலவோ பிறக்கும்! — பின்
இடர்தரும் யாவும் பறக்கும்
4

பாடற் குறிப்பு:— நெருக்கடி நிலையிற் பாடியது — 26.11.1976.

## 36. ஐந்து பூதம்
(நூல்:—பாடுங் குயில்)

நீரும் நெருப்பும் காற்றும் வானும்
நிலமும் சேர்ந்தே உலகம தாகும்
யாரும் இவற்றைக் கூறுகள் செய்யார்
யாவும் இங்கே பொதுமையு மாகும்
1

என்றன் நீரென உன்றன் நீரென
எல்லைக் கோடுகள் போடுவதில்லை
கனலும் நெருப்பில் உரிமைகொண் டாடக்
கரைகள் அமைத்துக் காட்டுவதில்லை
2

தென்றல் கொண்டல் என்றன ரென்றித்
திரியும் காற்றைப் பிரித்தவ ரில்லை
என்றும் வானில் எல்லைக ளமைத்தே
எனதென் றிசைத்தவர் எவரும் இல்லை
3

அஞ்செனும் பூதமும் ஆருயிர்ப் பொதுமை
ஆயினும் மாந்தன் ஆக்கினன் புதுமை
எஞ்சிய நிலத்தில் எல்லைகள் இட்டான்
இதுதனி யுடைமை எனவிதை நட்டான்.
4

பாடற் குறிப்பு:— 1.4.1982 ஆம் நாள் பாடியது.

## 37. நற்பணியாற்றுவோம்
(நூல்:—பாடுங் குயில்)

நாட்டுக்கு நற்பணி யாற்றிடுவோம் — வாழ்வில்
நல்லவர் கொள்கையைப் போற்றிடுவோம்
கூட்டத்தில் உண்மையைச் சாற்றிடுவோம் — அங்குக்
கூறிய தைச்செயல் ஆக்கிடுவோம் 1

நற்கலை பற்பல நாட்டிடுவோம் — இந்த
நானிலத் திற்புகழ் கூட்டிடுவோம்
தற்குறி என்றிலா தாக்கிடுவோம் — தீய
தந்நலம் யாவையும் போக்கிடுவோம் 2

விஞ்ஞானி பற்பலர் உண்டெனவே — இங்கு
வேண்டும்மு யற்சிகள் கண்டிடுவோம்
பொய்ஞ்ஞானப் பித்தரை வென்றிடவே — இந்தப்
பூமிக்கு நல்வழி கண்டிடுவோம் 3

ஏழைமை நீக்கிடச் சூளுரைப்போம் — தீமை
எங்கெழு மாகினும் வாளெடுப்போம்
தோழமை பாடிட யாழெடுப்போம் — மக்கள்
துன்பங்கள் யாவையும் தூளடிப்போம் 4

சாதிகள் ஆக்கிய தீமைகளை — அந்தச்
சாத்திரக் குட்டையின் ஆமைகளை
மோதித் தகர்த்திடல் தீமையிலை — நீங்கள்
மூண்டெழு வீரினும் ஊமைகளோ? 5

சோம்பலை ஏய்த்தலை நீக்கிடுவோம் — கெட்ட
சூழ்ச்சிகள் வஞ்சனை போக்கிடுவோம்
கூம்பிய தோள்களை ஏற்றிடுவோம — நாளும்
கூடும் உழைப்பினை யாக்கிடுவோம் 6

வாய்ப்பறை சாற்றலைத் தைத்திடுவோம் — நெஞ்சில்
வாய்மையை நேர்மையை வைத்திடுவோம்
ஏய்ப்பதை நாமினிநைத் தெறிவோம் — பொய்யை
ஏறி மிதித்ததைப் பிய்த்தெறிவோம் 7

வேதங்கள் பூதங்கள் என்றுரைத்தால் — அந்த
வீணரின் கொள்கையைக் கொன் றழிப்போம்
வாதங்கள் மேடையில் நின்றுரைப்போம் — சொன்ன
வாய்மைகள் யாவையும் நன்றமைப்போம் 8

பாடற் குறிப்பு:— 20.2.1979 ஆம் நாள் பாடியது.

## 38. நெஞ்சத் துடிப்பு
(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)

**('குமுகம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடலின் 14 எண்சீர் விருத்தங்களில், 6 எண்சீர் விருத்தங்கள் மட்டும் பொருண்மை கருதி இங்கும் இடம் பெற்றுள்ளன)**

'சாதிகளே இல்லையடி பாப்பா நம்முள்
தாழ்வுயர்வு சொல்லுதலே பாவம்' என்றே
ஓதியஓர் பாரதியும் செத்துவிட்டான்
உட்புகுந்த சாதிகளோ சாக வில்லை;
'வேதியர்கள் தாம்வாழ வகுத்து வைத்த
வேதநெறி திராவிடத்தில் தூள் தூள்' என்று
மோதினன்நம் பாவேந்தன்; வீதி தோறும்
முளைப்பதலால் தூளாக வில்லை யிங்கே! 1

ஒருருவம் இல்லாத கடவுள் பேரால்,
ஒவ்வாத பகைமூட்டும் மதத்தின் பேரால்,
சீரழிவு பெற்றுவரும் சமுதா யத்தைச்
செப்பனிட வந்தஒரு பெரியார் இங்கே
ஆறறிவுப் போர்தொடுத்து மாண்ட பின்பும்
அர்த்தமிலா எந்தமதம் மாண்ட திங்கே?
ஆரவர்போற் போராட வல்லார்? இன்னும்
அழிவகல வில்லையெனத் துடிது டித்தேன்
2

'சாதிஎனச் சமயமென முளைத்து வந்த
சழக்குகளை விட்டுவிட்டேன்' என்று கூறி
மேதினியில் மறுமலர்ச்சி காண வந்த
மேன்மைமிகும் இராமலிங்கர் அருட்பா நூலை
ஓதிவரும் தொண்டருக்குப் பஞ்ச மில்லை;
சழக்குகளை ஒழிக்கத்தான் நெஞ்ச மில்லை;
யாதினிநாம் செய்வதென எண்ணி எண்ணி
அகமெல்லாம் துடிதுடிக்கும் வெம்பும் சோரும்
3

எதைக்கண்டு துடிப்பதடா? அந்தோ இங்கே
எதைக்கண்டு கொதிப்பதடா? தமிழர் நாட்டில்
பதைக்கின்ற நிலையல்லால் அமைதி யில்லை;
பைந்தமிழின் நிலைகாணின் நெஞ்சே வேகும்;
மிதிக்கின்ற வழிதேடி வடபு லத்தார்
மெல்லமெலப் புகுகின்றார்; இந்தி கொண்டு
வதைக்கின்ற வழியமைத்து வருதல் கண்டேன்
வடவர்பிடி எத்தனைநாள்? எனத் துடித்தேன் 4

இல்லத்தார் துடிதுடிக்க, மாலையிட்ட
இல்லாளும் துடிதுடிக்கப் பெற்ற பிள்ளை
சொல்லத்தான் முடியாமல் துடிது டிக்கச்
சூழ்ந்தஉயிர் அணுவெல்லாம் துடிது டிக்க
மெல்லத்தன் உயிர்த்துடிப்பே அடங்கும் வண்ணம்
மேனியிலே எரியூட்டிக் கொண்ட தோழர்
வெல்லத்தான் மொழிப்போரில் தமைக்கொ டுத்தார்
வியப்புமிகும் அத்துடிப்பே இன்றும் வேண்டும் 5

துடிக்கட்டும் உமதுமனம்; தமிழ்மொ ழிக்குத்
துளியேனும் பகைவருமேல் தூள்தூ ளாக
வெடிக்கட்டும் அப்பகைமை; தமிழர் நெஞ்சம்
விழிக்கட்டும்; இந்திமொழி ஆதிக் கத்தை
முடிக்கட்டும் இன்றோடு; கூடி எங்கும்
முழங்கட்டும் தமிழ்முழக்கம்; தமிழர் கைகள்
அடிக்கட்டும் போர்முரசு; பகைவர் கூட்டம்
அலறட்டும் சிதறட்டும் அஞ்சி நின்றே 6

## 39. நியாய விலைக்கடை

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

**{'குமுகம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம்பெற்றுள்ளது}**

நிறுக்கின்ற பொருள்களிலும் அளக்கின்ற
பொருள்களிலும் நேர்மை யுண்டா?
வெறுக்கின்ற படியன்றோ விளையாடல்
புரிகின்றார்; விலைகொ டுப்போர்
கறுத்தெழுந்தால் நியாயவிலைக் கடையென்பார்
நியாயத்தைக் கடையில் விற்பார்;
பொறுத்திருந்து பார்த்திருப்போர் பொங்கியெழும்
நாளொன்று புகுந்தே தீரும் 1

வாங்காதார் பெயர்களெலாம் வாங்கியதாப்
பதிந்திருக்கும்; வந்து விட்டால்
தீங்காளர் பொருள்நேற்றே தீர்ந்ததென்பார்;
அதுவேறு தெருவிற் போகும்;
போங்காலம் வாராதோ? பொதுமக்கள்
ஏங்குகிறார்; புல்ல ருக்கே
ஆங்காலம் ஆயிற்றா? அழிகாலம்
மேவிற்றா? ஆரே கண்டார்! 2

கண்ணெதிரில் அளந்தபொருள், கடையிலவர்
நிறுத்தபொருள் கடுகி வந்து
பின்னதனைப் பார்த்தாலோ பெற்றதெலாங்
குறைந்திருக்கும்; பெருத்த மாயம்
பண்ணிடுவர்; சுட்டெரிக்கும் பகற்பொழுதில்
வரிசைதனிற் பிச்சை மாந்தர்
நண்ணுதல்போல் மகளிரெலாம் நடுத்தெருவில்
காத்திருப்பர்; நடைதான் மிஞ்சும். 3

விலையின்றி மனமிளகி ஈவதுபோல்
வந்தவரை விரட்டு கின்றார்;
தலையொன்று குறையாமல் தருவதற்குப்
பொருள்மிகவே தந்தி ருந்தும்
இலையென்று மொழிகின்றார் ஈவிரக்கம்
இல்லாமல் ஏய்த்து நிற்பார்;
கலையென்று கவருவதைக் கற்றவர்கள்
களியாட்டம் ஆடு கின்றார் 4

இந்தநிலை மாறாதா? இழிவுநிலை
தீராதா? எளிமை யாக
வந்தவர்கள் பொருள்வாங்கி வாழும்நிலை
வாராதா? வாக்கு வாங்க
வந்தவர்கள், துயர்நீங்க வழியொன்றுஞ்
செய்யாரா? வாடும் மக்கள்
நொந்தமனம் ஆறாதா? நூறாண்டு
சென்றாலும் நோய்தீ ராதா? 5

விடுதலையும் பெற்றுவிட்டோம் விழாக்களையும்
நடத்திவிட்டோம் விண்கூ டத்தில்
படுவிரைவில் ஏறிவிட்டோம் பலமுனையிற்
சிறந்துவிட்டோம் பாழும் நாட்டிற்
கெடுதலையே காணுகிறோம் கீழ்மைகளே
பூணுகிறோம் கிடக்கும் மக்கள்
படுதுயரந் தீரவில்லை பஞ்சங்கள்
மாறவில்லை பயனே இல்லை. 6

விடுதலையால் என்னபயன்? வேளைதொறும்
நுகர்பொருள்கள் விரைந்து வாங்கப்
படுதுயரம் உறலாமோ? பகிர்ந்தளிக்குங்
கடைகளிலும் பழிகள் செய்யும்
கெடுதலைகள் வரலாமோ? கெடுநிலையில்
மக்களினும் கிடக்க லாமோ?
விடுதலையால் என்னபயன்? வெற்றொலியால்
என்னபயன்? வினவு கின்றோம் 7

விடைபகர வாயில்லை விடுதலையை
நுகர்வோர்க்கு விழிகள் இல்லை
இடையிலெவர் உரைத்தாலும் இருசெவியும்
சரியில்லை என்னே விந்தை!
குடைநிழலில் அமர்ந்திருப்போர் கூர்வெயிலின்
வெம்மைதருங் கொடுமை காணார்
படைநடுங்கும் பெரும்புரட்சி பரவிவரின்
மக்கள்துயர் பறந்து போகும் 8

## 40. கண்ணீர்த்துளி

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

பொற்புடைச் செல்வி பூம்புகார்த் தலைவி
கற்புடைத் தெய்வம் கண்ணகி கொழுநனைத்
தீதிலாச் செம்மலைத்திருடன் எனப்பொய்
ஓதிய உரைகேட் டோரா மன்னவன்
கொன்றனன் என்றதோர் கொடுமொழி செவிபுக
மன்றம் சென்றனள் வழக்கினில் வென்றனள்;
கன்றிய நெஞ்சங் கலங்கிய கண்ணகி
துன்றிய கண்ணீர்த் துளிகளைச் சிந்தினள்;
அன்றவள் சிந்திய அவலக் கண்ணீர்
கொன்றது மதுரைக் கொடுங்கோ லரசை
அல்லல் தாங்கா தழுத கண்ணீர்
மல்லல் வயல்சூழ் மாநில மன்னர்
செல்வம் தேய்க்கும் செறுபடை யாமெனச்
சொல்லும் திருமறைச் சொற்பொருள் மெய்யே
எளியவர் சிந்தும் விழிநீர்த் துளிகள்
ஒளிவிடும் வாட்படை ஒக்கும் என்பர்;
ஆம்ஆம் அத்துளி அத்துணை யாற்றல்
தாமே பெற்றுள தன்மையை அறிகுவம்;
படியர சோச்சும் பான்மையைப் பெற்ற
முடியர சாகினும் குடியர சாகினும்
கொடுங்கோ லோச்சுங் குறிப்பினைக் காட்டிற்
சுடுங்கோ லாகும் சொட்டுங் கண்ணீர்!
வெந்துயர் பொறாது சிந்திய விழிநீர்
செந்தழலாகிச் சிதறிப் பரவும்;
சுவைபட முன்பு சொன்னதை மறந்து
புவியர சாள்வோர் புகுத்திய வஞ்சப்
பொல்லாங் கனைத்தும் பொசுக்கும் நசுக்கும்;
நல்லோர் ஆட்சி நாட்டினில் மலர்த்தும்;
அரியணை யமர்வோர் ஆய்ந்துளங் கொள்க;
நெறியறி மாந்தர் அறிவுரை யதனைச்
செவிபுக விடுக; செற்றமுங் கலாமும்
தவிர்க தவிர்க; தந்நலம் விடுக;
கொலையுங் களவும் நிலைபெறல் காணின்

அலைவுறும் எமதுளம் ஆறாது துடிக்கும்
விழிகள் கனன்று வெந்நீர் வடிக்கும்
விழிநீர் வடிப்பும் வெந்துயர்த் துடிப்பும்
அழித்தே அமையும் அதனெதிர் ஒன்றிலை;
விழித்தனர் மாந்தர் விளையாட் டயரேல்;
செருக்கும் தருக்கும் பெருக்கு வீராயின்
நொறுக்கும் அவைநுமை நொடிப்பொழு ததனில்
பொதுநலக் காவலர் பொறுப்பினை ஏற்றவர்
எதுநலம் எனவுணர்ந் தேத்துக கோலே

## 41. உலகை நினையுங்கள்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

உழைப்பினை நல்கா திங்கே
உறங்கியே காலம் போக்கிப்
பிழைப்பினை நடத்த எண்ணல்
பேதமைச் செயலே யாகும்
தொழத்தகும் தொழிலோர் சோம்பித்
துஞ்சிடின் நாட்டு வாழ்வு
விழத்தகும் அன்றோ? உங்கள்
வியர்வையால் உலகம் பூக்கும். 1

அயர்வினை அகற்றல் வேண்டும்
ஆர்ப்பொலி தவிர்த்தல் வேண்டும்
வியர்வையைச் சிந்தி நாளும்
விளைவினைப் பெருக்கல் வேண்டும்
பயன்பெற விழைவோர் என்றும்
பாடுபட் டுயர்தல் வேண்டும்
செயலிவை தொழிலோர் கொண்டால்
சீர்பெறும் நமது நாடு 2

நாட்டினை உயர்த்தும் மாந்தர்
உழைப்பினை நல்கல் மட்டும்
கேட்டினை அகற்று மென்று
கிளத்திலேன்; செல்வம் அள்ளிப்
போட்டவர் நெஞ்சும் சற்றுப்
புதுமையிற் பொருந்தல் வேண்டும்
மேட்டுயர் வாழ்க்கை யொன்றே
மேன்மையென் றெண்ணல் வேண்டா 3

உடலினை வருத்தி இந்த
உலகினைக் காக்கும் மாந்தர்
படுதுயர் கண்டும் நெஞ்சிற்
பரிவொடும் அணுக லின்றிச்
சுடர்தரும் உழைப்பை யெல்லாம்
சுரண்டியே வாழ எண்ணின்
அடகெடும் வாழ்வை நீங்கள்
அடையும்நாள் தொலைவில் இல்லை 4

அடிமுத லாகத் தங்கள்
அயர்விலா உழைப்பை வைத்தோர்
மிடிபடத் துயரில் வீழ்ந்தால்
மேவிடும் புரட்சி திண்ணம்;
அடியொடு சுரண்டும் ஆசை
அகற்றிடல் வேண்டும்; இந்தப்
படியுணர்ந் துரிய பங்கைப்
பகிர்ந்தளித் திடுதல் வேண்டும். 5

இணைந்தொரு துறையிற் புக்கோர்
இரண்டணி யாகத் தம்முள்
[1]தணந்துளம் பகைமை கொண்டு
[2]தரியல ராதல் கண்டேன்
சுணங்கிடும் எனது நெஞ்சிற்
சுடுதழல் பெய்தல் போல
உணர்ந்துளம் வாடு கின்றேன்
இருவர்க்கும் ஒன்று சொல்வேன் 6

உரியவர் உழைப்போர் எல்லாம்
உலகினை நினைதல் வேண்டும்
இருமுனை யாகத் தம்மை
எண்ணியே பிரிந்து நின்றால்
வருமிடர் நாட்டுக் கன்றோ?
வளமெலாம் சிதையுமன்றோ?
ஒருமுனை யாக நின்றால்
உலகெலாம் வாழும் அன்றே. 7

---

**அருஞ்சொற் பொருள்:—** 1. தணந்து – பிரிந்து. 2. தரியலர் – பகைவர்.

## 42. திருமணச் சந்தை

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

கனிமுதற் பொருள்கள் யாவும்
விற்றிடுங் கடைக ளுண்டு
நுனிபடுங் கொம்பு மாடு
நுவல்விலைச் சந்தை யுண்டு
மனிதனை விற்குஞ் சந்தை
மற்றுமொன் றுண்டு கண்டீர்;
இனிஅவன் உயர்தி ணைக்குள்
இயம்புதற் குரிய னாகான் 1

மருள்படும் மனிதன், பெற்ற
மகனையே விலைக்கு விற்று
வருதலைக் காணு கின்றேன்
வதைபடும் மனத்த னானேன்
பெருகிய குமுகா யத்திற்
பிணிதரு புழுவே யானான்
திருமணச் சந்தை யென்று
செப்பியே திரிகின் றானே 2

‘பிணியெதும் அணுகா வண்ணம்
பெருந்தொகை செலவு செய்தேன்;
துணிமணி கல்விக் கான
தொகையையும் சிறிது பாரும்;
பணியிடை அமர்த்து தற்குப்
பணத்தினை யள்ளித் தந்தேன்;
மணமகன் வேண்டு மென்றால்
மற்றிவை வேண்டும்’ என்பான். 3

பெற்றவன் மகனுக் காகப்
பெருந்தொகை செலவு செய்தல்
உற்றதோர் கடமை யாகும்;
உணர்விலான் ஊரி லுள்ள
மற்றவன் தலையிற் கையை
வைத்திட நினைந்தாற் பெண்ணைப்
பெற்றவன் யாது செய்வான்
பித்தனாய் மாற லன்றி? 4

பெண்களைப் பெற்ற தந்தை
பெருந்தொகைக் கியலா னாகிப்
புண்களை நெஞ்சில் வைத்துப்
புழுங்கியே வாடு கின்றான்
பெண்களும் மணங்கா ணாராய்ப்
பேதலித் தழிந்து போனார்;
எண்ணிநல் வழியைக் காண
எவனுமே விரும்ப வில்லை. 5

கண்கவர் எழிலைப் பாரான்
கல்வியின் பெருமை காணான்
பெண்மகள் குணத்தை நோக்கான்

பிறவுயர் பண்பும் நோக்கான்
உண்மையில் மனப்பொ ருத்தம்
உள்ளதா எனவும் எண்ணான்
பொன்பொருள் மட்டுந் தானே
புன்மகன் நோக்கு கின்றான்! 6

திட்டங்கள் பலவு ரைத்தோம்
செயலிலே பயனே இல்லை
சட்டங்கள் பலவுஞ் செய்தோம்
தப்புகள் அகல வில்லை
தட்டுங்கை யோசைக் காகத்
தடபுடல் மேடைப் பேச்சு
மட்டுந்தான் காணு கின்றோம்
மற்றவர் வீட்டிற் காணோம். 7

எத்தனைப் பெண்கள் தாமே
சாவினை ஏற்றுக் கொண்டார்!
எத்தனைப் பெண்கள் வாழ்வில்
இடறிவீழ்ந் துழலு கின்றார்!
இத்தனைக் கொடுமை கண்டும்
இரக்கமே தோன்ற வில்லை!
பித்தளை வெள்ளி தங்கம்
கற்பினிற் பேசு கின்றான்! 8

கற்பினில் [1]மாற்றுக் காணுங்
கண்கள்தாம் எவனுக் குண்டு?
பற்பல தீமை யெல்லாம்
பல்கிடச் செய்தான் யாவன்?
பொற்பினர் வாழ்வை யிங்குப்
பொசுங்கிடச் செய்தான் யாவன்?
கற்படு மனத்தன் காசைக்
கருதினன் அதனா லன்றோ? 9

பெண்களை [2]அழுக வைத்தான்;
பெரும்பொருள் காணாப் பெற்றோர்
கண்களை அழவும் வைத்தான்
காசுக்கே அடிமை யானான்;
மண்ணுறும் மகளிர் வாழ்வை
மதிப்புரை செய்வ தற்குக்
கண்ணிலான் இவனுக் கெந்தக்
கயவனிங் குரிமை தந்தான்? 10

அழுகையில் மகளிர் வாழ்க்கை
ஆழ்ந்தினிப் போகா வண்ணம்
பழிபடக் குமுகா யத்தைப்
பாழ்ங்குழி தள்ளா வண்ணம்
எழில்பெறச் செய்ய வேண்டின்
இரக்கமே யில்லா மாக்கள்
இழிவினை அகற்ற வேண்டும்
இளைஞரும் விழித்தல் வேண்டும். 11

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. மாற்று – உயர்வு தாழ்வு. 2. அழுக – கெட.

## 43. உலகம் சிவக்கும்

**(நூல்–நெஞ்சு பொறுக்கவில்லையே)**

பிறப்பினால் உயர்வு தாழ்வு
பித்தினாற் பேசு கின்றார்
கருப்பினால் தோற்சி வப்பால்
பிளவுகள் காட்டு கின்றார்
பொறுக்குமா இன்னும் வையம்
என்றுளம் பொங்கி நின்றால்
தருக்கினாற் சாற்று கின்றார்
சாத்திரம் வகுத்த தென்றே 1

பொருளினால் உயர்ந்த வாழ்வு
பூமியிற் பெற்றா ருள்ளார்
தெருளிலா மதிய ராகித்
தெருவிடை வாழ்வா ருள்ளார்
இருளிலே சிலரும் மிக்க
ஒளியிலே சிலரும் இங்கே
விரிவதேன்? முறையா என்றால்
கடவுளின் விதியா மென்பார் 2

பொறுப்பிலார் பேசு கின்ற
பொய்ம்மலி சாத்தி ரத்தை
வெறுப்புகள் விளையா வண்ணம்
மறைத்திடும் விதியை, உண்மைக்
கருத்திலார் கழறி நிற்கும்
கற்பனைக் கடவுள் தம்மை
நொறுக்கினால் அன்றி நாட்டின்
நோய்களே நீங்கா இங்கே. 3

கடவுளும் விதியும் மற்றைச்
சாத்திரக் கசடு யாவும்
மடமையுள் வீழ்த்து தற்கும்
மக்களைச் சாய்ப்ப தற்கும்
உடந்தையென் றாகு மானால்
உலகினர் அவற்றை யெல்லாம்
கடலினுள் வீசி விட்டு
வழியொன்று காணல் வேண்டும் 4

தலைவிதி யென்று நம்பி
முயற்சியில் தாழ்ந்து போனார்
சிலைகளைக் கடவு ளாக்கிச்
சீரெலாம் சிதைந்து போனார்
கலையெனச் சாத்தி ரத்தைக்
கருதியே கவிழ்ந்து போனார்
நிலைமிகத் தாழ்ந்த பின்னும்
அவற்றையேன் நினைக்க வேண்டும்? 5

உலகினை உயர்த்து தற்கே
உழைப்பவர் தாழ்ந்தோர் ஆனார்
பலருடை உழைப்பை யுண்டு
பருத்தவர் உயர்ந்தோர் ஆனார்
நலமெலாந் தமதே ஆக்க
நாடுவோர் ஏய்க்கும் நாள்கள்
நிலவுதல் இனிமே லில்லை
நிமிர்ந்தனர் தாழ்ந்தோ ரெல்லாம் 6

பிறப்பினாற் பொருளால் ஆன
பிரிவுகள் தொலைக்கும் நல்ல
அறத்தினால் வளரும் நாடே
அடிமைகள் இல்லா நாடாம்
திறத்தினாற் பொதுமை காணத்
திறந்தனர் விழியை மக்கள்;
கரப்பினார் சொல்லும் எந்தக்
கதையையும் நம்ப மாட்டார் 7

பொறுத்தது போது மென்றே
பொங்கியே எழுந்து விட்டார்;
கருத்தினில் தெளிவு பெற்றார்
கண்களில் ஒளியும் பெற்றார்;
மறுப்பவர் பழைய பாட்டை
மன்றிடைப் படிக்க வந்தால்
ஒறுத்திட அஞ்ச மாட்டார்
உலகமே சிவப்பாய் மாறும் 8

தெய்வத்தின் குரல்தான் என்றால்
தீயிட்டு வேள்வி செய்வர்
பொய்வைத்த புளுகு மூட்டைப்

புராணத்தைச் சான்று காட்டின்
நெய்வைத்து நெருப்பு மூட்டித்
தூள்பட நீறு செய்வர்
மைவைத்த நெஞ்ச மெல்லாம்
மண்ணொடு மண்ணாய்ப் போகும் 9

எத்தனை நாள்கள் ஏய்ப்பர்?
ஏய்ப்பரை நம்பி வந்தோர்
எத்தனை நாள்பொ றுப்பர்?
இருளிடை உழன்ற மக்கள்,
புத்தொளிப் பொதுமை காட்டிப்
புறப்படுங் கதிரைக் கண்டார்;
இத்தரை முழுதுஞ் செம்மை
எழில்நிறங் கொண்டு தோன்றும் 10

## 44. ‘தேவ தாசி’

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

நாதசுரம் எனுங்கருவி நற்றமிழர்
கண்டதனை நாடு மெச்ச
ஊதுவதில் வல்லோரை உயர்ந்தஇசை
வேளாளர் என்று ரைப்பர்,
வேதசுரர் இதுகண்டு வியர்க்கின்றார்
வெறுக்கின்றார்; மேள காரர்
ஈதொன்றே அவ்வினத்துக் கேற்றபெயர்
மாற்றுவதேன்? என்றுஞ் சொன்னார்
1

முப்புரியார் பிரமன்றன் முகத்துதித்தார்
வேதபுரி முதல்வ ரானார்
இப்படியேன் சொலல்வேண்டும்? இவர்க்கென்ன
இடையூறு? சாதி யெல்லாம்
அப்படியே அமைத்திடவும் அவரினத்தை
உயர்த்திடவும் ஆசை கொண்டு
தப்புரைகள் உரைப்பவரைத் தாள்வணங்கி
வாழ்த்துவதா தமிழன் பண்பு? 2

சாமியெனும் பெயராலே தமிழினத்துப்
பெண்களுக்குப் பொட்டுக் கட்டிக்
காமுகர்கள் துய்ப்பதற்குக் கருணைமொழி
புகல்கின்றார் காஞ்சிப் பீடம்;
பூமியிலே மீண்டுமதைப் புதுப்பிக்க
முயல்கின்றார் பூணூல் மார்பர்;
காமுகர்க்குத் தூதுசெலக் கடைவழியில்
நிற்கின்றார் கடவுள் தூதர் 3

‘பரத்தைமையை நாடாதீர் பரத்தினையே
நாடுங்கள் பாவஞ் செய்யேல்
அறச்செயலே செய்க’வென அறிவுரைகள்
ஆற்றாமல் அதைவி டுத்துப்
பரத்தைமைக்குக் கடைதிறப்புச் செய்கின்றார்;
பாழ்நரகிற் பதிவு செய்யப்
புறப்படவே விருப்பமெனில் போகட்டும்
நாமவர்க்குப் புகல்வ தென்ன? 4

கடவுளையும் மறைகளையும் கட்டுரைத்த
கதைகளையுங் காட்டிக் காட்டி
மடமையிலே வீழ்த்திஎமை மாட்டினத்திற்
கீழாக மதித்து வந்தீர்
தடமனத்தேம் நீர்விரித்த தந்திரங்கள்
தெரியாமல் தாழ்ந்து கெட்டோம்
எடுபிடிகள் எனஇனியும் எமைக்கருதின்
எரிமலைகள் வெடிக்கக் காண்பீர்
5

தருப்பைப்புல் மந்திரங்கள் தகுதியிலாச்
சாத்திரங்கள் தமிழர் நெஞ்சில்
வெறுப்பைத்தான் வளர்த்ததலால் வேறொன்றும்
செய்யவில்லை; மீண்டும் அந்த
நெருப்பைத்தான் வெடிக்கிடங்கிற் கொட்டுகிறீர்
விளைவென்னாம்? நினைத்துப் பாரும்
பொறுப்புணர்ந்தா பேசுகிறீர் பூசுரரே
பொறுமைக்கும் எல்லை யுண்டு 6

நிமிர்குடுமிப் பூதேவர் எனச்சொல்லி
நரிச்செயல்கள் நிகழ்த்தும் கூட்டம்,
திமிர்பிடித்துப் பணம்படைத்துத் திரிகின்ற
மனிதவுருத் திமிங்கி லங்கள்
எமதினத்தைப் பாழ்படுத்த இழிதேவ
தாசிமுறை வேண்டு மென்று
நமநமத்துத் திரிகின்றார் நல்லதொரு
புண்ணியமாம் நவிலு கின்றார்
7

ஆண்டவற்குச் செய்கின்ற புண்ணியமென்
றறைகின்ற ஆரி யத்தீர்
பூண்டஎழில் நிறைநல்லார் புதுநடனக்
கலைவல்லார் புண்ணியத்தை
வேண்டுகிற உமதினத்திற் பலருண்டே
அத்தருநல் விறலி யர்க்குப்
பூண்டுகொளப் பொட்டொன்று கட்டிவிடும்
புண்ணியத்தைக் கட்டிக் கொள்ளும் 8

நாலுமுகன் திருமுகத்திற் பிறந்தவன்நான்
இவ்வண்ணம் நவிலு கின்றான்
மூலமகன் தொடைப்பிறந்த மூடனுமா
அவ்வண்ணம் மொழிய வேண்டும்?
ஏலமிட மானத்தை எண்ணுகிறான்
இழிமகனாய் எதிரி நீட்டும்
காலதனைக் கழுவுகிறான் கடைத்தெருவில்
நாயானான் கயவன் ஆனான் 9

கவருமெழில் கண்டுமனங் கலங்கியதால்
மயங்கியதால் கயவ னான
இவனனைய மடையர்சிலர் இனுமிங்கே
இருப்பதனால் மீண்டும் மீண்டும்
தவறுபல செய்கின்றார்; தன்மான
இனவுணர்வு தழைத்து விட்டால்
எவர்வருவார் நமைப்பழிக்க? இடுப்பொடிந்து
போகாரோ எதுவுஞ் சொன்னால்?
10

அவ்வினத்தின் அரவணைப்புக் காசையுடன்
அலைகின்றான் அதனால் தன்னை
எவ்விலைக்கும் விற்கின்றான் எதுசெய்தும்
வாழ்கின்றான் இனத்தின் மானம்
தெவ்வரிடம் பறிபோகத் திரிகின்றான்
தன்னலமே தேடு கின்றான்
இவ்வகையான் உடன்பிறந்த நோயானான்
எதிரிக்குப் பாயும் ஆனான்.
11

## 45. ஒப்பனை மகளிர்

**(நூல்—நெஞ்சு பொறுக்கவில்லையே)**

அழகெனுமோர் சொல்லுக்கே அமைந்தபொருள்
மங்கையர்தாம் எனினும் அன்னார்
[1]இழைமணியால் பொன்னகையால் எழில்மலரால்
முகப்பொடியால் இடையிற் கட்டும்
[2]இழைதெரியும் மெல்லுடையால் விரல்நகத்தின்

சாயத்தால் இதழின் பூச்சால்
[3]குழைவகையால் சிறுகச்சால் கூடிவரும்
எழில்காணக் கோலஞ் செய்வர். 1

ஒப்பனைகள் பலசெய்தும் உருவத்தை
அழகுறுத்தல் உலகி யற்கை;
அப்பணியில் தலைசிறந்தார் அரிவையர்தாம்
தனித்தன்மை அவர்க்கே யாகும்;
அப்பப்ப! ஆனாலும் அவர்செய்யுங்
கோலங்கள் ஆள்ம யக்கும்
தப்பினையே செய்துவிடும்; தவறுகளைச்
சுட்டுதற்குத் தயங்கு கின்றேன் 2

தயக்கத்தால் கூச்சத்தால் தவறுகளைக்
கண்டிக்கத் தவறி விட்டால்
மயக்கத்தால் உழல்கின்ற மதியில்லார்
கூட்டத்துள் வாழ்வேன் ஆவேன்;
நயத்தைத்தான் அவர்மனத்தில் விதைக்கத்தான்
நாடுகிறேன் நாணம் ஒன்றை
நயக்கத்தான் நவில்கின்றேன்; [4]நல்லாராய்
வாழ்வதைத்தான் நயந்து சொல்வேன் 3

உள்ளாடை தெரியும்வணம் உடுத்துவதா
நாகரிகம்? உடலிற் பாதி
[5]தெள்ளாகத் தெரியும்வகை சீலைகளை
ஒதுக்குவதா சீர்த்த பண்பு?
கள்ளாலே மயங்குதல்போற் கன்னியர்கள்
இடைவயிறு காணும் வண்ணம்
தள்ளாடிச் சரிந்துவிழத் [6]தானைகளைத்
தளர்த்துவதா தாய்மைப் பண்பு? 4

பவளஇதழ் உடையரெனும் பாவையர்தாம்
கற்றாளைப் பழத்தின் சாயம்
தவழஅதிற் றடவிடுவர்; தளிர்விரலில்
வளர்நகத்தில் தகத கக்கும்
[7]சிவலைநிறம் பூசிடுவர்; செம்முகத்தில்
வெண்பொடியைத் தேய்த்து வைப்பர்;
அவரவர்தம் நிலைக்கேற்ப ஆடையெனச்
சிறுதுணியை [8]அசைத்து நிற்பர். 5

கடைச்சரக்கால் உடலழகு காண்பவர்க்குத்
தெரிவுறவே கட்டி விட்டுக்
கடைத்தெருவில் திரிவதுவா கன்னியர்க்கு
முன்னேற்றம்? கலைகள் யாவும்
படிப்பதிலே நூல்பலவும் படைப்பதிலே
இல்லறத்துப் பாங்கு கற்று
நடப்பதில் உயர்பதவி தொடுப்பதிலே
முன்னேற்றம் நாட வேண்டும் 6

தோற்றத்தால் நடையுடையால் தொழத்தக்க
நாகரிகம் தோகை யர்க்குச்
சாற்றத்தான் விழைகின்றேன் சால்புநெறி
கண்டறிந்து சார்தல் வேண்டும்;
ஏற்றத்தால் பெண்மகளிர் மாநாடு
கூட்டிடுவோர் இழிவைச் சற்றே
மாற்றத்தாம் முயல்வரெனில் மங்கையர்க்கு
நலமாகும் மாண்பும் ஆகும். 7

சரிநிகராய் வாழ்வதுதான் சரியெனவே
உடன்படலில் தாழ்ச்சி யில்லை
உரிமையெனும் பேர்சொல்லிப் பெண்மையையே
உரிவதைநான் ஒப்ப வில்லை
கரிமனத்தர் விழிவழியே கனல்புகுத
ஒப்பனைகள் காட்டி யெங்குந்
திரிவதுதான் உரிமையெனிற் சீறியதைச்
சாய்ப்பதுதான் எனது வேலை. 8

---

**அருஞ்சொற் பொருள்:–**
1. இழைத்துச் செய்யப்பட்ட. 2. நூல், 3. குழை –காதணி, 4. நல்லாராய் –நல்லவராக, பெண்களாக. 5. தெள்ளாகத் –தெளிவாக, 6. தானை –ஆடை, 7. சிவலை –சிவப்பு நிறம், 8. அசைத்து –கட்டி.

## 46. உரிமையும் கடமையும்
**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

அறுசீர் விருத்தம்

வேண்டுவீர் உரிமை என்றால்
வெறுப்பவர் எவரு மில்லை,
தாண்டிடேல் கடமை யாற்ற
எனச்சொலுந் தலைவ ருண்டோ?
ஈண்டிய தொழிலோர் நும்முள்
இணைகுவீர் உரிமை என்றால்;
வேண்டுக கடமை என்றால்
விலகியே விரைந்து செல்வீர்! 1

உழைப்பவர் நலிந்து வாட,
ஒருசிலர் சுரண்டி வாழ,
இழைத்திடுங் கொடுமை காணின்
எதிர்த்திடும் உரிமை வேண்டும்;
உழைப்பினை நல்க லின்றி
உறுபயன் மட்டும் வேண்டிப்
பிழைப்பதைப் பிழையே என்று
பேசிடுங் கடமை வேண்டும். 2

வீட்டினைப் புரப்ப தற்கே
விரும்புவீர் உரிமை தன்னை;
நாட்டினை உயர்த்து தற்குக்
கடமையை நயந்த துண்டோ?
கோட்டமில் மனத்தாற் சொல்வேன்
கூறிய இரண்டும் வேண்டும்;
கேட்டினை நாமே செய்தால்
கிளர்ச்சியாற் பயனே இல்லை; 3

இருள்மிகு நமது வீட்டில்
எழில்ஒளி புகுவ தற்குப்
பொருள்வரு வழியை மூடிப்
போடுதல் முறையோ? சொல்வீர்!
மருளுற நாட்டு மக்கள்
மயக்குறச் செய்த பின்னர்
வரும்நம துரிமை என்றால்
வாழ்வென ஒன்று வேண்டா. 4

நம்முடை வறுமை நீக்க
நாட்டினை வறுமை செய்தால்
அம்முறை சரிஎன் றோதார்
ஆதலின் தோழர் தம்மை
வம்மென அழைப்போம் கூடி
வந்தபின் உழைப்போம் ஒன்றாய்;
நம்முயர் நாடுங் காப்போம்
நலமுற வீடுங் காப்போம். 5

## 47. தீண்டாமை
**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

கலிவெண்பா

நெஞ்சத்தால் தூயனவன் நேர்மை பிழைத்தறியான்
வஞ்சத்தை ஓர்நாளும் வாழ்வதனிற் கண்டதில்லை;
ஆண்டான் திருவடிக்கே ஆளடிமை செய்துவந்தான்
ஆண்டவன் கோவிலுக் காகும் பொருளெல்லாம்
கொட்டிக் குவித்திருந்தான் கூலிஎன வேலைசெய்து
கொட்டிக் குவித்தான் குலமாண்ட வேதியர்க்கு;
தன்னலமே கண்டதில்லை; [1]தாண்டவமே கண்டதில்லை
முன்னமவன் கண்டதில்லை; முத்திதரும் தில்லைஎனக்
கண்டவர்கள் சொன்னதுண்டு கண்டுவரும் ஆர்வமிகக்
கொண்டெழுந்தான் அன்புளத்துத் தொண்டனவன்
ஆதனூர்
வந்துதித்த நந்தனவன்; வந்தவனை அந்தணர்கள்
செந்தழலிற் போட்டுச் சிவபெருமான் பேர்சொல்லிச்
செம்மைப் படுத்திவிட்டார்; செம்மல் கருமேனி
வெம்மைச் சுடுதழலால் வேதித்தார் வேதியர்கள்;
உள்ளத்தாற் சொல்லால் உடலால் எனுமூன்றால்
எள்ளத் தனைபிறழா தென்றும் இருப்பானை
ஓங்கும் ஒழுக்கத் துயர்ந்தானை எவ்வெவர்க்கும்
தீங்கு நினையானைச் சேரிவாழ் நந்தனைப்
பொன்னம் பலத்துட் புகுந்து வழிபடத்தான்
முன்னம் தடுத்தார்கள் முப்புரியார்; முப்புரத்தைச்
சுட்டான் திருமுன்னர்த் தொண்டன் திருவுருவைச்
சுட்டார் புடமிட்டார் தூய உடலாக்கி
உட்புகுதச் செய்தார்; ஒருவிழியில் தீயுடையான்
அப்புறந்தான் ஏற்றான் அவனை எனவுரைப்பர்;
தீண்டாமை என்றதொரு தீய பழக்கத்தால்
ஆண்டான் அடிமைஎனும் ஆணவமுங் கொண்டதனால்
சேரிப் புறத்திற் சிறுகுடிலில் வந்தவனைப்
பேரில் உயர்ந்தோர் பெருந்தீங்கு செய்துவிட்டார்;
சீரங்கம் கொண்டானைச் சிந்தை நினைந்துருகிப்
பாரெங்கும் பாடிப் பரவிவரும் [2]பாணனவன்
ஊரின் ஒருபால் ஒதுங்கிக் கிடக்குமொரு
சேரி தருங்குடிசை செய்தவத்தால் வந்தமகன்
காவிரியின் ஓர்கரையில் கண்மூடிக் கொண்டங்கு
நாவிரிக்கும் பாடல் நலம்விரித்துப் பாடுங்காற்
பூசைக்குச் செல்கின்ற பூசுரர்கள் அப்பாடல்
ஓசை செவிபுகுத ஓர்பால் தனிநின்று
செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர்கள் ஆனமையால்
வெந்தழல்போற் சீறி விரைந்தெறிந்தார் கல்லெடுத்து;
வீட்டெறிந்த கல்லின் விரைவால் தலையுடைந்து
கொட்டுகிற செங்குருதி கூடியது காவிரியில்;
கண்டுநிகர் பாடல் கசிந்துருகிப் பாடியவன்
மண்டை உடைய மதிகலங்கக் காரணமென்?
தீண்டாமை யன்றோஅத் தீய பழக்கத்தைப்
பூண்டோடு தீயிற் பொசுக்கும்நாள் எந்நாளோ?
தாழுங் குமுகாயம் சாதிச் சழக்ககற்றி
வாழும்நாள் எந்நாள் வரும்?

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. தாண்டவமே கண்டதில்லை – நடனமே கண்ட தில்லைப்பதி. 2. பாணன் – திருப்பாணாழ்வார்.

## 48. நல்ல சமையமடா!

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

கலிவெண்பா

ஒன்றே குலமென்றும் ஒன்றே கடவுளென்றும்
நன்றே புரிந்து நலம்பெற்றோம் முன்னாளில்;
நீறுந் திருமண்ணும் நெற்றிதனில் நாமணிந்தோம்
சேரும் படியாகச் செய்தணிந்தோம் தொப்பிகளை;
நெஞ்சிற் சிலுவைதனை நேராகத் தொங்கவிட்டோம்
[1]மஞ்ஞைதருந் தோகை மதித்தெடுத்துக் கைப்பிடித்தோம்;
நீண்ட சடைமுடித்தோம்; நேருந் தலைமழித்தோம்;
வேண்டித் [2]துவர்தரித்தோம்; வேள்விக் கடன்முடித்தோம்
ஊரில்லை பேரில்லை ஒன்றும் வடிவில்லை
மாறில்லை ஓர்பிறப்பும் மாய்வும் உடையதிலை
என்றெல்லாங் கூறும் இறைவனுக்கு வைத்தபெயர்
ஒன்றிரண்டா ஓரா யிரமன்றோ! மேலுமுண்டு;
பாரில் பிறக்கவைத்தோம்; பாவந் துயர்கொடுத்தோம்;
தேரில் நிறுத்தித் திருமணங்கள் செய்துவைத்தோம்;
ஆட்டாத ஆட்டமெலாம் ஆண்டவனை ஆட்டிவைத்தோம்
பூட்டா மனக்கதவைப் பூட்டிவிட்டுப் பூசைசெய்தோம்;
இன்று பலவாகி எங்கும் வளர்சமையம்
நன்று புரியாமல் நாட்டில் எளியவரை
ஏய்த்துப் பிழைப்போர்க் கிடமாகிப் போனதலால்
பூத்தநலம் உண்டோ புகல்?

## 49. வாழ்வுப் பாதையில் – பக்தி

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

‘ஆண்டவனே எனைக்காக்க உன்னை யன்றி
ஆருள்ளார் இவ்வுலகில்? வேண்டி நிற்போர்
வேண்டுவதை வேண்டியவா றளித்துக் காத்து
வினைதீர்க்க வல்லவனே! கருணை நெஞ்சம்
பூண்டவனே! பொன்பொருள்கள் போகம் ஈவோய்!
புத்தாண்டுப் பிறப்புக்குப் பரிசுச் சீட்டு
வேண்டியவை வாங்கியுளேன்; மற்ற வர்க்கு
வீழாமல் தடுத்ததனைக் காப்பா யப்பா!’ 1

‘பரிசென்றால் ஒன்றிரண்டா? பத்து லட்சம்!
பகவானே உனைநம்பி வாங்கி யுள்ளேன்;
அரசென்றால் ஈதன்றோ அரசு! நல்ல
ஆண்டவனும் நீயன்றோ? பத்து லட்சம்
பரிசொன்றும் எனக்குவரச் செய்து விட்டால்
பாரிலுனை எந்நாளும் மறக்க மாட்டேன்;
வரிசையுடன் வெள்ளிவிளக் கொன்று வாங்கி
வைத்திடுவேன் சந்நிதியில்; அருள்வா யப்பா!’
2

ஆண்டவன்முன் இவ்வண்ணம் வேண்டி நிற்கும்
அடியர்பலர் கோவிலுக்கு வந்து செல்வர்;
ஈண்டவர்தம் செயலெல்லாம் பக்தி என்றால்
இனியுலகம் ஏற்காது வெறுத்துத் தள்ளும்;
வேண்டுகிற பரிசிலது மற்ற வர்க்கு
விழவேண்டா என்னுந்தன் னலமா பக்தி?
காண்டகுநல் லின்பமெலாம் வையம் பெற்றுக்
களித்திடுக என்பதன்றோ பக்தி யாகும் 3

கையூட்டுத் தருவதுவா கடவுள் பக்தி?
காசுபணம் தந்ததனால் பங்குக் காக
நெய்யூற்றும் விளக்கொன்று தரலா பக்தி?
நினைந்தழுங்கும் காசுபண வெறியா பக்தி?
பையூட்டம் பெறுவதற்குக் கடவுள் முன்னே
பத்துலட்சம் பத்துலட்சம் எனலா பக்தி?
பொய்யூட்டும் வாணிகத்தைக் கோவி லுக்குள்
புகுத்துவதும் ஏய்ப்பதுமா நல்ல பக்தி? 4

முற்றிநலம் பழுத்திருக்கும் அன்பி னைத்தான்
மொழிந்திடுவர் பக்தியென உணர்ந்த நல்லோர்
பற்றியெழும் அவ்வன்பால் உளமு ருக்கிப்
பண்படுத்திக் கொள்வதுதான் பக்தி யாகும்;
பற்றுடனே மாந்தரிடம் அன்பு செய்யப்
பயிலாமல் கடவுளுக்குப் பூசை செய்தால்
உற்றவனும் ஏற்பதில்லை; உலகந் தானும்
ஒருபோதும் பக்தியெனக் கொள்வ தில்லை.
5

கைவிரல்கள் செபமாலை உருட்டும், மெய்யில்
கால்வரையும் நீண்டதொரு சட்டை தொங்கும்,
உய்வழிகள் மற்றவர்க்கே அவர்வாய் ஓதும்,
உளக்குறிப்பை முகத்தாடி மறைத்துக் காட்டும்,
பொய்விளையும் நெஞ்சத்தை மறைக்கும் சின்னம்
பொலிவுடனே அசைந்தாடி மார்பில் தொங்கும்;
செய்வினைகள் திரைமறைவில் கயமை காட்டும்;
திரிகின்றார் பக்தியெனும் பசுத்தோல் போர்த்து. 6

மெய்யான மண்டலங்கள், மறுமை யின்பம்,
மேலுலகம், என்றெல்லாம் நமக்குக் கூறிப்
பொய்யான வேடத்தால் உலகை ஏய்க்கும்
புரட்டர்களின் நடிப்பைப்போய் பக்தி என்றால்
அய்யய்யோ ஆண்டவனே நைந்து போவான்;
'ஆத்திகரின் நாத்திகரே மேலாம்' என்பான்,
'செய்யாத செயல்செய்யும் கொடிய ரெல்லாம்
சேர்ந்திருக்கும் மறைவிடமா பக்தி' என்பான்.
7

வட்டிக்கு வட்டியென்று வாங்கி, ஏழை
வயிறெரிய நெஞ்செரிய அவன்றன் வாழ்வில்
பட்டினிக்கு வழிவகுத்துச் சுரண்டிச் சேர்த்துப்
பாடுபடும் அவன்வீட்டில் இருளுண் டாக்கி,
விட்டெரிக்கும் மின்விளக்கால் கோவி லுக்குள்
வெளிச்சத்தைப் போடுகிறான்; விளக்கின் மேலே
ஒட்டுகிறான் தன்பெயரை; விளம்ப ரத்தின்
ஒருபகுதி தானீது பக்தி யில்லை. 8

ஏசுசிவன் மால்அல்லா என்ற பேரால்
எத்தனையோ உண்டாக்கி வணங்கி நிற்போம்;
ஆசையுடன் ஒன்றின்பால் அன்பு கொண்டே
அயல்மதத்தை அவ்விறையைத் தாக்கித் தாழ்த்திப்
பேசிவரும் மதவெறியில் குறைந்தோ மல்லோம்;
பிழையுறநாம் ஏசலெலாம் யாரைச் சாரும்?
ஈசனையே சென்றடையும் என்பர் மேலோர்
எல்லாமும் அவனாக இருப்ப தாலே. 9

ஓரிறையைப் பலபெயரால் வாழ்த்து கின்ற
உண்மைநிலை உணராமல் ஒன்றைத் தாழ்த்தி
ஊறறிய வாய்மதத்தால் ஏசி வந்தால்
ஒப்புவனோ அவ்விறைவன் பக்தி என்று?
வேரரிந்து போட்டுவிட்டுச் செடியை நட்டு
விடுகின்ற தண்ணீரால் பயனே இல்லை;
ஆறறிவு படைத்துளநாம் கடவுள் என்னும்
அன்புருவை நன்குணர்ந்து பேணல் வேண்டும்
10

தொட்டருகில் சென்றுதொழ உரிமை யில்லை;
தூரத்தே நின்றுதொழக் கூறு கின்றார்;
மட்டவிழும் மலர்தூவித் தாய்மொ ழிச்சொல்
வழிபாடு செய்வதற்கும் வழியே யில்லை;
எட்டுணையின் அளவேனும் உண்மை யின்றி
ஏய்க்கின்றார் கடவுளையே என்றால், பக்தி
மொட்டவிழும் என்றின்னும் நம்ப லாமோ?
மூடமதிச் செயலுக்கா பக்தி யின்பேர்? 11

தெருவோரம் குத்துக்கல் தெரிந்தாற் போதும்
சிலநாளிற் கடவுளென அதன்பேர் மாறும்;
திருநீறும் குங்குமமும் ஒருநாள் தோன்றும்;
சிலமலர்கள் அதன்தலைமேல் மறுநாள் தோன்றும்;
வருவோரும் போவோரும் அதனைக் கண்டு
வழிநின்று வியந்துபல பேசிச் செல்வர்;
மறுநாளே பாவாடை யம்ம னாகும்
மலர்கூடம் ஊதுபத்தி வாடை வீசும். 12

பாவாடை யம்மனுக்கு வெள்ளி செவ்வாய்
பாலாலே அபிடேகம் நடக்கும்; அங்கே
பூவோடு வருமாதர் கூட்டம் சேரும்;
பூவாடைப் பக்தர்களின் குழுவும் கூடும்;
போவாரும் வருவாரும் மிகுத லாலே
பொலிவுள்ள உண்டியலும் அங்கே தோன்றும்;
ஓவாதே உண்டியலும் நிறைவ தாலே
உள்நாட்டுப் பூசல்களும் மிகவே தோன்றும். 13

குத்துக்கல் சாமிக்குச் செல்வம் பொங்கிக்
குவிகின்ற நிலைவரலும் உரிமைக் காகப்
பத்தருக்குள் அடிதடிகள் குத்து வெட்டுப்
பரிமாறல் தவறாமல் நடப்ப துண்டு;
குத்துக்கல் எனதென்றே ஒருவன் சொல்வான்;
குங்குமத்தை முதன்முதலில் நான்தான் போட்டுப்
பத்திக்கு வழிவகுத்தேன் என்பான் மற்றோன்;
பணமெனக்கே சொந்தமென்பான் இடத்துக் காரன் 14

வெள்ளிமணி, தங்கமணி, [1]அக்கு மாலை,
வேடத்தால் பொலிகின்ற சமயச் சின்னம்,
வெள்ளமென வருதிரளில் ஓடும் தேர்கள்,
வீதியிலே கண்டபடி செய்யும் பூசை,
கொள்ளைநிதி மிகத்திரட்டி இறைவன் பேரால்
கூத்தாடல், எனுமிவைதாம் பக்தி யல்ல;
உள்ளமதில் தூய்மைநிலை இல்லை என்றால்
ஒவ்வொன்றும் வெளிப்பகட்டுச் செயலே யாகும்,
15

காயமிது மாயமென்பார், காய கல்பம்
கண்டருந்தித் தம்முடலைக் காயம் செய்வார்;
மாயமடா இவ்வுலகம் என்பார், நம்மை
மயக்கிமிகப் பொருள்தொகுக்க மாயம் செய்வார்;
தேயுமடா சிற்றின்பம் என்பார், அந்தத்
தெரிவையர்தம் நலம்நினைந்தே தேய்வர் நாளும்;
சாயமெலாம் வெளுத்திடினும் மீண்டும் பூசித்
தம்வாழ்வைப் பக்தியினால் மெருகு செய்வார். 16

நிலையாமை உணர்த்துவதே பக்தி என்றால்
நீணிலத்தை வெறுத்துவிடல் பக்தி யன்று;
நிலையாமை தனையுணர்ந்தே உலக வாழ்வில்
நிலைத்தசெயல் செய்வதுதான் பக்தி யாகும்;
கலையாமல் தன்மனத்தைக் கட்டுப் பாட்டில்
கட்டுறுத்துக் கடமைகளைச் செய்வ தொன்றே
உலையாத கண்ணியஞ்சேர் பக்தி யாகும்;
உலகத்தை விரும்புவதே உயர்ந்த பக்தி. 17

மேலுலக வாழ்வுக்கு வழியைக் காட்ட
மேன்மை பெறும் இவ்வாழ்வை மாயம்என்போர்
பாலுடனே முந்திரிகைப் பழங்கள் உண்டு
பயன்பெறுவர் பணம்பெறுவர் பக்தி என்பர்;
காலளவு தொங்குகிற தங்க மாலை
கழுத்தணிந்து மெய்யடியார் போல்ந டிக்கும்
போலிகளை நம்பாதீர்! கண்ணை மூடிப்
புலம்பாதீர்! விழிதிறந்தே உலகைக் காண்பீர்! 18

கையகத்தே பழமிருக்கக் கிளையில் தொங்கும்
கனிதனக்கே வாய்திறந்து நிற்றல் நன்றோ?
வையகத்தை நம்பாமல் பக்தி என்று
வானத்தை நோக்குவதால் என்ன கண்டோம்;
[2]மையகத்தில் படராமல் தூய்மை செய்து,
வாழ்ந்துவரும் தாயகத்தின் பக்தி பூண்டு
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து காட்டி
வானுலகை இவ்வுலகில் படைப்போம் வாரீர்!
19

---

**பாடற் குறிப்பு:–** திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில் பாடியது–14.4.1970. வானொலியில் இப்பாடலைக் கேட்ட பக்தர்கள் கண்டனக் கடிதங்கள் கணக்கின்றி எழுதினர்.

**அருஞ்சொற் பொருள்:–**

1. அக்குமாலை – உருத்திராக்க மாலை.
2. மை அகத்தில் படராமல் – மனத்தில் மாசுகள் படராமல்.

## 50. பாரதி கண்ட பெண்ணுரிமை

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

நாட்டுணர்வு மூட்டி நரம்பில் முறுக்கேற்றிப்
பாட்டுணர்வைத் தீட்டிப் படைவலிமை காட்டியவன்,
பாரதியாய்ப் பாவலனாய்ப் பார்புரக்குங் காவலனாய்ச்
சீரதிகம் கொண்டிலங்குஞ் செம்மலவன், 'இந்நாட்டை
யாரடிமை கொண்டான்?' எனக்கனன்று நோக்கியவன்
பேரறிவால் ஒருண்மை பேசுகின்றான்; 'மானிடரே!
வீட்டடிமை நீக்காமல் நாட்டடிமை போக்கவரின்
ஏட்டளவில் நிற்குமலால் எள்ளளவும் நன்மையிலை;
பெண்ணை மிதித்துவிட்டு மண்ணை மதித்தெழுந்தீர்!
கண்ணை யிழந்தபினர்க் காட்சியிலே ஏதுபயன்?
மண்ணுரிமை வேண்டுமெனில் பெண்ணுரிமை வேண்டுகநீர்
கண்ணிரண்டில் தாழ்வுயர்வு காட்டல் முறையாமோ?
பட்டங்கள் ஆள்வதுவும் சட்டங்கள் செய்வதுவும்
மட்டவிழும் கோதையர்க்கு மட்டும் விலக்காமோ?
கூர்த்த மதியுடைமை கோதையர்க்கும் உண்டிங்கே
யார்க்கும் இளைப்பில்லை எத்துறைக்கும் நேர்நிற்பர்;
பூத்தொடுக்கும் மெல்விரலால் போர்தொடுப்பர்; பூவுலகம்
ஏத்தெடுக்கச் செங்கோல் எடுத்திருப்பர் ஆமாம்;
அடுப்பிற் குழலூதும் அவ்வாயால் மூங்கில்
கொடுக்குங் குழலூதும் கொற்றம் அவர்க்குண்டு:
பாலூட்டித் தாலாட்டிப் பாட்டிசைத்த தாய்க்குலத்தை,
மாலூட்டுந் துன்பத்தை மாற்றுகின்ற பெண்ணினத்தைப்
பேணா தடிமையென்று பேசுகின்றீர்! சற்றேனும்
நாணா துரிமைபெற நாடுகிறீர் பித்துடையீர்!
பேயென்றும் நாயென்றும் பேதுரைகள் கொட்டுகிறீர்!
தாயென்றுந் தங்கையென்றுந் தக்கதுணை என்றெல்லாம்
உற்றமுறை சொல்வதற்கிங் குற்றவரார்? மாதன்றோ?
குற்றமெலாஞ் செய்தாலும் பற்றுடனே காப்பவரார்?
அன்னை நகிற்பாலால் ஆற்றல் மிகப்பெற்றீர்,
மின்னை நிகர்மனையின் விஞ்சுசுவைத் தேன்மொழியால்
விண்ணையுஞ் சாடிவரும் வீரமுற்றீர், என்றாலும்
பெண்ணை யிகழ்கின்றீர்! பெண்ணுக்கு முன்னேற்றம்
தாராத நாட்டில் தருமுரிமை மெய்யாகச்
சேராது; பொய்யன்று செப்பும் வரலாறே,'
'இன்றுரிமை வேண்டி எழுந்துவிட்டார் பெண்ணினத்தார்;
நன்றன்று பெண்ணுரிமை; நால்வேதம் ஒவ்வாது
அடிமைப் பிறப்பாகும் அப்பிறவி'' என்றால்
கடிதே அதைப்பொசுக்கக் காட்டுகிறான் தீப்பந்தம்;
மங்கையர்க்குச் சார்பாக மாவீரன் பாடுவதை
இங்கெடுத்துப் போற்றுவமேல் ஏற்றமுறும் நம்நாடு;
'ஞானம் உரிமைஅறம் நல்லகுடிப் பெண்மகட்குப்
பேணுங் குணமாகும்; பீடுபெறும் இக்குணங்கள்
பெற்றுள்ள மாதரார் பெற்றெடுத்த நன்மக்கள்
கற்றறிவும்; தாய்நாடு காக்குங் கடனுணர்வும்
முற்றி யிருப்பர்; முளைத்துவரும் நெற்பயிர்கள்
உற்ற நிலத்தியல்பை ஒத்திருத்தல் உண்மையன்றோ?
எஞ்சாத ஞானத்தின் எக்களிப்பும், யாவர்க்கும்
அஞ்சாத நல்வழியும், ஆண்மையுறு நன்னடையும்,
நேர்கொண்ட பார்வையொடு நேரிழையார் பெற்றுவிடின்
சீர்கொண்ட நம்நாடு செம்மை திறம்பாது;
நாற்றிசையும் ஓங்கியுயர் நாடெல்லாம் இந்நாட்டுக்
கோற்றொடியார் சென்றங்குக் கூடும் புதுமைகளைக்
கொண்டுவந் தின்பங் கொழிக்கச் செயவேண்டும்;
மண்டும் புகழ்நூல்கள் வாழ்வில் உறுநுட்பம்
கற்றுத் தெளிந்துணர்ந்து கட்டுக் கதைதகர்த்துச்
சுற்றுந் துயர்துடைக்கச் சொல்லும் புதுமைப்பெண்
நாட்டுக்கு வேண்டு' மென நல்ல சுவைகூட்டும்
பாட்டுக்கு வேந்தனெனும் பாரதி சொல்லிவைத்தான்;
'பூவுலகோர் நம்நாட்டைப் போற்றிப் புகழவெனில்
பாவையர்கள் முன்னேற்றப் பாதைதனிற் சென்றிடுக'
என்னுங் கருத்தை எடுத்துரைத்தான்; அன்னவரும்
முன்னம் இருந்தகொடும் மூடப் பழக்கத்தைக்
கல்லிக் கடிந்தெறிந்து கல்வித் துறைமுதலாச்
சொல்லும் நெறியெல்லாந் தோன்றுகின்றார் முன்னேறி;
வாழ்விற் சரிபங்கு வாய்ப்பும் பெறுகின்றார்;
தாழ்வுறுதல் இல்லையவர் தாம்.

---

**பாடற் குறிப்பு:–** திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில் பாடியது– 14.1.1965.

## 51. இதுவா முன்னேற்றம்?

**(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)**

முன்னேற்றம் பெற்றுவிட்டீர் மூடத் தனத்தைஎலாம்
பின்னேற்றிச் சுட்டெரித்தீர் பேருவகை கொள்கின்றேன்;
ஆனாலுந் தாய்க்குலத்தீர் அன்பால்நான் ஒன்றுரைப்பேன்
மேனாளில் செய்தவற்றை மீண்டும் நினைந்துளத்தில்
வாங்கும் பழியுணர்வால் வாட்டாதீர் ஆண்குலத்தை;
ஏங்கும் அடிமையென எண்ணி வருத்தாதீர்;
முன்னேற்றம் என்றுரைத்து மொய்குழலீர் செய்பவைதாம்
இந்நாட்டுப் பண்பாட்டை எள்ளி நகையாடும்;
கார்குழலைக்; கொவ்வைக் கனியிதழை, வண்ணஎழில்
சேர்முகத்தைக், கைவிரலைச் செய்யும் அலங்கோலம்
கண்டுவிடின் ஐயஓ கண்ணீர் பெருகிவரும்;
பண்டை எழில்சிதைக்கும் பான்மையிதா முன்னேற்றம்?
கொண்டான் தவித்திருக்கக், கொஞ்சுமொழிப் பிள்ளைகளும்
திண்டாடிக் கூவத், தெரிவையர்கள் சங்கமென்று
வீட்டை மறந்துவிட்டு, வெள்ளைப் பொடிபூசி,
ஈட்டும் பணச்செருக்கை எல்லார்க்கும் காட்டுதல்போல்
கையில் அசைந்தாடக் காசுப்பை தொங்கவிட்டு
மெய்யின் எழில்காட்டி, வீதிஎலாஞ் சுற்றாதீர்;
பெண்மையைத்தான் தெய்வமென்று பேசுகின்றான் பாரதிஅம்
மென்மையைத்தான் ஏன்மறந்தீர்? மேவியநல் இல்லறத்தில்
ஏற்றுந் திருவிளக்கே ஏந்திழையார் என்றுரைப்பர்
தூற்றுந் தெருவிளக்காய்த் தோன்றுவதேன்? திங்கள்முகம்
காய்ந்துலர்ந்து காண்பதுமேன்? கட்டழகு மேனியெலாம்
தேய்ந்துலர்ந்து வாடியதேன்? சிந்திப்பீர்; நாகரிகப்
பேரால் கடைச்சரக்கைப் பேணுவதோ முன்னேற்றம்?
தீராப் பெருநோயாய்த் தீப்பழக்கம் சூழ்ந்ததுவே!
மேலாடை யில்லாமல் மேனி மறைக்காமல்
நூலாடை என்றுசொலி நுண்ணிடையில் சுற்றிவிட்டு
மெய்யெல்லாங் காட்டுகிற செய்கையிதோ முன்னேற்றம்?
தையல் இனத்துதித்தீர் தாய்க்குலத்தீர் ஆய்ந்துரைப்பீர்;
நாட்டை உருவாக்கும் நல்லகுலம் நீங்களம்மா
பாட்டால் குறைசொன்ன பான்மைக்குச் சீறாதீர்;
கல்வியிலும் ஆட்சியிலும் காட்டுந் திறமையிலும்
பல்வகையாம் நுண்கலையின் பாங்கினிலும் ஓர்நிகராய்
முன்னேற்றங் கொண்டுயர்க; மொய்குழலீர் நாடுயரும்
நன்னோக்கங் கொண்டுரைத்தேன் நான்.

---

**பாடற் குறிப்பு:–** திருச்சி வானொலி நிலையக் கவியரங்கில் பாடியது–14.1.1966

## 52. பெண்ணின் பெருமை

(நூல்:—மனிதனைத் தேடுகிறேன்)

ஆண்மைஎனப் பெண்மைஎனப் பேசு கின்ற
ஆயிரண்டின் கூட்டுறவே உலகம் ஆகும்;
ஆண்மையின்றிப் பெண்மையிலை பெண்மை யின்றி
ஆண்மையிலை; வீரமொன்று; காதல் ஒன்று;
மாண்பமைந்த இவ்விரண்டும் உயிர்ப்பண் பாகும்;
மாநிலத்தின் வளர்ச்சிக்கும் இவையே வித்தாம்;
வீண்மையது மேல்கீழென் றிவற்றுட் காணல்;
வியனுலகின் இருவிழியே ஆண்மை பெண்மை. 1

இருவிழியுள் உயர்ந்ததென ஒன்றைப் போற்றி
இழிந்ததென மற்றொன்றைத் தாழ்த்தித் தூற்றி
வருபவரும் உளராயின் பித்தர் [1]என்கோ?
வகைகெட்ட குறைபட்ட மதியர் என்கோ?
ஒருபொருளைக் காண்பதெனின் விழியி ரண்டும்
உறுதுணையாக் கொளலொன்றே இயற்கையாகும்;
அருள்வழியில் இல்லறந்தான் இனிதி யங்க
ஆண்மையுடன் பெண்மையிரு விழிக ளாகும். 2

ஆணுயர்வா பெண்ணுயர்வா என்ற ஐயம்
ஆறறிவுங் கூரறிவுங் கொண்டோர் தம்பால்
நாணும்வகை நானிலத்தில் தோன்றக் கண்டோம்;
நலமில்லாப் புலமில்லா ஐயம் அன்றோ?
சேணுயர்ந்த வானுலகத் தேவர் தாமும்
சிவம்பெரிதா சக்திபெரி தாவென் றார்த்து
மாண்பழியச் செய்தனரேல் மண்ணில் வாழும்
மாந்தரைநாம் குறைசொல்லிப் பயனே இல்லை. 3

பாருலகில் [2]இவ்வையம் தோன்றி விட்டால்
பாழ்படுமே [3]இவ்வையம் என்ப தோரான்
சீருறவே தன்னலத்தை மிகுப்பான் வேண்டிச்
சிந்தித்தான் ஒருவழியை; அற்றை ஞான்றே
பேரழகுப் பெண்ணினத்தை இழித்து ரைத்தான்
பேயென்றான் நாயென்றான் மாயை என்றான்;
ஆருடைய மணிவயிற்றில் பிறந்தா னோஅவ்
வன்னையைத்தான் இவ்வண்ணம் இகழ்ந்து
ரைத்தான்.4

அடக்கத்தின் மறுபெயரே பெண்மை; தூய
அழகியலின் மறுபதிப்பே பெண்மை; அன்புத்
தொடக்கத்தின் பிறப்பிடமே பெண்மை; உண்மைத்
தொண்டுக்கோர் இருப்பிடமே பெண்மை; மற்றோர்
இடர்க்கிரங்கும் அருமைத்தே பெண்மை; வந்த
இன்னல்கொளும் பொறுமைத்தே பெண்மை; செல்வ
முடக்கத்தும் ஒப்புரவுப் பண்பே பெண்மை;
மொழிந்தவற்றின் கூட்டணியே பெண்மை யாகும். 5

வணங்குகிற நிலைகொடுக்கும் அன்னை யாகி
வளர்காதற் கலைபடைக்கும் மனைவி யாகி,
உணங்கலிலா அன்புக்கோர் உடல்போல் நிற்கும்
உடன்வயிற்றுப் பிறப்பாகி, நெஞ்சில் ஊறும்
நுணங்கரிய பரிவுக்கே இலக்காய்த் தோன்றும்
நுண்ணிடைய மகளாகி, உலகில் நல்ல
குணங்களெலாம் வளர்வித்து மகிழ வைத்துக்
குளிர்வித்து வாழ்வதன்பேர் பெண்மை யாகும். 6

அறுசுவையாம் உணவனைத்தும் ஆக்கி வைப்பர்;
அலுவலுக்குச் சென்றயர்ந்த கொழுநன் மீண்டு
வருநெறியில் விழிவைத்துக் காத்து நிற்பர்;
வளர்கல்விப் பள்ளிக்குச் சென்ற பிள்ளை
குறுகுறுவென் றோடிவரும் திசையை நோக்கிக்
கூடத்தில் அமர்ந்திருப்பர்; இல்ல றத்தின்
உறுபயனை வருவிருந்தைப் பார்த்தி ருப்பர்
ஒருபோதும் தந்நலமே கருதாப் பெண்டிர் 7

கண்ணுக்குப் புலனாகும் அமைதி யைத்தான்
கற்றவர்கள் பெண்மைஎனக் கழறி நின்றார்;
மண்ணுக்குப் பொறையுடைமை உரிமை என்றால்
மங்கையர்க்குப் பிறகன்றோ அதற்குச் சேரும்;
எண்ணுக்குள் அடங்காத இன்ன லுற்றும்
எள்ளளவும் தளராமல் உலகைக் காக்கும்
பெண்ணுக்கு நிகராக ஒன்றுண் டோ?அப்
பிறப்பெடுக்க மாதவந்தான் வேண்டு மம்மா! 8

முன்பிருந்த தமிழ்மாந்தர் பெண்ணி னத்தின்
முதன்மைக்கு மதிப்பளித்துப் போற்றி வந்தார்;
அன்பிருந்த காரணத்தால் ஆண்மை பெண்மை
அவ்விரண்டும் சமமென்று நினைந்து வாழ்ந்தார்;
நன்குணர்ந்த அவ்வைமுதல் மகளிர் தம்மை
நாட்டிலுயர் அரசரெலாம் மதித்து வாழ்ந்தார்;
பின்பிறந்தார் எப்படியோ பேத லித்தார்
பெண்ணினத்தை வேதனைக்குள் வீழ்த்தி விட்டார்.
9

கற்புக்கும் பண்புக்கும் இல்ல றத்தின்
காப்புக்கும் கண்ணகித்தாய் சான்றாய் நின்றாள்;
பொற்புக்கும் நற்கலைக்கும் தன்ன லத்தைப்
போக்குதற்கும் மாதவித்தாய் சான்றாய் நின்றாள்;
[4]அற்புக்கும் அருளுக்கும் ஆசை எல்லாம்
அடியோடு துறந்ததற்கும் சான்றாய் இங்கு
நிற்றற்கு மேகலைபோல் யாரே உள்ளார்?
நேரிழையார் பெருமைசொல இவரே போதும். 10

அன்னையொடு தந்தையையும் தெய்வ மென்றார்;
ஆண்டவனை விளித்தவரோ அம்மே அப்பா
என்னவொரு பாவுரைத்தார்; சத்தி யாகிச்
சிவமாகி என்றவொரு பாட்டும் உண்டு;
முன்னையவர் மொழிந்தவற்றை உற்று நோக்கின்
முதலிடத்தைப் பெண்மைக்கே அளித்தி ருந்தும்
பின்னையவர் ஏன்மறுத்தார்? பெண்மைக் கேனோ
பிழைபுரிந்தார்? பிறபண்பின் நுழைவோ? யாதோ?
11

கல்விதனைக் கலைமகளென் றுரைத்து வைத்தார்;
கடலுலகை நிலமகளென் றழைத்து வந்தார்;
பல்வகைய செல்வத்தை மலரில் ஏற்றிப்
பணிந்த[5]திரு மகளெண்மர் என்றார்; நாளும்
சொல்விளையும் தமிழ்மொழியைத் தாயே என்றார்;
துணைசெய்யும் நன்மைஎலாம் நல்லார் என்றார்;
[6]எல்வளையர்க் கிவ்வண்ணம் மேன்மை தந்தும்
எப்படியோ பின்னாளிற் கீழ்மை தந்தார். 12

உயிரினத்திற் கமைந்ததோர் இயற்கைப் பண்பே
உரிமைஎனச் செம்பொருளோர் உரைப்பர்; ஆனால்
பயிரினத்தில் விலங்கினத்தில் பறந்து வாழும்
பறவைமுதல் அஃறிணையில் உரிமை யாவும்
உயிரெனவே நிலைபெறுங்கால், பகுத்து ணர்ந்த
உயர்திணையில் பெண்ணுரிமை மறுத்தல் ஏனோ?
[7]செயிர்அவர்மேல் தோன்றுவதேன்? சமமா எண்ணிச்
சேர்ந்துறைந்து வாழ்ந்தாலென்? குறைந்தா போகும்?
13

[8]தமிழ்முனிவர் தாய்க்குலத்தின் பெருமை எல்லாம்
தந்துரைத்த வண்ணமொரு சிலவே சொன்னேன்;
அமுதமொழிப் பாவையர்க்கு நான றிந்த
அன்புரைகள் ஒன்றிரண்டு புகலல் வேண்டும்;
உமியளவும் குறைசொல்லும் எண்ண மில்லை
ஒவ்வாத செயல்முறைகள் காணும் போது
குமுறுமென துளக்கருத்தைச் சொல்வ தொன்றே
கொண்டகடன்; எனக்கதுவே இயல்பும் ஆகும்.
14

கற்றறிந்த மகளிர்சிலர் திரும ணத்தைக்

கடிந்தொதுக்கக் காண்கின்றேன்; ‘கணவ னுக்கோர்
உற்றடிமை ஆவதுவோ? பிள்ளைப் பேறாம்
உறுதுயரால் சாவதுவோ? அடிமை அல்லோம்;
பெற்றவர்சொற் படிநடவோம்’ என்றே ஆர்ப்பர்;
பெண்ணினமே திருமணத்தை வெறுத்து விட்டால்
அற்றுவிடும் மாந்தரினம்; பிறப்பே இல்லை;
அன்னைநிலைக் கஞ்சுவதோ? இயல்போ ஈது? 15

மண்ணுரிமை வேட்டவர்தாம் வீரங் கொண்டு
மறப்போரைத் தொடங்கிடுவர் முறையும் ஆகும்;
பெண்ணுரிமை வேட்டெழுந்தோர் ஆண்மை யோடு
பெரும்போரைத் தொடங்குவது முறைமை யாமோ?
கண்ணுரிமை வேட்டெழுந்தே இமைக ளோடு
கடும்போரைத் தொடங்கிடுமேல் விளைவென் னாகும்
பெண்ணுரிமை யாதென்னில் அடிமை யின்றிப்
பேரன்பாற் சரிநிகராய் வாழ்தல் ஆகும். 16

மென்மையைத்தான் பெண்மையென உலகம் பேசும்
மெல்லியலார் இவ்வுண்மை உணர்தல் வேண்டும்;
வன்மையைத்தான் ஆண்மையென நவில்வர் மேலோர்;
வாய்ப்பிதனால் கடமைகளும் வேறு வேறாம்;
நன்மையைத்தான் நாடுகின்ற நங்கை யர்க்கும்
நடைமிகுந்த காளையர்க்கும் உரிமை ஒன்றாம்;
புன்மையைத்தான் விட்டொழித்துச் சமமாய் நின்று
புத்துலகப் பயணத்தைத் தொடங்கல் நன்றாம். 17

சுவையுணவைச் சமைப்பதற்கு மறுத்து விட்டால்
சொல்கின்ற பெண்ணுரிமை வந்தா சேரும்?
சுவையுணரா வாழ்வுமொரு வாழ்வா? நூல்கள்
தொடுகின்ற கைகளினாற் பானை தொட்டால்
நவைஎதுவும் நிகழ்வதில்லை; தாலாட் டுப்பா
நன்கறிந்த தாய்மார்தாம் எவரே உள்ளார்?
இவையறிந்தால் பிற்போக்காம்! நன்மை யாவும்
எடுத்தெறிந்தா முற்போக்குக் காணல் வேண்டும்? 18

முன்னேற்றம் என்றுசொலி முழங்கும் மாதர்
முகத்துக்குப் பொலிவுதரும் மஞ்சள் உண்டா?
மின்னேற்றம் பொலிமுகத்தில் பொடிமாப் பூசி
மீசைக்குப் போட்டியிடல் நன்றோ? சொல்வீர்!
என்னேற்றோம் இதுகாண? தாழ்ந்த கூந்தல்
எப்படியோ உயர்ந்ததம்மா; கொண்டை என்று
பன்னூற்று வகைகளிலே பாழ்ப டுத்திப்
பாவையரே அழகெல்லாஞ் சிரிக்கச் செய்தீர்! 19

கானத்தும் குகையிடத்தும் வாழ்ந்த நாளைக்
காட்டுகிறார் முன்னேறிச் செல்லும் நல்லார்;
மானத்தைக் காக்கின்ற ஆடை தன்னில்
மதியுடையார் சிக்கனத்தை விழையார் அம்மா;
மேனிக்கும் மனத்துக்கும் மென்மை வேண்டும்
மேலாடை ஒன்றுக்கும் மென்மை வேண்டா!
மானுக்கு நிகராக வாழ்தல் ஒன்றே
மாதர்க்கு நற்பெருமை யாகும் அம்மா! 20

---

**பாடற் குறிப்பு:–** தஞ்சை திரு.வி.க. நினைவுநாள் கவியரங்கில் பாடியது–9.1.1966.

**அருஞ்சொற் பொருள்:–**
1. என்கோ–என்பேனா. 2. இ+ஐயம். 3. இ+வையம். 4. அற்பு – அன்பு. 5. திருமகள் எண்மர் – அட்ட இலக்குமி. 6. எல்வளையர் – ஒலி பொருந்திய வளையலணிந்த பெண்டிர். 7. செயிர் – கோபம். 8. தமிழ் முனிவர் – திரு.வி.க.

## 53. அண்ணல் நடந்த அடிச்சுவடு
(நூல்:–மனிதனைத் தேடுகிறேன்)

கலிவெண்பா

பெற்றெடுத்த தாய்நாட்டைப் பேணி வளர்க்கின்ற
பற்றுளத்தை விட்டுப் பதராக வாழ்ந்திருந்தோம்;
வாணிகத்தால் நம்நாட்டில் வந்து புகுந்தவர்கள்
கூனுளத்து வஞ்சகர்தம் கூட்டுறவால் ஏமாற்றி
நாட்டைப் பறித்தார்கள் நாமடிமை ஆகிநின்றோம்;
கேட்டை உணராமல் கீழடிமை செய்துவந்தோம்;
தாயகத்துச் செல்வமெலாம் தம்முடைமை யாக்கிஅவர்
போயவற்றால் வாழ்வைப் புதுக்கி மகிழ்ந்தார்கள்;
எல்லா வளமிருந்தும் ஏழையராய் நாமிருந்தோம்;
பொல்லா வறுமையினால் பொன்றிக் கிடந்துழன்றோம்;
தாய்நாட்டு மண்ணில் தலைநிமிர்ந்து வாழாமல்
சேய்நாட்டார் காலடியிற் சிக்கித் தவித்தடிமை
செய்து மகிழ்ந்திருந்தோம் சிந்தனையும் அற்றிருந்தோம்;
கைதி எனவாழ்ந்து காலங் கழித்துவந்தோம்;
நாட்டுக் குரியவர்யார்? நாம்யார்? எனவறியோம்;
கூட்டுப் பறவையெனக் கொத்தடிமை ஆகியதால்
நல்ல நினைவிழந்து, நாகரிகப் பண்பிழந்து,
செல்லும் நெறிதிரிந்து, சீர்மை மிகவிழந்து,
கண்கள் இரண்டிருந்தும் காணாக் குருடர்களாய்,
நண்ணும் செவியிருந்தும் நல்லொலிகள் கேளாராய்,
வாயிருந்தும் ஊமையராய் வாழ்ந்திருந்தோம்; பெற்றெடுத்த
தாயிருந்தும் பிள்ளை தவிப்பதுபோல் நாமுழன்றோம்;
நாட்டுரிமை என்னும் நலமுணர மாட்டாமல்
ஆட்டுகிற வாறெல்லாம் ஆடித் தொழும்புசெய
நத்தித் திரிந்தோம்; நல்லறிவு தோன்றாமல்
பித்துப் பிடித்தவர்போல் பேதுற்றுக் கெட்டலைந்தோம்;
கும்பிட்டுக் கைகட்டிக் கூடார்பின் சென்றொழுகிக்
கும்பி வளர்ப்பதுவே கொள்கைஎன வாழ்ந்தோம்;
அறியாமைப் பேரிருளில் ஆழ்ந்ததனால் ஒன்றும்
புரியாமல் நின்று புலம்பி அலமந்தோம்;
அல்லல் பொறுக்காமல் ஆர்த்தெழுந்த நெஞ்சங்கள்
அல்லும் பகலும் அயர்வின்றிச் சிந்தித்துச்
‘சொந்த நிலந்தன்னைச் சூதருக்கோ விட்டுவிட
இந்த உடலெடுத்தோம்? ஏனிந்த வெங்கொடுமை?
கொத்தடிமை சாயாதோ? கோல்கொண்டார் செய்கொடுமை
அத்தனையும் மாயாதோ? ஆண்மை பிறவாதோ?’
என்று மயங்கி இடருற்று மாழ்குங்கால்
ஒன்று விடிவெள்ளி ஓர்பால் மலர்ந்ததுகாண்;
போர்வீரர் செய்த புரட்சி எனும் வெள்ளி
பார்மீது தோன்றிப் பரவிச் சுடர்காட்ட,
எங்கும் உரிமைஒளி ஏறிப் படர்ந்ததனால்
இங்கு விடிவுவரும் என்னும் நிலைகண்டோம்;
போர்பந்தர் என்னுமொரு பொற்புடைய பேர்தாங்கும்
ஊர்தந்த ஞாயிறென ஓர்மகன் தோன்றினன்காண்;
ஞாயிற்றின் தோற்றத்தால் ஞாலம் மலர்ச்சிபெறப்
போயிற் றடிமைஎனும் பொல்லா இருட்கூட்டம்;
தூக்கம் கலைந்தொழியத் துள்ளிக் குதித்தெழுந்தோம்;
ஏக்கம் அகன்றோட இன்பம் மிகப்பெற்றோம்;
காந்தம் எனஈர்க்கும் காந்தி எனும்பெயரை
ஏந்தும் சுடர்க்கதிரோன் இங்கெழுந்து வந்தனன்காண்;
தன்வாழ்வு நாடாமல் தான்பிறந்த தாயகத்தின்
பொன்வாழ்வு காண்பதற்குப் புண்வாழ்வை ஏற்றவனை,
தன்னையே நாட்டுக்குத் தந்துவிட்ட நல்லவனை,
இன்னல்கள் அத்தனையும் ஏற்று நடந்தவனை,
நோற்றுப் பிறந்தவனை நூறாண்டு சென்றபினும்
ஏற்றிப் புகழ்கின்றோம்; எஞ்ஞான்றும் போற்றிடுவோம்;
பூத்த மலர்முகமும் பொக்கைவாய்ப் புன்சிரிப்பும்
பார்த்துக் கலங்கிவிட்டார் பாராண்ட வெள்ளையர்கள்;
ஆடை குறைந்தாலும் ஆண்மை குறையாத
மேடை முழக்கத்தால் மேல்நாட்டார் அஞ்சிவிட்டார்;

தீங்கிழைத்துப் பார்த்தாலும் தீரன் கலங்காமல்
ஓங்கி வளருவதால் ஓலமிட்டார் ஆளவந்தார்;
'நாட்டுணர்ச்சி ஊட்டுகிறார்; நாட்டார் உரிமையினைக்
கேட்டெழுச்சி கொண்டு கிளர்ச்சிகளும் செய்கின்றார்;
கொத்தடிமை செய்கின்ற கூட்டம் கிளர்ந்தெழவே
வித்திட்டார்' என்றுரைத்து வெள்ளையர்கள் அண்ணலைக்
கூட்டுச் சிறைக்குள்ளே கூசா தடைத்துவைத்துப்
பூட்டிக் களித்தார்கள்; புண்ணியனோ அஞ்சவில்லை;
சிந்தனையை மாய்க்கச் சிறைக்கூடம் வல்லதென
எந்தவர லாறும் எடுத்துரைக்கக் கேட்டதிலை;
வெட்டவெட்டப் பூச்செடிகள் மீண்டும் செழித்துவரும்;
கொட்டிலுக்குள் வைத்த கொடிசெடிகள் சாளரத்துக்
கம்பிவழி புக்குக் கதிரோனை நோக்கிவரும்;
அம்புவியிற் காணும் அதுவே இயற்கைவிதி;
நாட்டினை உய்விக்க நாடி எழும்வீரர்
கேட்டினைக் கண்டஞ்சார்; கேடெல்லாம் பூமாலை;
பூட்டுஞ் சிறைச்சாலை பூஞ்சோலை யாகிவிடும்;
தீட்டுங் கொலைக்கருவி தேன்மலரா மாறிவிடும்;
நச்சருந்தச் சொன்னாலும் செக்கிழுக்கச் சொன்னாலும்
அச்சம் அவர்க்கில்லை ஆண்மையுடன் முன்னிற்பர்;
கொள்கை உடையானைக் கொண்ட குறிக்கோளில்
உள்ளம் உடையானை ஊராள்வோர் தண்டனைகள்
வாட்டிவிடும், கொள்கைகளை மாற்றிவிடும் என்றிருந்தால்
கோட்டைவிடுங் காட்சியைத்தான் கொண்டுவரும் கண்முன்னே;
அண்ணலிவர் பட்டதுயர் ஆள்வோரால் பட்டஅடி
எண்ணில் அடங்காது – எனினுமவர் வெற்றிகண்டார்;
பாருலகம் எங்கணுமே பாராத வெற்றியிது!
ஒருருவம் உண்மை உழைப்பால் பெறும்வெற்றி!
கொள்ளையிட வில்லை கொலைப்புரட்சி செய்யவில்லை
வெள்ளமெனச் செங்குருதி வீணாகச் சிந்தவில்லை
அன்புப் புரட்சி அகிம்சைப் புரட்சியினால்
இன்பத் திருநாட்டில் ஏற்பட்ட வெற்றியிது!
வெற்றித் திருமகனை, வேண்டும் விடுதலையைப்
பெற்றுக் கொடுத்தவனைப் பேணி வணங்கிடுவோம்;
அன்றொருநாள் மாந்தர் அறிவை இழந்துவிட்டுக்
கொன்றுதிரி காட்டுக் கொடுவிலங்காய் மாறிவிட்டார்;
கொள்ளை யடித்தார், கொலைகள் மிகச்செய்தார்;
அள்ளியள்ளி உண்டார் அரிவையர்தம் கற்பைஎலாம்;
பிள்ளையென்று பாரார் பெரியரென்றுந் தாம்நோக்கார்
வெள்ளைமனப் பெண்டிரென எள்ளளவும் எண்ணாராய்
மாமதங் கொண்டு மதவெறியால் மக்களெனும்
நாமமது கெட்டுவிட நாட்டு விலங்கானார்;
செத்து மடிந்தவர்தம் செந்நீரும், பெண்கற்பைக்
கொத்துங் கழுகாலே கொட்டுகிற கண்ணீரும்
ஆறாய்ப் பெருக அழுகுரலே மீதூரத்
தீராப் பழியொன்றே தேடும் நவகாளி;
கொண்ட மதத்தால் கொடுவிலங்கா மாறியதால்
பெண்டிர் கதறியழப் பேயாட்டம் ஆடுபவர்
செய்தீமை அண்ணல் செவிபுகுதக் கண்கலங்கி,
வெய்துயிர்த்து, ஆங்கே விரைந்து புறப்பட்டார்;
கண்டோர் தடுத்தார்நம் காந்திக்குத் தீங்கெதுவும்
உண்டாகும் என்றே உளந்துடித்து நின்றார்கள்;
அண்ணல் தயங்கவில்லை அன்றே புறப்பட்டார்;
'பண்ணுங் கொடுஞ்செயலைப் பார்த்தும் பொறுத்திடவோ?
என்நாட்டார் கையால் இறப்பு வருமானால்
முன்கூட்டிச் சென்று முடிந்து மகிழ்ந்திடுவேன்'
என்றுரைத்துக் கால்நோக எங்கும் நடந்தேகி
நன்றுரைத்தார்; அவ்வூரில் நல்லமைதி கண்டுவந்தார்;
தீண்டாமை என்னுமொரு தீய பழக்கத்தை
வேண்டா மெனத்தொடுத்த வீரப்போர் பற்பலவாம்;
ஆண்டவன் முன்னிலையில் அன்பர்கள் சென்றருளை
வேண்ட நினைப்பவர்க்கு வேண்டாம் தடைஎதுவும்
என்றே அறப்போரை ஏற்று நடத்தியதால்
அன்றே கதவடைத்த ஆலயங்கள் தாம்திறந்த;
நல்லொழுக்கம் காத்து நடந்து நமைக்காத்த
வள்ளலுக்கு நெஞ்சால் வணக்கஞ் செலுத்திடுவோம்;
உண்மை கடவுளென ஓதி ஒழுகிவந்த
அண்ணல் திருவடிக்கே அஞ்சலிகள் செய்திடுவோம்;
நம்மையே உய்விக்க நாளும் உழைத்துவந்த
பெம்மான் திருமார்பில் பேதை மனத்தேம்நாம்
தந்த பரிசிலென்ன? தந்தை மனம்மகிழ
வந்த பரிசிலென்ன? வாயில்லை சொல்லுதற்கு;
ஊரெல்லாம் நாடெல்லாம் ஓவென் றலறிடவும்
பாரெல்லாம் ஏங்கிடவும் பாவம் புரிந்துவிட்டோம்;
வாய்மை வழிநடந்தார், வாழும் நெறிநடந்தார்,
தீமை தருகின்ற தீண்டாமை வேண்டாவென்
றெண்ணி அதன்வண்ணம் எந்நாளும் தாம்நடந்தார்,
நண்ணார் தமக்கும் நலமே செயநடந்தார்,
இன்னா தனசெய்யா தென்றும் நடந்துவந்தார்,
ஒன்னார் மனமும் உருகும் படிநடந்தார்,
அஞ்சாமை என்னும் அரிய வழிநடந்தார்,
எஞ்சா விடுதலைக்கே எப்பொழு தும்நடந்தார்;
அண்ணல் நடந்த அடிச்சுவட்டில் நாம்நடக்க
எண்ணி முனைந்தோமா? எங்கோ நடந்துவிட்டோம்;
நாட்டை மறந்தோம் நமையே நாம்நினைந்தோம்;
கேட்டைப் பெருக்கினோம் கீழ்மைச் செயல்புரிந்தோம்;
நாட்டை வளமாக்கும் நல்ல தொழிலாளர்
பாட்டை மதித்தோமா? பாட்டாளி வாழ்வுயர
ஏட்டில் எழுதிவிட்டோம் எள்ளளவும் ஏற்றமில்லை;
வாட்டி வதைக்கின்றோம் வாழ்வைச் சுரண்டுகின்றோம்;
சாத்திரத்தின் பேர்சொல்லித் தாழ்த்திவிட்ட மக்களுக்கு
ஆத்திரங்கள் தோன்றாமுன் அன்போ டவர்தமக்குக்
கொட்டு முழக்கோடு கோவிற் கதவெல்லாம்
தட்டித் திறந்துவிட்டோம் சாதி தொலைத்தோமா?
தீண்டாமை வேண்டுமெனச் செப்பித் திரிகின்ற
வேண்டாத [1]பூரிகளும் மேலோங்கிப் பேசுகின்றார்;
தேர்தலிலே சாதி தெளியத் தெரியவைத்தோம்
ஊர்முழுதும் வேர்பலவாய் ஊன்றிக் கிளைக்கவிட்டோம்;
சாதிக்கு நன்மதிப்பு சற்றே குறைந்தாலும்
வீதிக்குள் வீட்டுக்குள் வீறு குறையவில்லை;
எல்லாரும் ஓரினமென் றெண்ணி நடக்கவெனச்
சொல்லாத ஏடில்லை, சொல்லாத் தலைவரிலை;
இன்னும் மதவெறியை எள்ளளவும் போக்கவிலை
என்னும் படியிங்கே எங்கும் மதச்சண்டை;
அண்ணல் நடந்த அடிச்சுவட்டைக் காணவில்லை
மண்ணெடுத்துத் தூவி மறைத்து நடக்கின்றோம்;
எத்தனையோ கல்தூரம் ஏந்தல் நடந்துவந்தார்,
அத்தனையும் அச்சுவடு தோன்றா தழித்துவிட்டோம்;
அன்னவர்க்கு மண்டபங்கள் அங்கங்கே கட்டிவைத்தோம்
சொன்னவற்றை மட்டும் தொலைவில் கட்டிவைத்தோம்;
நல்லோன் எடுத்துரைத்த நல்ல கருத்தெல்லாம்
உள்ளே நுழையாமல் உள்ளத்தைப் பூட்டிவிட்டோம்;
தந்தைக்கு நாம்செய்யும் தக்கதொரு கைம்மாறா?
சிந்தைக்கும் சொல்லுக்கும் செய்யும் செயலுக்கும்
தூய்மை கொடுத்துத் தொடர்பு படுத்திஅதை
வாய்மை எனஎண்ணி வாழ முயன்றோமா?
ஆர்ப்பரிப்பும் பூசனையும் அண்ணல் விழைவதில்லை
ஏற்புடைய வாய்மையே என்றும் உகந்திருந்தார்;
அண்ணல் நடந்த அடிச்சுவட்டைப் பார்த்ததன்மேல்
எண்ணி நடப்போம் இனி.

---

**பாடற் குறிப்பு:–** சேலம் மாவட்டம் அரூர் காந்தி நூற்றாண்டு விழாக் கவியரங்கில் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:–** 1.பூரி – பூரி சங்கராச்சாரி.

## 54. சிரித்த முகம்

**(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)**

சிரித்த முகம் வேணுமடி பெண்ணே – அதுதான்
சேவை செய்யும் பெண்களுக்கு
அழகு தரும் கண்ணே!

(சிரித்த)

வருத்தங்கள் வாழ்க்கையிலே வந்து வந்து போகும் – அது
வந்து புகும் வாழ்விலேதான்
இன்பம் வந்து சேரும்!

(சிரித்த)

கிள்ளக் கிள்ளத் தேயிலையும்
தழையுது பாரு – கடமை
செய்யச் செய்ய நன்மை வந்து
விளையுது யாரு...
மெள்ள மெள்ளத் துன்பம் வரும்
இயற்கையின் கூறு – அதைத்
தள்ளிவிட்டுக் கடமையிலே
இதயத்தைச் சேரு...

(சிரித்த)

மேடு பள்ளம் தாண்டுவதால்
சிதறிவிழும் அருவி – தரை
மேல்விழுந்து ஒன்றுகூடி அமைதியுடன் மருவி
நாடு நலம் செழிப்பதற்கு நாடி வருதல் போலே
நம்மிதயம் பதறிடாமல் பணிபுரிவோம் அதாலே...

(சிரித்த)

---

பாடற் குறிப்பு:–
1962இல் வெளிவந்த ‘கண்ணாடி மாளிகை’ திரைப்படப் பாடல்.

## 55. சீரழிந்து போகாதே
(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)

புண்ணான என் வாழ்வில்
பூத்திருக்கும் பொன் மலரே
கண்ணே இம்மண்ணுலகம்
காமுகரின் கோட்டமடி

பாம்பு தேள் வாழ்வது போல்
பாழுலகம் ஆனதடி
தேம்புகிற என் வயிற்றில்
தெள்ளமுதே ஏன் பிறந்தாய்?

கல்லும் கசிந்துருகும்
கண்டவர்கள் நெஞ்சுருகும்
வல்லி நான் பட்டதெல்லாம்
வாய் திறந்து சொன்னாலே.

(புண்ணான)

சோலை புகும் வண்டாகிச்
சூழ்ந்து வரும் ஓர் பாவி
ஆலை பிழி கரும்பாக
ஆக்கி எனை ஓட்டிவிட்டான்

பெற்றவரைப் போலிருந்து
பேணி எனை வளர்த்த
உத்தமனைக் கொன்று விட்டான்
உருக்குலையச் செய்து விட்டான்.

(புண்ணான)

என்ன துன்பம் வந்தாலும்
ஏய்த்து வரும் ஆடவரைச்
சின்னவளே நம்பாதே.
சீரழிந்து போகாதே!

---

பாடற் குறிப்பு:–
1962இல் வெளிவந்த ‘கண்ணாடி மாளிகை’ திரைப்படப் பாடல்.

## 56. பொய்மைகள் மாயும்
(நூல்:–நெஞ்சிற் பூத்தவை)

பாதை தெரியுது பார்
பண்பும் அறமும் அன்பும் மலர்ந்திடப்

(பாதை)

கோதையர் வாழ்வில் எத்தனை தொல்லை
கொடுமைகள் இழைப்போர் இனிமேல் இல்லை
பேதையராக வாழ்ந்தது போதும்
பெண்களின் துயரம் முடிந்தே தீரும்

(பாதை)

பேசும் மொழிகள் தேன் போலே இனிக்கும்
பெரியவர் போலே வேடம் இருக்கும்
பாசமெல்லாம் பிறர் பணத்தினில் இருக்கும்
பகட்டாய் நடிப்பவர் வேடத்தைக் கலைக்கும்

(பாதை)

எண்ணும் நினைப்பினில் எத்தனை வஞ்சம்
ஏனோ மனிதனுக் கிதுபோல் நெஞ்சம்
மண்ணில் இனிமேல் பொய்மைகள் மாயும்
மாயங்கள் யாவும் வேருடன் சாயும்

(பாதை)

---

பாடற் குறிப்பு:–
1962இல் வெளிவந்த ‘கண்ணாடி மாளிகை’ திரைப்படப் பாடல்.

## 57. இயற்கைப் பெரியார்
(நூல்:–ஞாயிறும் திங்களும்)

அடித்தளத்தில் சிந்தனைகள் கனிவ எம்போல்
அடர்ந்தடர்ந்து படர்ந்திருக்கும்; தோண்டத் தோண்ட
வெடித்தெழும்பும் அறிவெனும்நீர்; அறியா மாந்தர்
விளைக்கின்ற தீமைகளைத் தாங்கிக் கொள்ளும்;
பிடித்துழுது பிளப்பதுபோல் துயர்தந் தாலும்
பெரும்பயனே நல்குமிவை; நிலத்தின் பாங்கு;
படித்தறியா அடிமைகளாய்க் கிடந்தார் உய்யப்
பாடுபட்ட பெரியாரும் நிலமே போல்வார்.
1

ஆரியமாம் பாறையெலாம் சிதறி வீழ
ஆர்ப்பரித்துப் பாய்கின்ற அருவி நீராம்;
பாரிலுளார் தாகத்தைத் தீர்த்து வைக்கும்
பகுத்தறிவு சுரந்துவரும் ஊற்றின் நீராம்;
சோறுதர வளப்படுத்த ஊர்கள் தோறும்
சுற்றிவரும் வற்றாத ஆற்றின் நீராம்;
பேரறிவுச் சிந்தனையின் ஆழங் காணாப்
பெருங்கடலின் நீரெனவும் பெரியார் ஆனார்
2

வேண்டாத குப்பைகளை அழிப்ப தற்கு
வேண்டுவதும் நெருப்பேயாம்; இருட்டைப் போக்கத்
தூண்டுவதும் நெருப்பேயாம்; அரிசி தன்னைச்
சோறாக்க உதவுவதும் நெருப்பே யாகும்;
தீண்டாமை சாதிமதக் குப்பை மாய்க்கும்
தீயாகிப் பகுத்தறிவுச் சுடரைப் பாய்ச்சும்
தூண்டாத விளக்காகி மாந்த ராகத்
தொழும்பர்தமை ஆக்குகிற நெருப்பும் ஆனார்.
3

உயர்வானில் சிதறிவிழும் கல்லால் பூமி
உருண்டைக்குப் பழுதின்றிக் காக்கும் காற்று;
செயலறியா நம்மினத்தார், ஆரி யத்தின்
சிந்தனையில் வெடித்துவிழும் கற்கள் தாக்க
மயலாகி அழியாமல் பெரியார் காத்தார்;
மாந்தரெனப் பழுதின்றி வாழச் செய்தார்;
புயல்போலச் சினந்தெழுந்து வீசி னாலும்
பூமணக்கும் தென்றலென இனிமை செய்வார்.
4

பகலவனும் குளிர்மதியும் விண்ணுக் குண்டு
பார்ப்பவர்கள் அளந்தறியா அகலம் உண்டு;
பகுத்தறிவுப் பகலவனும் ஆய்ந்து தோய்ந்து
பண்பட்ட கூர்மதியும் அளந்து பார்த்துப்
புகலறியாச் சிந்தனையும் பெரியார்க் குண்டு;
பொலிவுதரும் *உடுக்கணங்கள் விண்ணுக் குண்டு
புகழ்பரப்பும் தொண்டருடுக் கணம்போற் சுற்றிப்
பொலிவுதரும் விண்ணாகி விளங்கு கின்றார்.
5

அனைத்துலக மாந்தரெனும் குமுகா யத்துள்
ஐயாவும் ஓரணுவே; அணுவின் ஆற்றல்
கனைத்துவரும் ஆரியமாம் நாக சாகி
கனல்விழுந்த பஞ்சாகிப் பொசுங்க வீழ்த்தும்;
மனத்துவளர் மடமையெனும் கோட்டை எல்லாம்
மண்ணோடு மண்ணாகத் தூள்தூள் ஆக்கும்;
இனத்துணர்வைப் பகுத்தறிவை ஆக்கும் ஆற்றல்
எந்நாளும் அவ்வணுவுள் நிறைந்தி ருக்கும்.
6

திருத்தலங்கள் திருக்கோவில் வேண்டா என்று
தெரிவித்தார் நம்பெரியார்; அவர்தம் பேச்சை
மறுத்துரைக்க இயலவில்லை; என்றா லும்நான்
மறுக்கின்றேன்; தன்மான இயக்கத் தார்க்குத்
திருத்தலங்கள் மூன்றுண்டு; நம்மை உய்யச்
செய்கின்ற வழிகாட்டும் தலங்க ளாகும்;
பொறுத்திருந்தால் என்மொழிக்குப் பொருள்வி ளங்கும்
புனிதமிகு தலங்களென ஏற்றுக் கொள்வீர்.
7

பாரோடு நம்நாடு சமமாய் நிற்கப்
பகுத்தறிவுக் கொள்கைஒளி பரவி நிற்கப்
பேரோடு புகழோடு தமிழி னத்தார்
பிறரோடு தலைநிமிர்ந்து வாழ்ந்து காட்டப்
பேரேடு பெற்றிலங்கும் தமிழ்மொ ழிக்குப்
பேரிடர்கள் வாராமல் தடுத்துக் காக்க
ஈரோடு காஞ்சிபுரம் ஆரூர் என்னும்
இம்மூன்றும் நம்மவர்க்குத் தலங்கள் அன்றோ?
8

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. உடுக்கணம் – விண்மீண் கூட்டம்.

## 58. உடைத்தெறிந்தார்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

உடைத்தார் அறப்போர் தொடுத்தார் – ஐயா
உலகம் எதிர்ப்பினும் ஒருதனி நின்றே
– உடைத்தார்

படைத்தான் அழித்தான் காத்தான் என்றெலாம்
படித்தார் உரைத்தார் பழங்கதைச் சடங்கெலாம்
–உடைத்தார்

எத்தனை எத்தனைச் சாதி – அவை
என்றும் நிலைத்திடச் சாத்திர நீதி
பித்தரைப் போலினும் ஓதி – வரும்
பீடைகள் கேடுகள் யாவையும் மோதி
–உடைத்தார்

கற்பனை பற்பல கூவிப் – பல
கட்டுக் கதைகளை மெய்யெனத் தூவி
விற்பனை செய்தனர் பாவி – அந்த
வெற்றுரை யாவையும் செற்றிடத் தாவி
–உடைத்தார்

---

**பாடற் குறிப்பு:–** 18.6.1979 ஆம் நாள் பாடியது.

## 59. தண்டுன்றும் பெரியார்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

தண்டுன்றிப் பெரியார் நடந்தார் – இங்குத்
தமிழ்மாந்தர் தடுமாறித் தாழ்வுக்குள் வீழாமல்
–தண்டு

தொண்டுகிழம் கொண்டாலும் துவளாமல் நின்றார்
தொண்டடிமை செய்தவர்கள் தோள்நிமிர்ந்து வென்றார்
–தண்டு

உயர்ந்தவர் தாழ்ந்தவர் பிறப்பினில் ஓதும்
ஒருசிலர் வாழ்வினை உயர்த்திடும் வேதம்
தயங்குதல் இன்றிஅம் மாயையை வீழ்த்திடத்
தமிழக மாந்தரைத் தட்டியெ ழுப்பிடத்
–தண்டு

சாத்திரக் கோத்திரச் சண்டைகள் நாளும்
சாதிகள் மோதிட மண்டைகள் வீழும்
ஆர்த்தெழும் ஐயாவின் போர்க்குரல் சூழ
அக்குரல் கேட்டதும் ஆரியம் வீழத்
–தண்டு

---

**பாடற் குறிப்பு:–** 19.6.1979 ஆம் நாள் பாடியது.

## 60. ஆதவன்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

நினைஆதவன் என்று நினையாதவன் – ஒன்றும்
புரியாதவன் கண்கள் திறவாதவன் – ஐயா
–நினை

மண்மேவும் அறியாமை இருள்யாவும் தொலைக்கும்
மதிமேவும் ஒளிபாயும் செயல்யாவும் விளைக்கும்
–நினை

ஆண்டவர் யார்உரிமை பூண்டவர் யாரென
அறியாமல் நினையாமல் அசையா திருந்தோம்
மூண்டெழும் போர்மறவன் போலெழுந் தார்த்தனை
முன்னவர் யாமெனும் உரிமையைச் சேர்த்தனை
–நினை

கண்மூடி வழக்கங்கள் கடவுளர் விளக்கங்கள்
கதைகூறும் மயக்கங்கள் கயமையின் குழப்பங்கள்
மண்மூடிப் போகட்டும் மடமைகள் சாகட்டும்
மதிமேவி வாழட்டும் எனக்கூறி மார்தட்டும்
–நினை

---

**பாடற் குறிப்பு:–** 20.6.1979 ஆம் நாள் பாடியது.

## 61. போராட்ட வீரர்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

போராட்டக் களங்கண்ட வீரர் – பாரில்
பொதுவான சமுதாய அறங்கண்ட சூரர்
–போராட்டக்

ஈரோட்டுத் தலந்தந்த பிள்ளை – எங்கள்
எழுச்சிக்கும் தன்மான உணர்ச்சிக்கும் தந்தை
வேரோட்ட முடியாமல் வேதக் – கொள்கை
வீணாகி மண்மீது பாழாகிச் சாயப்
–போராட்டக்

தீண்டாமை பின்னின் றிழுக்கும் – மாந்தர்
தெருவுக்குள் நடமாட முடியாத வைக்கம்

ஆண்டோடி நேராகச் சென்றார் – சாதி
ஆணவப் போருக்குள் போராடி வென்றார்
–போராட்டக்

தேசியம் என்றிங்குக் கூறி – இந்தி
தேவையென் றோதினர் ஆட்சியில் ஏறிப்
பேசிய வாதத்தைக் கொன்றார் – இந்தி
பின்னிட்டுச் சென்றோடக் களமொன்று கண்டார்
–போராட்டக்

கலைகற்க உண்டிங்குச் சாதி – நின்று
கைகட்டிப் பணிசெய்ய உண்டிங்குச் சாதி
நிலைமுற்றும் அடியோடு மாறிக் – கல்வி
நீரெங்கும் பாய்ந்தோடக் களங்கண்டார் மோதிப்
–போராட்டக்

கற்பனைக் கோட்டைக்குள் சாமி – பொய்கள்
கட்டிக் கதைக்கப் படித்தஆ சாமி
விற்பனைப் பாட்டுக்குள் பூமி – கெட்டு
வீழாமற் காத்தவர் ஈ.வே.ரா. சாமி
–போராட்டக்

வேத புராணங்கள் கோடி – மக்கள்
வீரத்தை மானத்தை மூடினர் பாடி
யாதென்று காரணம் நாடி – வீரம்
யாவையும் மீட்டவர் வெண்ணிறத் தாடி
–போராட்டக்

ஏடாண்ட பொய்யைப் படித்து – வாழ்வில்
ஏமாளி யாகினர் நாட்டைக்கொ டுத்து
பீடாண்டு வந்தவழி மாந்தர் – பாழும்
பேதைத் தனத்தைப் பிடித்துத் தடுக்கப்
–போராட்டக்

நாடாண்டு வந்ததமிழ் மகனே – நீயோ
நாணிக் குனிந்துடலம் கூனிக் கிடந்தாய்
கூடாண்டு வந்துபுலி மறவா – முரசம்
கொட்டடா கொட்டடா என்றுகளங் கண்டார்
–போராட்டக்

---

**பாடற் குறிப்பு:–** 21.6.1979 ஆம் நாள் பாடியது.

## 62. பகலோன் வாழ்க
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

பகலோன் வாழ்க பகலோன் வாழ்க
பகுத்தறி வுக்கதிர் பாய்ச்சி விளக்கிடும்
–பகலோன்

புகுமிருள் கலங்கிடப் புத்தொளி துலங்கிடப்
புன்மைகள் தொலைந்திடப் பொருள்களை விளக்கிடும்
–பகலோன்

பொய்யெது மெய்யெது புரியா திருந்தோம்
பொருளெது மருளெது கருதா திருந்தோம்
அயலெது நமதெது தெரியா திருந்தோம்
அறிவொடு விழிகளை அழகுற மலர்த்திய
–பகலோன்

கற்பனைக் கூண்டினுள் கண்ணயர்ந் திருந்தோம்
கலகல ஒலியொடு சிறகடித் தெழுந்தோம்
பற்பல பணிகளில் பரிவுடன் புகுந்தோம்
பழுதறத் துயிலெழுப் புதுமுறுக் கேற்றிய
–பகலோன்

---

**பாடற் குறிப்பு:–** 22.6.1979 ஆம் நாள் பாடியது.

## 63. புரட்சித் தலைவன்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

'தாழ்ந்திருக்குந் தமிழகமே உன்னை யிங்குத்
தாழ்வுபடச் செய்தவரார்? செய்தார் தம்மை
வீழ்ந்துபடச் செய்திடுவேன் வெற்றி கொள்வேன்
வீரமிக்க தோளுண்டு மீண்டும் உன்னை
வாழ்ந்திருக்கச் செய்திடுவேன் உன்னைக் காக்க
வாழ்வெல்லாம் ஈந்திருப்பேன்' என்று கூறி,
ஆழ்ந்ததுயில் கொண்டிருந்தோர் எழுச்சி கொள்ள
ஆர்ப்பரித்துப் புரட்சிவழி காட்டி நின்றான். 1

போர்முரசம் ஆர்த்திடுவான் முழக்கம் கேட்டுப்
பொங்கிஎழும் மறப்புலியின் கூட்டங் காண்பான்,
'பார்மருள உயிரெடுக்கும் மறப்போர் அன்று
பரிந்துநும துயிர்கொடுக்கும் அறப்போர் என்பான்
ஓர்முறைதான் உயிர்போகும் போவ தென்றால்
உமதுதிரு நாட்டுக்கே போக்கு தற்கு
யார்வருவீர்?' என்றழைப்பான்; வந்தார் தம்மை
அறிஞனவன் அறநெறியில் அழைத்துச் செல்வான்.
2

கொலைக்குணத்து மாந்தரையும் வயப்ப டுத்தும்
கூரறிவுப் பேச்சாளன், எழுத்தின் வேந்தன்,
கலைத்துறையில் நிகரில்லா நடிப்பில் வல்லான்,
கருத்துவளங் கொழிக்கின்ற சுரங்கம் போல்வான்,
நிலைப்படுத்த அரசியலை ஆய்ந்த மேதை,
நீள்புகழின் முகட்டுமிசை நின்ற போதும்
தலைக்கனத்தை அவனிடத்துக் கண்ட தில்லை
தன்னடக்க நெறிகாட்டி உயர்ந்து நின்றான். 3

கிழமைமிகு பெரியாரின் கழகம் சேர்ந்து
கிளைத்துயர உழைத்தான்பின் பிரிந்த போதும்
கழகமதை அழித்துவிடக் கருத வில்லை;
கண்டபடி ஏசவில்லை; ஈதி ரட்டைக்
குழல்மருவு துப்பாக்கி என்றே சொன்னான்
குணமென்னுங் குன்றேறி நின்றா னன்றோ?
அழகுமிகு முன்னேற்றக் கழகங் கண்டான்
ஆர்ப்பரிப்புச் செய்யவில்லை பணியே செய்தான். 4

உடனிருந்து வளர்ந்தோர்தாம் பிரிந்து சென்றே
உளம்நோகப் பழித்தாலும் பழிக்க மாட்டான்;
இடுபழியே தொழிலாகக் கொண்டு வாழ்வோர்
இன்னாமை செய்தாலும் அவர்தாம் நாண
இடனறிந்து புகழ்ந்துரைப்பான் அதனால் அந்த
எதிரிகளும் மனந்திரிந்து மதிக்க லானார்;
கடமையினைப் புரிந்திருந்தான் கட்டுப் பாட்டைக்
காத்திருந்தான் கண்ணியமாம் வாழ்வும் பெற்றான். 5

## 64. அரசு நாட்டினான்
**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

அரசு நாட்டினான் – சிறையில்
அண்ணன் நாட்டினான்
விரைவில் நாட்டிலும் – நமது
அரசு நாட்டுவான் 1

முரசம் ஆர்த்தது – வெற்றி
முரசம் ஆர்த்தது
பரசி வாழ்த்துவோம் – அண்ணன்
படையை வாழ்த்துவோம் 2

பகைகள் நீங்கவே – நல்ல
பான்மை ஓங்கவே
குகையின் வேங்கைகாள் – ஒன்று
கூடு வீர்களே 3

பகைகள் மிஞ்சுமோ – நமது

படைகள் கொஞ்சமோ!
புகையும் நெஞ்சிலே – கனல்
பொங்கி விஞ்சுமே 4

உடலும் ஒன்றுதான் – பெற்ற
உயிரும் ஒன்றுதான்
அடிமை போகவே – போரில்
அவற்றை ஈகுவோம் 5

கடமை ஆற்றுவோம் – நாடு
காவல் போற்றுவோம்
உடைமை திராவிடம் – என்றே
உலகில் சாற்றுவோம் 6

வாழ்க தாயகம் – என்றும்
வாழ்க திராவிடம்
வாழ்க வாழ்கவே – அண்ணன்
வாழ்க வாழ்கவே 7

---

**பாடற் குறிப்பு:–** 1962 சூலை 19–இல் அஃக விலை உயர்வை எதிர்த்து மறியல் செய்தமைக்காகச் சிறைப்படுத்தப்பட்ட அறிஞர் அண்ணா, வேலூர்ச் சிறையில் தமது பிறந்த நாளையொட்டி, அரசங்கன்று நாட்டினார். அதன் நினைவாகப் பாடப்பட்டது இப்பாட்டு.

## 65. அண்ணா வழியில் அயராதுழைப்போம்

**(நூல்:–ஞாயிறும் திங்களும்)**

சங்கங்கள் மூன்றமைத்துப் புலவர் வேந்தர்
சமமாக வீற்றிருந்து தமிழைக் காத்தே
எங்கெங்கும் புகழ்மணக்கத் திகழ்ந்த நாடு
வணிகத்தைப் போர்த்திறத்தை எடுத்துக் காட்ட
வங்கங்கள் பலசெலுத்தி வளர்ந்த நாடு;
வளமிக்க அரசியலைத் தெரிந்த நாடு;
நங்கையவள் காவிரித்தாய் வளர்த்துவிட்ட
நாகரிகத் தொட்டிலென வாழ்ந்த நாடு. 1

எங்கெங்கோ திரிந்தவர்கள் இங்கு வந்தார்
ஏமாந்த தமிழினத்தார் மனம்நெ கிழ்ந்தார்;
அங்கங்கே அமர்ந்தவர்கள் துறைகள் தோறும்
ஆரியத்தின் கொள்கைகளைப் புகுத்தி விட்டார்;
தங்கங்கள் நிறம்மாற ஒளியும் மாறத்
தந்திரங்கள் மந்திரங்கள் பூசி விட்டார்;
சிங்கங்கள் குள்ளநரிக் கடிமை யாகிச்
சீர்கெட்டு வாழ்ந்திடவே மாயை செய்தார். 2

தென்னாட்டை, வந்தவரால் அடிமை யான
திருநாட்டைச் சீர்திருத்தி மீண்டும் சங்கப்
பொன்னாட்டை உருவாக்கச் சினந்தெ ழுந்த
போராட்டப் பெரியார்ஓர் பாட்டை கண்டார்;
தென்பூட்டும் ஈரோட்டார் தனித்து நின்றே
திருகுகள்ளி முட்புதர்கள் கன்முள் காளான்
மின்காட்டும் நச்சரவம் மலியுங் காட்டை
மேம்படுத்தச் செப்பனிட வழிய மைத்தார். 3

வாஞ்சையினால் நம்பெரியார் செப்ப னிட்டு
வழியமைக்கப் பாடுபடுந் திறத்தைக் கண்டு
காஞ்சிக்கும் ஈரோட்டுப் பாச றைக்கும்
கற்றறிந்த நம்அண்ணா வழிய மைத்தார்;
தேன்சிதறும் பூஞ்சோலை பலப டைத்தார்;
தெளிநீரைத் தருகிணறும் ஆக்கி வைத்தார்;
தீஞ்சுவைசேர் கனிமரங்கள் பலவும் வைத்தார்;
சேர்ந்திளைஞர் அணிவகுத்து நடந்து வந்தார்.
4

உறுதிகொளும் நல்லிளைஞர் நடக்குங் காலை
உதவாத வவ்வால்கள் பறந்துவந்தே
உறுகனிகள் பலசுவைத்துப் பறக்கக் கண்டோம்;
ஒளிந்திருந்த கள்வர்சிலர் சமயம் பார்த்துப்
பொருள்பலவும் திருடிக்கொண் டோடக் கண்டோம்;
பொறுமையிலார் இடையிடையே தொல்லை தந்து
பொறுமுவதும் கேட்டிருந்தோம் எனினும் அண்ணன்
புதுவழியில் நடப்பதைநாம் நிறுத்த வில்லை. 5

திருவிடத்தின் பெருமையினை மீண்டுங் காணத்
தெளிந்துணர்ந்து சிந்தித்துக் காஞ்சி அண்ணன்
ஒருவழிதான் நமக்கெல்லாம் எடுத்து ரைத்தார்;
உயர்தமிழும் தமிழினமும் உய்ய வேண்டி
இருவழியைக் காட்டவில்லை; குழப்ப வில்லை;
ஏகஇந்தி யாவென்று மழுப்ப வில்லை;
வரும்வழியில் திசைமாறிப் போன மாந்தர்
வாயுளறல் சிரிப்புக்கே வழியைக் காட்டும். 6

மடமையினைத் தகர்த்தெறிந்து சிந்தித் தாய்ந்து
மதிதன்னை வளர்க்கும்வழி, நலமே சேர்க்கும்
கடமைவழி, கண்ணியமும் கட்டுப் பாடும்
கலந்தவழி, கருணைவழி, பண்பும் அன்பும்
உடையவழி, உறுதிவழி, மானங் காக்க
உற்றவழி, குறள்நூலின் சங்க நூலின்
இடைமருவும் தமிழர்வழி, காஞ்சிக் கோமான்
எந்நாளும் எடுத்துரைத்த வழியாம் கண்டீர். 7

துப்பாக்கி துணையென்று சொன்ன தில்லை;
துணிவுளமே துணையென்று மொழிந்து நின்றார்;
தப்பாக்கும் எவ்வழியும் நினைந்த தில்லை;
தன்மானம் தமிழுணர்வு தன்னம் பிக்கை
வைப்பாக்கிக் கொள்வதுதான் தமிழி னத்தை
வாழ்விக்கும் வழிஎன்றார்; புகழ்ந்து சான்றோர்
[1]செப்பாக்க வழியொன்றே சொல்லித் தந்தார்
[2]சேப்பாக்க வழித்துயிலும் அறிஞர் கோமான். 8

அல்வழியில் தமிழினத்தை அழைக்க வில்லை
அருவருக்கும் வேற்றுமையை வளர்க்க வில்லை
நல்வழியே ஒன்றமைத்தார் அதனைக் காட்டி
நம்பிவந்த தம்பியரை அழைத்துச் சென்றார்
கல்வழியோ முள்வழியோ காட்ட வில்லை
காட்டுவழி மேட்டுவழி காட்ட வில்லை
கொல்வழியும் சொன்ன தில்லை யாரும் ஏற்றுக்
கொள்வழியே உரைத்திருந்தார் தலைவர் கோமான்.
9

கருப்புக்கு மறுப்புரைத்துப் பகைமை பூண்ட
கருத்தினரும் வந்தவழி, குழப்பம் செய்து
வெறுப்புற்றுத் திரிந்தவரும் மனம்தி ருந்தி
விழைந்தவழி, முதல்எதிரி என்று சொல்லி
செருக்குற்று நின்றவரும் முதலில் வந்து
சேர்ந்தவழி, செம்மைவழி, எங்கள் அண்ணன்
உருக்கொடுத்துத் தந்தவழி, பெரியார் பட்ட
உழைப்பாலே உருவான வழியே யாகும். 10

அழகுநடைத் தமிழ்எழுதிப் புதிய பாங்கில்
அணிவகுத்து நடப்பதற்கு வழிய மைத்தார்;
பழகுதமிழ் நடைபேசிப் பாரோர் போற்றும்
படையொன்று நடைபோட வழிய மைத்தார்;
மழலைமொழி நடையினரும் கற்றுக் கற்று
மாவீரர் போல்நடந்தார் வெற்றி கண்டார்;
விழலனைய மனிதர்களும் எழுதிப் பேசி
வீறுபெறும் நடைபெற்றார் வாழ்வும் பெற்றார். 11

‘தூற்றாதீர் பிறர்பழியை, மேடை ஏறித்

தொடுக்காதீர் வசைமொழியைக் காசுக் காக
மாற்றாதீர் தமிழ்மரபை, கருத்தை மட்டும்
மறுத்துரைப்பீர், தனிஒருவர்ப் பழித்தல் வேண்டா,
மாற்றாரின் தோட்டத்து மல்லி கைக்கும்
மணமுண்டு தெரிந்ததனை நுகர்க' என்று
சாற்றிஒரு பண்புவழி காட்டி நின்று
தமிழினத்தை வளர்க்கும்வழி உணர்த்தி நின்றார்.
12

புரட்சிவழி எனச்சொல்லி உணர்ச்சி யூட்டிப்
புன்மைவழி அமைக்கவில்லை; மக்கள் நெஞ்சில்
மருட்சிபெறச் செய்யவில்லை; பகைத்தோர் கூட
மனத்துக்குள் ஏற்கின்ற வழியே சொன்னார்,
கருத்துவழி, அறிவுவழிப் புரட்சி செய்தார்;
களப் புரட்சி கொலைப்புரட்சி செய்தா ரல்லர்;
தரத்திலுயர் புரட்சிவழி, தன்னைத் தானே
தருகின்ற அறத்துவழி ஒன்றே கண்டார். 13

அண்ணாவின் வழியில்தான் செல்லு கின்றோம்
அல்லல்பல வந்தாலும் அயர மாட்டோம்;
புண்ணாகப் பழிமொழிகள் வீசும் போதும்
பொழுதெல்லாம் சோதனைகள் வந்த போதும்
மண்ணாளும் உரிமையினைக் கலைத்த போதும்
மனைமக்கள் தமக்கிடர்கள் விளைத்த போதும்
எண்ணாத சிறைக்கூடம் வதைத்த போதும்
எந்நாளும் உழைத்திருப்போம் வெற்றி கொள்வோம்.
14

அடிவயிற்றில் எமைமிதித்துக் கொன்ற போதும்
அவர்காட்டும் வழியில்தான் செல்வோம் நாங்கள்
அடிபட்டு மிதிபட்டுத் துயர்கள் உற்றும்
அயராமல் உழைத்திடுவோம்; இரண்டு வண்ணக்
கொடிகட்டி அதன்நிழலில் தொடர்ந்து நின்று
குறிக்கோளை நோக்கித்தான் பயணம் செய்வோம்
மடியட்டும் எமதுயிர்கள் அஞ்ச மாட்டோம்
மறிக்கட்டும் எமைப்பகைகள் விலக்கிச் செல்வோம்.
15

தம்பிகரு ணாநிதியும் எம்மோ டுள்ளார்;
தலைமகனார் வழியில்தான் செல்லு கின்றார்;
வெம்பிஎழும் புலிமறவர் இங்கே வுள்ளார்;
வீரமகன் வழியில்தான் செல்லு கின்றோம்;
கும்பியினை வளர்ப்பவர்கள் குரைத்து விட்டால்
கொள்கைவழித் தொடராமல் நின்றா போவோம்
நம்பிவரும் நல்லவர்கள் இங்கே வுள்ளார்;
நம்அண்ணன் அமைத்தவழி தொடர்ந்து செல்வோம்.
16

அண்ணாவைப் போற்றுவது கடமை என்றால்
அவர்தம்பி கலைஞரையும் போற்ற வேண்டும்;
அண்ணாவைத் தலைவரென ஏற்றுக் கொண்டால்
அவர்தம்பி கலைஞரையும் ஏற்க வேண்டும்;
அண்ணாவின் சொல்லெல்லாம் மதிப்ப தென்றால்
அவர்தம்பி கலைஞர்மொழி மதிக்க வேண்டும்
அண்ணாவின் கொள்கைவழி நடப்ப தென்றால்
அவர்தம்பி கலைஞர்வழி நடக்க வேண்டும். 17

---

**பாடற் குறிப்பு:–** சென்னையில் நடைபெற்ற அண்ணா பிறந்த நாள் விழாக் கவியரங்கில் பாடியது – 17.9.1978.

**அருஞ்சொற் பொருள்:–** 1. செப்பாக்க வழி – செப்பும் ஆக்க வழி.
2. சேப்பாக்கம் – அண்ணா கல்லறை அமைந்துள்ள பகுதி.

## 66. ஏடெடுத்தேன் பாட்டெழுத...

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

கலிவெண்பா

சூடெடுத்த வெங்கதிரோன் சுட்டெரிக்குங் காரணத்தால்
ஓடடுக்குஞ் சிற்றில் உலைபோலத் துன்புறுத்தத்
தோடுடுத்த பூமலருஞ் சோலைக்குட் புக்கிருந்
தேடெடுத்தேன் பாட்டெழுத, எல்லையிலா எண்ணங்கள்
ஓரா யிரமாகி ஓயாக் கடலலைபோல்
நேரே எழுந்தெழுந்து நெஞ்சத்தைப் பற்றிநின்
றொன்றைஒன்று முந்துவதால் ஒன்றும் புரியாமல்
நின்றிருந்தேன்; பின்னர் நினைவெல்லாம் ஒன்றாகி
மின்னல் ஒளிபோல மேலோங்கும் ஒருணர்ச்சி
என்னுட் பளிச்சிட் டெழுந்து பரந்ததுகாண்;
ஊற்றுப் புனல்போல ஊறிவரும் அவ்வுணர்ச்சி
ஆற்றுப் பெருக்கேபோல் ஆர்த்தெழுந்து மேலோங்க
மண்ணிற் பிறந்த மனநிலையை விட்டொழித்து
விண்ணிற் சிறகடித்து விர்ரென் றெழுவதுபோல்
எங்கும் பறந்தேன்; இணையில்லா இன்பநிலை
பொங்கித் ததும்பப் புதுநறவம் மாந்தி
மயங்கிக் களித்தேன் மனம்மயங்கும் வேளை
வயங்கித் திகழுமெழில் வட்ட முழுமதியம்
ஆடிச் சிரிக்கும் அழகிகளைக் கூத்தியைப்போல்
பாடித் தெருவலையும் பாடகியைப் போல்விளங்கக்
கோலக் கருவானங் கூத்தன் விரித்துவைத்த
நீலத் துகில்போல நின்றங்குக் காட்சிதரக்,
கண்டு களித்தோர் கையால் விசிறிவிட்ட
மண்டுவெள்ளிக் காசுகள்போல் வான்வெள்ளிக் கூட்டங்கள்
மின்னிக் கிடக்கஎழில் மேல்வானிற் கண்டிருந்தேன்
என்னைத் தொடர்ந்துவரும் இன்பத்தை என்னென்பேன்!
தேர்போகுங் காட்சியெனச் சேர்ந்தொன்றாய் ஊர்ந்துவரும்
கார்மேகக் கூட்டங் கனத்த மழைபொழியத்
தோகை மயிலானேன் துள்ளும் மனத்தகத்தே
ஓகை மிகவாகி ஓவென்று கூவிக்
குளித்தேன் அதனால் குதித்தேன் அகத்தே
களித்தேன் அதுதான் கணக்கில் அடங்காது;
நீரால் நனைந்தமையால் நெஞ்சம் மிகக்குளிர்ந்தேன்;
ஆரா இனிமைதரும் அவ்வுலகில் நின்றபடி
நீணிலத்தை நோக்க நினைந்தேன் அடடாஓ
காணலுற்ற காட்சியினாற் கண்ணின் பயன்பெற்றேன்;
பச்சைப் பசுங்கொண்டல் பாவிவரும் நீள்முகட்
டுச்சிப் பனிமலைகள், ஓங்கு பெருவிலங்கல்,
தாவிக் குதித்துத் தடம்புரளும் வெள்ளருவி
மேவித் திரண்டுருண்டு மேதினியில் ஓடிவந்து
குன்றா வளஞ்சுரந்து கோலங்கள் செய்துவரும்
பொன்றாப் புனலாறு, பூமகளைப் போர்த்திருக்கும்
பட்டாடை என்னப் படர்ந்திருக்கும் நெற்கழனி,
முட்டாது தேன்சுரக்கும் மொய்ம்மலர்சூழ் பூஞ்சோலை,
சோலைக் கனிகொறிக்கத் துள்ளும் அணிற்கூட்டம்,
வாலைப் பிடித்திழுத்து வம்புசெயும் வானரங்கள்,
கூவுங் குயிலினங்கள், கோல மயிலினங்கள்
யாவும் இருவிழியால் யான்கண்டேன்; கண்டவற்றை
ஓவியம்போல் ஒப்பற்ற காவியத்தில் ஆக்கஎழும்
ஆவலினாற் பாட்டெழுத ஏடெடுத்தேன் அவ்வேளை,
குன்றக் குறமகளோ? கோலக் கடலலைகள்
நின்றலையும் நெய்தல் நிலமகளோ? ஆர்கலிசூழ்
தண்மருதப் பெண்மகளோ? தாவுங் கொடிமுல்லைக்
கண்மருவும் ஆரணங்கோ? கண்டறியேன் ஆரணங்கோ!
கட்டழகுப் பெட்டகமாய்க் கண்கவருங் காரிகையாய்ப்
பொட்டழகுங் கார்கூந்தற் கட்டழகுங் கொண்டவளாய்
வஞ்சி ஒருத்தியங்கு வந்தருகில் நின்றெனது
நெஞ்சி லிடங்கொண்டாள் நின்றவளை நான்கண்டேன்;
கொஞ்சுங் கிளிமொழியாள், கொவ்வைச்செவ் வாயிதழாள்,

விஞ்சும் எழில்கூட்டும் வேல்விழியாள், அன்னத்தை
அஞ்சவைக்கும் மென்னடையாள், ஆடும் மயிலினத்தைக்
கெஞ்சவைத்த சாயலினாள் என்னைக் கிரங்கவைத்தாள்;
அன்னவளை இன்பமிகும் என்னவளைக் கையிரண்டும்
மின்னவளை பூண்டவளை என்னுளத்தை ஆண்டவளை
மாலை புனைந்து மணங்கொள்ள நான்நினைந்து
சேலை நிகர்த்தவிழிச் சிற்றிடையாள் காதலையே
நாடோறும் பாடி நலந்துய்க்க வேண்டுமெனுஞ்
சூடேறி ஏடெடுத்துச் சொற்றமிழிற் பாட்டெழுதிக்
கொட்டிக் குவித்தேன், குலமனைவி காதலையும்
மட்டுப் படுத்தும் மனநிலையைத் தந்துவிட்டாள்;
பிள்ளைக் கனியமுது பெற்றெடுத்தாள் ஆதலினால்
உள்ளத்துள் எல்லாமவ் வோவியத்தின் நல்லுருவே
பற்றிப் படர்ந்தென்னைப் பாசத்தாற் கட்டுறுத்திச்
சுற்றி வளைத்துள்ளம் சொக்கிவிடச் செய்ததுகாண்;
செக்கச் சிவந்திருக்குஞ் செவ்விதழின் வாய்மலர்ந்து
பொக்கைச் சிரிப்பொன்று பூத்திருக்கும் அம்முகத்தில்;
விஞ்ஞானம் மேலோங்கி வீறிட் டெழும்நேரத்
திஞ்ஞாலம் நான்பிறந்தேன் என்னுங் கருத்தோடு
விண்ணிற் சிறகடித்து வெட்ட வெளிபறக்க
எண்ணிக் குதிக்க எழுவான்போற் கைகால்கள்
ஆட்டிப் படைக்கும் அழகெல்லா மென்மனத்தை
ஆட்டிப் படைத்தனகாண்; ஆன்றவிந்த சான்றோர்க்கும்
சொன்னால் விளங்காத துய்யமறை போலுமொழி
என்னால் மறக்க இயலுவதோ? அம்மொழியைக்
கேட்காத காதென்ன காதோ? திருமுகத்தைப்
பார்க்காத கண்ணாற் பயனுண்டோ? அம்மகவு
கால்நலிந்து தள்ளாடக் கைகள் அசைந்தாட
மேல்நடந் தென்னருகில் மெல்ல வரும்போது
யார்நடம் ஒப்பாகும்? ஓர்நடமும் ஒப்பில்லை;
சீர்நடையன் என்தோளைச் செங்கையாற் றீண்டுங்காற்
சொல்லரிய இன்பமெனைச் சூழ்ந்துவரும்; தோள்பற்றி
மெல்லிதழாற் கன்னத்தின் மேற்பதித்த முத்திரைகள்
அப்பப்பா பேரின்பம்! அன்றைக் கவள்தந்தது –
ஒப்பப்பா என்றால் ஒருநாளும் ஒவ்வாதே;
இவ்வண்ணம் யான்கண்ட இன்பமெலாம் ஏடெடுத்துக்
கைவண்ணங் காட்டிக் கவிபுனைந்தே இன்புற்றேன்;
ஆனாலும் என்மனத்தே ஆர்வம் அடங்கவிலை
ஏனோ எனமயங்கி ஏங்கிக் களைத்திருந்தேன்;
ஒன்றென் மனத்தே உருவாகக் கண்டுணர்ந்தேன்;
என்றும் நிலைக்கும் எழில்மேவுங் காப்பியமே
ஒன்று படைக்க உளங்கொண்டேன் ஏடெடுத்தேன்
அன்றுகடன் காரர் அனைவருமே வந்துநின்றார்;
ஒன்றும் புரியவிலை ஓர்வரியும் ஓடவிலை
என்று தொலையுமடா இக்கடன்கள் என்றுழன்றேன்;
ஆங்கே ஒருத்தி அரியகுரல் தந்துநின்றாள்
'ஈங்கே வறுமை இருக்கும்வரை காப்பியமோ?
ஏழைஎனச் செல்வரென எத்தரெனப் பித்தரெனப்
பாழும் உலகிற் படைத்துவைத்த தீங்குகளும்,
தாழ்ச்சி உயர்ச்சி தகுபிறப்பில் உண்டென்று
சூழ்ச்சித் திறனுடையார் சொல்லிவரும் நீதிகளும்,
ஓயாமல் என்றும் உழைப்போரும் அவ்வுழைப்பாற்
சாயாமல் நின்று சதிசெய்து வாழ்வோரும்
இன்றும் இருப்பதற்கே எண்ணும் மடமைகளும்
கொன்று குவிப்பதற்கே கூர்வாள்போல் ஏடெடுத்துப்
பாட்டெழுத வேண்டுமடா பாடுந் தமிழ்மகனே
வேட்டெழுந்து பாவரைந்தால் வெங்கொடுமை மாளுமடா,
நாட்டைக் களமாக்கி வேட்டைத் தொழில்புரிந்த
கூட்டத்தார் செய்யுங் கொடுமைஎலாம் போய்மறைய
மண்ணோடு மண்ணாய் மடிந்துவிடப் பாட்டெழுது!
கண்ணாக எண்ணிக் கடமைசெயுந் தொண்டர்களை
ஆளும் பொறுப்பில் அமர்த்தி அவர்கையில்
நாளுமுயர் செங்கோல் நடாத்தக் கொடுத்துவிடு,
நல்லாட்சி செய்கின்ற நல்லவர்க்குத் தென்பூட்டச்
சொல்லாட்சி செய்யுந் தொழிலோனே பாட்டெழுது,
செந்தமிழ்க்குத் தீங்குவரின் சீற்றமொடு பாட்டெழுது,
நொந்தவர்க்கு வாழ்வுதர நூறுவகைப் பாட்டெழுது,
மக்களுக்கு வேண்டும் மனவளத்தைப் பாடுகநீ,
தக்க மனவளத்தைத் தக்கவைக்கப் பாட்டெழுது,
சாண்வயிற்றுப் பாட்டுக்குத் தக்கபடி பாட்டெழுதி
மாண்பழித்துக் கொள்கைகளை மாற்றியிங்குப் பாடாதே,
புத்தம் புதுவுலகம் பூத்து மலர்ந்திடவும்
தத்தங் கடமைகளைத் தாழ்வின்றி ஆற்றிடவும்
ஏழைமை நீங்கிடவும் இன்னல் தவிர்ந்திடவும்
தோழமை எங்குந் தொடர்ந்துலகம் ஓங்கிடவும்
எங்கள் தமிழொன்றே ஈங்கரசு செய்திடவும்
பொங்கும் முரசொலிக்கப் பூரித்த தோளுயர்த்திப்
பாடடா ஏடெடுத்துப் பாரடா ஏறெடுத்து,
நாடடா ஈதுனது நாடடா பாடடா,
பாடும்போ துன்னைப் பகைப்பவர்தாம் யாரடா?
ஓடும்இனம் அல்லோம் உருத்தெழுந்தாற் போரடா!
போரெடுத்தால் எப்பகையும் போய்மடியும் ஈங்குன்னை
யார்தடுக்க வல்லார்? எழுந்திங்கு நின்கருத்தைப்
பாடடா பாடென்று' பாவை உரைத்ததனால்
ஏடெடுத்தேன் பாட்டெழுத இன்று.

---

**பாடற் குறிப்பு:–** திருக்கழுக்குன்றம் முத்தமிழ் இலக்கிய மன்றக் கவியரங்கில் பாடியது–25.4.1967.

## 67. புதியதொரு விதிசெய்வோம்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

விழிசிவப்பா தணல்சிவப்பா என்று நம்மை
வியப்புறுத்தும் உலைக்களத்தில் பற்றும் செந்தீ
குழிவயிற்றின் பசிக்கனல்போல் எரிய அங்கே
கொல்லனவன் உலைத்துருத்தி ஊதுங் காற்று
தொழில்புரிவோன் பெருமூச்சுப் போல வீசத்,
தூக்கிவந்த வல்லிரும்பை நெகிழக் காய்ச்சி
எழிலுறவே சம்மட்டி கொண்டு தாக்கி
எண்ணியவா றுருவுபெற ஆக்கி வைத்தான். 1

உடலுயிரைப் பொருளாகக் கருதா திந்த
உலகத்தை உருவாக்க முயன்ற தோள்கள்
கொடுமைகளை மிடிமைகளை வறுமை தந்த
கோணல்களை எத்தனைநாள் சுமக்கும்? மேலும்
அடிமையெனப் படிகளென ஆக்கி வைத்தால்
அத்தனையும் எத்தனைநாள் உளம்பொ றுக்கும்?
இடியெனவே முழங்காதோ அந்த வுள்ளம்?
என்றேனும் நிமிராவோ அந்தத் தோள்கள்?
2

வறுமையெனும் உலைக்களத்தில் அடுக்கி வைத்த
மதம்சாதி பட்டினிநோய் மூடம் என்ற
கரிகளிலே உணர்ச்சியினை மூட்ட, வீசும்
காற்றெனவே பெரும்புரட்சி தோன்ற, அங்கே
உரிமையெனும் போராட்டச் செந்தீ பற்றும்;
[1]உறிஞ்சிவரும் இரும்புகளை அதனிற் காய்ச்சிச்
சரிவுபடாப் பொதுவுடைமைச் சட்டம் என்ற
சம்மட்டி யாலடித்தால் உருவ மாகும். 3

போராடும் உலகத்தைச் சாய்க்க வேண்டின்
புதியதோர் உலகத்தைப் படைத்தல் வேண்டும்;
நீரோடு நிலம்நெருப்பு வானம் காற்று
நிறைபொருள்கள் தனியுடைமை ஒருவர்க் கென்றால்
வேரோடு சாய்க்கின்ற துணிவு வேண்டும்;
விளையாட்டுப் பேச்சாலே பயனே இல்லை;
யாரோடும் பகைவேண்டாம்; ஒன்று பட்டால்
யாவுமிங்குப் பொதுவாகும் புதுமை பூக்கும் 4

இருட்டுலகில் விடிவெள்ளி எழுதல் கண்டோம்
இனியதொரு வைகறையும் வருதல் கண்டோம்
சுருட்டுபவர் எவரென்று தெரிந்து கொண்டோம்

தூங்கிவந்த விழியிமைகள் திறந்து கொண்டோம்
உருத்துவரும் செங்கதிரோன் எழுந்து விட்டான்
உலகமெலாம் தெளிவுபெற விளங்கிற் றிங்கே
பொருட்டுறையில் பிறதுறையில் சமமே கண்டு
புனிதமுடன் அதைஎங்கள் உயிர்போற் காப்போம். 5

---

**பாடற் குறிப்பு:–** ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டு மலரில் வெளிவந்தது–14.3.1980

**அருஞ்சொற் பொருள்:–** 1. உறிஞ்சிவரும் இரும்புகள் – பிறருழைப்பை உறிஞ்சும் இரும்பு போலும் மனமுடையார்.

## 68. பகடைக் காய்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

ஏட்டளவில் பாட்டெழுதிப் புகழ்ச்சி சொல்லி
ஏற்றமெலாம் எடுத்துரைத்து வியந்து கூறிக்
காட்டுகிறோம் உழவன்றன் பெருமை எல்லாம்;
கண்கட்டு வித்தையினால் கால மெல்லாம்
ஓட்டுகிறோம் கற்பனையில் உலவு கின்றோம்
உண்மையினைத் திரையிட்டு மூடு கின்றோம்;
வாட்டமுடன் அவன்வாழுங் குடிலுக் குள்ளே
வளர்துயரைத் துடைப்பதற்கு மறந்து விட்டோம். 1

உழுகின்றான் விதைக்கின்றான் நீரைப் பாய்ச்சி
உழைக்கின்றான் காக்கின்றான் ஆனால் நாளும்
அழுகின்றான் உணவின்றி; பெற்ற மக்கள்
அலைகின்றார் என்புருவில்; பேசாத் தெய்வம்
தொழுகின்றோம் முப்பொழுதும்; பேசுந் தெய்வம்
துணியின்றி உணவின்றிக் கந்தல் கட்டிப்
பழுதுண்ட சிலைகளெனத் திரியக் கண்டோம்;
பாடுகின்றோம் அவன்பெருமை என்னே விந்தை! 2

உழுகின்ற காளைக்கு வைக்கோ லேனும்
ஒருசிறிது கிடைத்துவிடும்; வாழ்நா ளெல்லாம்
உழுதொழிலில் கழிக்கின்றோன் கணக்குப் பார்த்தால்
உழக்கேனும் மிஞ்சாதென் றுலகஞ் சொல்லும்
பழமொழியைக் கேட்டதினிப் போதும் போதும்
பாரிலவன் வாழ்வினையும் பெருக்கல் வேண்டும்
முழுமையொடு வாழவழி வகுத்தல் வேண்டும்
முயலாது கழித்தலினி வேண்டா வேண்டா 3

கைகட்டி உலகந்தான் உழவன் பின்னே
கடுகிவரும் எனவுரைத்தோம் நன்று நன்று;
கைகட்டி வாய்பொத்தி உண்மை வாழ்வில்
கால்வளைத்து நிற்பவன்யார்? உழவன் அன்றோ?
பொய்கட்டி விடுவதெலாம் போதும் போதும்;
புலையனென அவன்வாழ்வைப் பொசுக்கு கின்றோம்;
மெய்தொட்டுப் பயிலஇனும் கூசு கின்றோம்
மேலென்றுங் கீழென்றும் பேசு கின்றோம். 4

ஏர்தொட்டுத் தொடிப்புழுதி [1]கஃசாச் செய்தே
எருவிட்டு நீர்பாய்ச்சிக் காத்து நின்று
பார்கெட்டுப் போகாமல் உலகில் எங்கும்
பசிப்பிணியை ஓட்டுகிறான் அவன்க முத்தைக்
கூர்பட்ட கதிரரிவாள் கொண்டு வெட்டக்
கூசுகிலோம்; நெஞ்சுருகப் பார்த்த கண்கள்
நீர்சொட்ட அவன்வாழுங் குடிலை யெல்லாம்
நெருப்பூட்டி எழும்புகையில் உலவு கின்றோம். 5

அரசியலை அரங்காக்கிச் சூதும் வாதும்
ஆடுகின்ற பேர்வழிகள் உழவன் றன்னை
உரியஒரு காயாக்கி உருட்டு கின்றார்
உணராமல் அவ்வுழவன் உருளு கின்றான்
உருளுமவன் ஒருபயனுங் கண்ட தில்லை;
உருட்டுபவர் போரேறி மேய்தல் கண்டோம்;
அரசியலும் அவனுழைப்பை உறிஞ்சி வாழும்
அட்டையென மாறியது கெட்ட காலம்! 6

வீழ்கின்ற புனலனைத்தும் உரிமை யாக்கி
விலைகொடுத்துத் தனியுடைமை என்ப துண்டா?
சூழ்கின்ற காற்றதனைச் சுடுநெ ருப்பைச்
சொத்துடையார் தனியுடைமை ஆக்க லுண்டா?
பாழ்வெளியாம் வானத்தைப் பாரி லெங்கும்
பணங்கொடுத்துத் தனியுடைமை செய்த துண்டா?
வாழ்பூதம் அய்ந்தனுளும் நிலத்தை மட்டும்
வன்புடையார் தனியுடைமை செய்த தேனோ? 7

---

**பாடற் குறிப்பு:–** செய்யாறு கவியரங்கில் பாடியது–17.1.1969.

**அருஞ்சொற் பொருள்:–** 1. கஃசு – காற்பலம்.

## 69. ஏர் நின்றால்.....

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

நாடாள்வோர் செங்கோலும் உழவன் ஏந்தும்
நலமிக்க கோலைத்தான் நோக்கி நிற்கும்;
வீடாளும் இல்லறத்து மாந்தர் தாமும்
விளைவுசெயும் உழவனைத்தான் நோக்கி நிற்பர்;
கூடாது வாழ்க்கையென வெறுத்த காவிக்
கோலத்தர் துறவுக்கும் அவனே காவல்;
ஓடாமல் ஏர்நின்றால் உலகம் நிற்கும்
உலகளிக்கும் இறைவனுக்கும் பூசை நிற்கும். 1

ஏர்நடக்கப் பார்நடக்கும்; இல்லை என்றால்
எதுநடக்கும்? பசிநடக்கும் பிணிந டக்கும்
போர்நடக்கும் கொலைநடக்கும் பொய்ந்ந டக்கும்
பொல்லாத அத்தனையும் நடக்கும் அன்றோ?
சீர்நடத்தும் பாவலன்றன் செய்யுள் எல்லாம்
[1]செய்யுள்நடும் உழவனுக்குப் பின்பாட் டாகும்
கூர்தொடுத்த ஏர்முனைக்குப் பின்னே சென்று
கும்பிட்டுத் திரிந்தேதான் உலகம் வாழும். 2

---

**பாடற் குறிப்பு:–** செய்யாறு கவியரங்கில் பாடியது–17.11.1969.

**அருஞ்சொற் பொருள்:–** 1. செய்யுள் – வயல்.

## 70. பொதுமை காண்போம்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

பதினான்கு சீர் விருத்தம்

வறுமை மிக்கு வலிமை கெட்டு
வறியர் வாடும் போதிலே
வலியர் மட்டும் வளமை யுற்று
வளர்வ தென்ன நீதியோ?
பொறுமை யற்றுப் புலிநி கர்த்துப்
பொதுமை காணும் போரிலே
புரட்சி தோன்றும் புதிய போக்கில்
புரளி என்ன நேருமோ? 1

இருமை போக ஒருமை காண
[1]இறைவன் சொற்ற பாட்டிலே
இடரி லாத வழிகள் காண

இறங்கி வாரும் நாட்டிலே
வறுமை போக வளமை சேர
வழிகள் யாவை? தேடுவோம்
வளரும் நாடு பொதுமை யாகி
வாழ்க என்று பாடுவோம். 2

**அருஞ்சொற் பொருள்:—** 1. இறைவன் – வள்ளுவன்.

## 71. பூக்கட்டும் புதுமை

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

நெறிபிறழா உழைப்பதனைப் பெருக்கி நின்றால்
நேரியநல் லுரிமைகளை வழங்கல் வேண்டும்;
உரிமைகளைப் பறித்தடக்க எண்ணு வீரேல்
உணர்ச்சிகளே பொங்கிஎழும் புரட்சி ஓங்கும்;
சரிபிழைகள் தெரியாத நிலைமை தோன்றும்;
சமர்வருமுன் பெருகட்டும் உரிமை யாவும்
சொரிமழைபோல் பொழியட்டும் உழைப்பை மாந்தர்;
சுடர்விட்டு மிளிரட்டும் நமது நாடு. 1

சிரிக்கட்டும் மக்களெலாம் மகிழ்வு கொள்வோம்;
சிரிப்பளவில் நில்லாமல் உழைப்பைக் கொஞ்சம்
பெருக்கட்டும்; பெருகியதாற் பெற்ற இன்பம்
பெருகட்டும் நிலைக்கட்டும்; சோம்ப லைத்தான்
முறிக்கட்டும்; முறிக்கியபின் உழைப்பு நாட்டில்
முளைக்கட்டும்; முளைவிடுமேல் வாழ்வும் ஓங்கும்;
இருக்கட்டும் நமக்கென்ன என்றி ருந்தால்
இனிக்கெட்டுப் போவதலால் வழியே இல்லை. 2

பூக்கின்ற மலர்களெல்லாம் பூக்கள் அல்ல
புதியனவாய் வருவவெலாம் புதுமை அல்ல
ஈர்க்கின்ற மணம்பரப்பும் மலர்க ளைத்தாம்
எல்லாரும் போற்றிடுவர்; நலம்ப ரப்பிக்
காக்கின்ற புதுமையைத்தான் ஏற்பர் சான்றோர்;
காகிதப்பூப் போல்விரியும் புதுமை எல்லாம்
போக்குதலே அறிவுடைமை; மயங்கி நின்று
புதுமைஎனும் பெயராலே வீழ்தல் வேண்டா. 3

செங்கதிரால் தாமரைகள் சிரித்தி ருக்கும்
சேர்மதியால் அல்லிமலர் வாய்சி ரிக்கும்
பொங்கிவரும் மழைவரவால் பயிர்சி ரிக்கும்;
பொய்யாத மொழிக்குறளால் புலம்சி ரிக்கும்;
துங்கமுறச் சிரித்திருக்கும் அறிவால் ஆய்ந்து
[1]தூயனவன் சொல்வழியில் பொதுமை காண
இங்கினிநாம் முயலுவமேல் புதுமை பூக்கும்
புல்லடிமை தேய்ந்துசம நிலையே வாய்க்கும்.
4

**பாடற் குறிப்பு:—** 10.3.1982 ஆம் நாள் பாடியது.

**அருஞ்சொற் பொருள்:—** 1. தூயனவன் –வள்ளுவன்.

## 72. யாவும் பொதுமையடா

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

கோடி தொகுத்தபினும் மாடி எடுத்தபினும்
கூட வருவதொன் றில்லையடா
வாடி வதங்கிவிழும் ஏழை எளியவர்க்கு
வாழ்வு வழங்குவது நல்லதடா 1

வாழத் துடிப்பவனை நாளும் உழைப்பவனை
வாழ்வைச் சுரண்டுவது கொள்ளையடா
கோழை எலும்புகளும் கூர்மை யடைந்துவிடின்
[1]கோலைத் தடுப்பவரும் இல்லையடா 2

பாழும் வயிற்றுணவு பஞ்சின் உடுக்கையிவை
பாரிற் பிறந்தவர்க்குப் பொதுமையடா
ஏழைக் கிவையிரண்டும் இல்லை விதிப்பயனாம்
என்று மழுப்புவது மடமையடா 3

தேவை யளவறிந்து யாவும் அடைந்தபினும்
தேடி முடக்குவது குற்றமடா
யாவும் பொதுமையென நீயும் உணர்ந்துநட
யாரும் நமதருமைச் சுற்றமடா 4

**அருஞ்சொற் பொருள்:—** 1. கோல் – அம்பு.

## 73. உலகை மாற்றுவோம்

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

உலகம் இங்குப் போகும் போக்கை
ஒன்று சேர்ந்து மாற்றுவோம்
ஒருவ னுக்கே உரிமை யென்றால்
உயர்த்திக் கையைக் காட்டுவோம்
கலகம் இல்லை குழப்பம் இல்லை
கடமை யாவும் போற்றுவோம்
கயமை வீழ உரிமை வாழக்
கருதி யுணர்வை ஏற்றுவோம் 1

உழைத்து ழைத்து விளைத்த நெல்லை
ஊருக் கெல்லாங் கொடுக்கிறோம்
உழைத்து விட்டுக் களைத்த பின்னர்
உணவில் லாமற் படுக்கிறோம்
களைத்துப் போன கார ணத்தைக்
கருதிக் கொஞ்சம் நோக்குவோம்
கடவுள் ஆணை என்று சொன்னால்
கண்ணில் நெருப்பைக் காட்டுவோம் 2

நமக்குள் நாமே வேறு பட்டு
நாலு பக்கம் போகிறோம்
நாதி யற்றுக் குனிந்து நெஞ்சம்
நலிந்து நாளும் சாகிறோம்
நமக்குள் வேறு பாடு காணல்
இல்லை யென்றே சொல்லுவோம்
நமது கூட்டம் நிமிர்ந்து சொன்னால்
நாளை உலகை வெல்லுவோம்

உலகம் போகும் போக்கை யிங்கு
மாற்றுவோம்
உடைமை யாவும் பொதுமை என்று
சாற்றுவோம். 3

**பாடற் குறிப்பு:—** 14.3.1982 ஆம் நாள் பாடியது.

## 74. துன்பத் துடிப்பு

**(நூல்:—புதியதொரு விதி செய்வோம்)**

விரல்துடித்தால் யாழ்நரம்பில் இசையைக் கூட்டும்;
விறலியரின் கால்துடித்தால் நடனங் காட்டும்;
திறல்படைத்த சிற்பியின்கை உளிது டித்தால்
தேவரையுங் கல்லுக்குள் அடக்கிக் காட்டும்;
அருள்பழுத்த கலைஞன்றன் மனந்து டித்தால்
அரியகலை பலகாட்டும்; சிந்தித் தாயும்
திறல்படைத்த சிந்தனையார் மனந்து டித்தால்

சீர்மைமிகும் புத்துலகைப் படைத்துக் காட்டும். 1

கற்பனையில் உலவுகவி மனத்து டிப்பால்
கனவுலகம் உருவாகும்; இல்ல றத்தைக்
கற்கவரும் காதலர்கள் மனத்து டிப்பால்
கருவுலகம் உருவாகும்; பள்ளி சென்று
கற்பவரின் அளவில்லா மனத்து டிப்பால்
கலகங்கள் உருவாகும்; ஒழுக்கக் குன்றில்
நிற்பவர்தம் மனத்துடிப்பால் நலங்கள் எல்லாம்
நிலமெங்கும் உருவாகும் தீமை தேயும். 2

துன்பத்தில் நெஞ்சங்கள் துடிப்ப துண்டு
தொடர்கின்ற இன்பத்தும் துடிப்ப துண்டு
துன்பத்தின் துடிப்பாலே புரட்சி தோன்றும்;
துடிக்கின்ற இன்பத்தில் மருட்சி தோன்றும்;
துன்புற்று மக்களினம் துடித்தால் எங்கும்
துவள்கின்ற நெஞ்சத்தில் நெருப்பு மூளும்
மின்பற்றி விளையாடும் வாளும் வேலும்
மிடைந்திருக்கும் ஆட்சிகளும் எரிந்து வீழும்.
3

தன்மனையின் காற்சிலம்பை விற்க வந்த
தப்பறியாக் கோவலனைக் கள்வன் என்றான்;
பொன்செய்யும் கொல்லனுரை நம்பி நின்றான்;
புகழ்க்கருணை மறவனுக்குத் தீங்கு செய்தான்;
பொன்செய்யும் வேலுடையான் பாண்டி மன்னன்
புகார்விட்டு வந்தான்மேல் புகாரு ரைத்தான்
என்னுமொழி செவிப்படலும் கண்ண கித்தாய்
இடர்ப்பட்டாள் கொதித்தெழுந்தாள் கனலாய் நின்றாள். 4

குறையில்லாக் கோவலனோ கள்வன்? என்றன்
கொழுநனுக்கோ வீண்பழிகள்? சொல்வார் பேச்சைச்
சரியென்று நம்புவதோ அரச நீதி?
சமன்செய்யும் கோல்போல நடுநின் றோராக்
குறைமதியன் நாடாளும் மன்ன னோ?இக்
கொடுமைக்கே சாவுமணி அடிப்பேன்' என்றே
எரிகின்ற நெஞ்சத்தே துடிது டித்தாள்
இருந்தஇடந் தெரியாமல் சாய்ந்த தாட்சி. 5

---

**பாடற் குறிப்பு:–** 13.5.1978 ஆம் நாள் பாடியது.

## 75. தீ பரவட்டும்
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

வயலிருந்தும் வயல்பாய நீரி ருந்தும்
வருந்தாமல் நீர்பாய்ச்சி உழைக்கும் நல்ல
செயலிருந்தும் அச்செயலால் விளைவி ருந்தும்
சேர்த்துவைத்த நெல்முதலாப் பொருளி ருந்தும்
மயலுறவும் செயலறவும் மாந்தர் வாடி
வாயுணவுக் கின்னலுறச் செயற்கைப் பஞ்சம்
புயலெனவே புகுந்ததனால் அவர்வ யிற்றிற்
பொங்கியெழுந் தெரிந்ததுவே பசித்தீ பற்றி. 1

வெள்ளையனும் நமக்குரிமை தந்து விட்டு
வெளிப்போந்தான் ஆதலினால் ஆங்கி லத்தால்
எள்ளளவும் செந்தமிழ்க்குத் தீமை யில்லை
இனியதமிழ் அரியணையில் அமரும் என்றே
உள்ளமதிற் பொங்கிஎழும் ஆர்வங் கொண்டோம்;
ஒற்றுமையாம் பொதுமொழியாம் என்று கூறிப்
பிள்ளைமதி படைத்தவரோ இந்தி ஒன்றே
பேணுகிறார் எரிமலைபோல் வெடித்த துள்ளம்
2

உரிமைநமக் கெய்தியதால் இனிமேல் வாழ்க்கை
உயர்ந்துவிடும் வளம்பெருகும் கவலை யில்லை
சரிநிகராய் வாழ்ந்திடுவோம் உயர்வு தாழ்வு
சாதியிலும் பொருள்தனிலும் எதிலும் இல்லை
அரசியலும் நடுநின்று பொதுமை பேணும்
அடிமைமிடி இலையென்றே கனவு கண்டார்;
புரியகிலாப் பகற்கனவாய்ப் போன தாலே
பொங்கியவர் விழிகளெலாம் செந்தீ செந்தீ. 3

சோறுபெறாக் காரணத்தால் வயிறு பற்றிச்
சுடர்த்தெழுந்த பசித்தீயும் ஆள வந்தார்
ஊறுபெறச் செந்தமிழை அழிக்க வேண்டி
உன்னுவதால் உருத்தெழுந்த உள்ளத்தீயும்
மாறுபடும் ஆட்சியினால் அல்ல லுற்ற
வறியவர்தம் விழித்தீயும் கொடுங்கோல் தன்னை
நீறுபடச் செய்யட்டும் செங்கோ லாட்சி
நிலவட்டும் பரவட்டும் அந்த முத்தீ. 4

## 76. அந்நாள் எந்நாள்?
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

வியப்புமிகுங் கலைத்திறமை கொண்டி லங்கும்
வியன்கோவில் எடுப்பித்தான் இராச ராசன்;
நயத்தக்கான் திருவுருவைச் சிலையில் ஆக்கி
நனிவிருப்பால் அச்சிலையைக் கோவி லுக்குள்
அயற்புறத்தே சுவரெடுத்து வைக்க எண்ணி
அருமுயற்சி மேற்கொண்டார் முடிய வில்லை;
மயக்கநிலை தெளியவில்லை; அடிமை இன்னும்
மாறவில்லை உரிமைபெறும் அந்நாள் எந்நாள்? 1

பொன்னிவளக் கரையுடையான் தஞ்சைப் பேரூர்
பொலிவுபெறப் பெருங்கோவில் ஒன்ற மைத்தான்;
அன்னதிருக் கோவில்நலம் புரந்து காக்கும்
ஆளுரிமை கங்கைக்கே உரிய தென்றால்
என்னமுறை யீதென்று துணிந்து கேட்க,
எமதுடைமை எமக்கென்றே உரிமை கோர
இன்னுமுணர் வெழவில்லை தமிழர்க் கந்தோ!
எப்பொழுது விழிப்பாரோ? அந்நாள் எந்நாள்? 2

அழல்வடிவக் கடவுளுக்குக் கோவில் ஆக்கி,
அவன்செவியில் தேவார ஒலியைக் கூட்டி,
நிழல்படியாக் கோபுரமும் கட்டி வைத்து,
நெடுந்தெருவில் நிற்கின்றான் இராச ராசன்;
நிழல்கொடுக்கும் வெண்குடைக்கீழ் உலகம் ஆண்டான்;
நிற்கின்றான் குடையின்றித் தஞ்சை மண்ணில்;
அழிதருமிச் செயல்தீரத் தமிழர் இங்கே
ஆர்த்தெழும்நாள் எந்நாளோ? அந்நாள் எந்நாள்?
3

நன்றுபடாச் சமயங்கள், பிரிவு கொண்ட
நாலுவகை வருணங்கள், அவற்றுட் சாதி
என்றுபல ஆயிரங்கள், பகைமை கொண்டே
இயங்கிவரும் பலகட்சி இவற்றுட் சிக்கி
ஒன்றுபடாத் தமிழ்நாடே நீதான் இங்கே
உருப்படுமோர் நாள்வருமா? அந்நாள் எந்நாள்?
தொன்றுமுதிர் தமிழினமே அடிமை தீரத்
துணிந்தொன்றாய்க் கூடாயோ? அந்நாள் எந்நாள்? 4

## 77. சிறுத்தையே விழித்தெழு
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

தனித்தனிப் பிறந்த தமிழர்தம் நெஞ்சம்
இனித்திடும் வகையால் எழிற்றமிழ் மொழியால்
தம்பீ தம்பீ என்றொரு தாயின்
கும்பியின் பிறப்பெனக் கூறிய குரலெது?

நம்பி வந்தவர் நலம்பெற் றுயர்ந்திடத்
தென்புகள் தந்து தேற்றிய குரலெது?
என்றன் உடன்பிறப் பென்றுனை விளித்து
நன்றுரை புகலும் நம்பிக்கைக் குரலெது?
பொய்யா உறவால் போற்றிப் போற்றி
அய்யா அண்ணாவென் றழைத்திடும் குரலெது?
பழகிய உனக்குப் பகரவும் வேண்டுமோ?
கழகக் குரலெனக் கண்டனை நீயே!
உன்றன் மூச்சால் ஓயா உழைப்பால்
நின்றமர் பலப்பல நிகழ்த்திய நெறியால்
வழிந்தகண் ணீரால் பொழிந்தசெங் குருதியால்
எழுந்தது வளர்ந்ததிவ் வெழில்பெறு கழகம்;
நடிப்பால் வளர்ந்ததா கழகம்? கொள்கைப்
பிடிப்பால் அன்றோ குன்றென உயர்ந்தது;
குன்றினைச் சிதைத்திடும் குறியொடு குருவிகள்
கன்றுகள் பகலிற் கனவுகாண் கின்றன;
அறப்போர் எத்தனை ஆற்றினை! இதனை
மறப்பார் உளரோ? மறுப்பார் உளரோ?
உளத்தெழும் உணர்வால் ஒவ்வொரு போரிலும்
களப்பலி யாகக் காளையர் உயிர்கள்
எத்தனை எத்தனை ஈந்தனர் உவந்தே;
அத்தனை உயிரும் எவர்தம் உயிராம்?
உன்னுடன் பிறந்தார் உன்னலம் நினைந்தார்
தம்முயிர் அன்றோ? தமிழ்நலங் காக்க
எரியிடைப் புகுந்துடல் கருகிட மடிந்தனர்
அரிநிகர் தோழர் அவரெலாம் உன்னினம்!
கொடுஞ்சிறைக் கோட்டம் இடஞ்சிறி தாகப்
புகுந்தது நிறைந்தது புலிநிகர் கூட்டம்!
முந்திய போர்களிற் சிந்திய குருதிகள்
சிந்தைக் கல்லிற் செதுக்கிய வரிகள்
வரலாற் றேட்டில் வாழ்வன காணுதி
அரியேற் றுள்ளம் அவற்றால் வாய்த்திடும்
அழியா வரிகளை அடிக்கடி படித்திடு
விழிபோல் அவற்றை விரும்பிப் போற்றிடு!
பழகிய தமிழ்மொழி பழுதுறா தோங்கிட
இளகிய தமிழினம் இணையிலா திலங்கிடக்
கழகம் ஒன்றே காத்திட வல்லது;
கழகம் காத்திடல் காளையே நின்கடன்;
பாசறை அமைத்ததில் பயின்றிடு போர்முறை
நீசரை எதிர்த்திட நிமிர்த்திடு தோள்கள்;
சென்ற களமெலாம் வென்றது நின்னினம்
இன்றதை மறந்தனை இனியதை நினைந்தெழு!
நின்பாற் சோர்வு நேர்ந்துள தறிவேன்;
அன்பநின் சோர்வுக் கடிப்படை தெரிவேன்;
அதனாற் சோர்வுறல் அழகோ? உன்பணி
எதனால் மறந்தனை? எவர்க்கது தீமை?
நடந்ததை மறந்திடு நடப்பதை நினைந்தெழு
தொடர்ந்துன் பணியைத் தொடங்கிடு நடந்திடு
சிந்தனை செய்நீ செங்கதிர் வழியில்
வந்தனை நீயோ வாடிக் கிடப்பது?
பெரியார் அறிஞர் பேணிய பாசறை
உரியாய் நீயோ உறங்கிக் கிடப்பது?
முறைப்படி ஆண்டநின் முத்தமிழ் நாட்டைச்
சிறைப்பட விடாமல் சிறுத்தையே விழித்தெழு!
வரிப்புலிப் போத்தே வரிந்து கட்டிநில்!
நரிச்செயல் குறுக்கிடின் மிதித்ததை நசுக்கிடு!
நாட்டில் தமிழ்மகன் நல்லதோர் ஆட்சியை
நாட்டிடத் துணைநில்! நாளெ லாம்
மங்கலப் பொங்கலில் வஞ்சினம் பூண்டெழு!
சிங்க மகனே சினந்தெழு வுடனே!

---

பாடற் குறிப்பு:– 24.12.1974 ஆம் நாள் பாடியது,

## 78. ஆரியப் பேரரசு

(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)

அணிந்திருக்கும் பூணூல்கள் நூல்க ளல்ல
ஆரியத்துப் பேரரசின் எல்லைக் கோடு;
தணிந்துரைக்கும் அவர்மொழிகள் அணுவின் குண்டு;
தருப்பைப்புல் ஏவுகணை; நெற்றி யின்மேல்
அணிந்திருக்குந் திருநீறோ இடுக்கித் தாக்கும்
ஆயுதங்கள்; திருநாமம் கழும ரங்கள்;
நினைந்தெடுத்து விழிப்பாகக் கட்டி வைத்த
நெடியமதிற் கோட்டைகளாம் நான்கு வேதம்
1

ஆலயங்கள் அவ்வரசு செங்கோ லோச்சும்
அரண்மனையாம்; சிலைகள்வெளி நாட்டுத் தூதர்;
நாலுவகை வருணங்கள் பகைமு டிக்கும்
நாற்படையாம்; பஞ்சாங்கம் சட்ட நூலாம்;
மேலுலகம் புராணங்கள் சாத்தி ரங்கள்
மேற்படியார் விளம்பரஞ்செய் துறைக ளாகும்;
மாலுடைய மதம்நடன மங்கை யாகும்;
மற்றுமுச்சிக் குடுமியொரு கொடியே யாகும். 2

ஆலமரம் அரசமரம் இவற்றின் கீழே
அமர்சிலைகள் சிற்றரசாம்; உடைக்குந் தேங்காய்
பாலொடுநெய் ஊர்மக்கள் கப்ப மாகும்;
பறையோசை மந்திரங்கள் அரசின் ஆணை;
மேலுலகம் கீழுலகம் சிறைக ளாகும்;
மேதைகள்போல் எழுதிவருஞ் செய்தித் தாள்கள்
வேலொடுவாட் படைகளாகும்; காஞ்சிப் பீடம்
வெற்றிபெற மறைசூழும் மன்ற மாகும். 3

பகுத்துணரும் ஆற்றலிலார் மயக்கங் கொண்ட
பத்தியினால் தம்மைத்தாம் அறிய கில்லார்
தொகுத்திருக்கும் மடமைக்குள் மூழ்கி நிற்பார்
தொழும்பரிவர் குடிமக்கள்; மனுநூ லாளர்
வகுத்திருக்கும் பிறப்பிறப்பு வரிக ளோடு
மன்றல்வரி குடிமக்கள் செலுத்தி நிற்பர்;
பகைத்தெவரும் எழுவரெனில் அழகு மிக்க
பராசத்தி ஏவிடுவர் பகையும் வீழும். 4

வஞ்சனையின் வலைவிரிக்கும்; அறிவு தேய்ந்த
வாயில்லா அரிகளெலாம் வந்து வீழும்;
நஞ்சனைய தந்திரத்தால் மயக்கு கின்ற
நாத்திறத்தால் ஏமாற்றி ஆட்சி செய்யும்
பஞ்சணைந்த அரியணையில் ஏறி நின்று
பாமரரைப் பொம்மையென ஆட்டி வைக்கும்;
துஞ்சுமன மூடரிங்கு வாழும் மட்டும்
தோற்காது வெற்றிபெறும்ஆரி யந்தான். 5

---

பாடற் குறிப்பு:– 30.3.1984 ஆம் நாள் பாடியது.

## 79. ஏற்றம் பெறுமா இந்தியா?

(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)

தீண்டுதல் குற்றம்; தெருவிடை நடக்க
வேண்டுதல் குற்றம்; விழியாற் பார்ப்பது
மிகப்பெருங் குற்றம்; மிதியடி யணிந்து
நடப்பது குற்றம்; நாயினுங் கீழா
இந்திய நாட்டில் இப்படி ஓரினம்
சொந்த நாட்டில் நொந்து தவித்தது;
அடிமைப் புழுவெனப் படிமிசைக் கிடந்தது;
மிடிமையிற் பட்டது வேதனை யுற்றது;
சிந்தனை மாந்தர் நொந்தன ராகி
இந்த நிலையேன்? என்றனர் ஏங்கி
''அவரவர் தலைவிதி'' ''ஆண்டவன் படைப்பிது''
''தவறில் சாத்திரம் தந்த நெறி''யென
ஓதினர் இறைவன் தூதுவர் என்போர்;
''தூதரைத் துரத்து; தொழத்தகும் இறைவன்

மேதினி மாந்தரை மேலெனக் கீழெனப்
படைத்தனன் ஆகின் உடைத்தெறி அவனை;
சாத்திரம் இதுவெனில் ஆத்திரங் கொண்டு
போர்த்திறங் காட்டு பொசுக்கு நெருப்பில்;
மதவெறி தடையெனில் மதத்தை மாற்''றெனப்
புதுநெறி காட்டிப் பொங்கினர் இருவர்; 20
தெற்கில் திராவிடப் பெரியார் ஒருவர்
வடக்கில் வாழ்ந்த அம்பேத்கர் ஒருவர்;
இருவர் தோன்றி எதிர்த்தன ரேனும்
சரிவரச் சமனிலை சார்ந்தில தின்னும்;
மாற்றம் வேண்டின் நூற்றுவர் வேண்டும்,
தூற்றும் மதவெறி சூழின்
ஏற்றம் பெறுமோ இந்திய நாடே? 27

---

**பாடற் குறிப்பு:–** 21.12.1988 ஆம் நாள் பாடியது.

## 80. பொங்குதற்கு வீடில்லை

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

நல்லதிரு நாளென்றார் உழைப்போர் யாரும்
நயக்கின்ற பொங்கலென்றார் மகிழ்ந்தோம் ஆனால்
சொல்லரிய துயர்தாங்கி உழைக்கும் குப்பன்
சோர்ந்துநடை போடுகின்ற சுப்பன் அன்னோர்
கல்லுடைத்து மண்வெட்டி கஞ்சி யின்றி
கதறுகிறார் பொங்குகின்றார் அவரி டத்தே
வெல்லமுடன் அரிசிபெற காசும் இல்லை
அவைபெற்றால் பொங்குதற்கோ வீடும் இல்லை.

---

**பாடற் குறிப்பு:–** 1951–'போர்வாள்' பொங்கல் மலரில் வெளிவந்தது. எழுதிய பாடல்கள் பலவெனினும் இப்பாடல் ஒன்றுதான் கிடைத்தது.

## 81. தமிழர் திருநாள்

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

**{'தமிழியம்' என்ற பொருண்மையில் இடம் பெற்றுள்ள இப்பாடல் பொருண்மை கருதி இங்கும் இடம்பெற்றுள்ளது)**

தைபிறக்க வழிபிறக்கும் என்பர் மேலோர்;
தமிழகத்து வழிவகுக்க வந்தாய் பொங்கல்!
பொய்யுறக்கம் கொள்கின்ற தமிழர் இந்நாள்
பொங்கிஎழுந் தாற்பகைமை தூள்தூள் ஆகும்,
[1]செய்புரக்கும் உழவோரே செங்கோல் தாங்கிச்
செந்தமிழ ஆட்சியினைச் செய்வர், நம்மோர்
கைசிறக்கும் கலைசிறக்கும் தொழில்சி றக்கும்
காலமெலாம் களிசிறக்கும் தமிழ்சி றக்கும்.

---

**அருஞ்சொற் பொருள்:–** 1. செய் – வயல்.

## 82. விண்வெளிப் போருக்கா விஞ்ஞானம்?

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

அணுவைப் பிளந்திடும் ஆற்றலைப் பெற்றனன்
ஆறறி வேந்திய மாந்தனென்றார் – ஆய்வில்
நுணுகிப் புகுந்திடும் நூலறி வாளனை
நூறு வகைப்பட வாழ்த்திநின்றேன். 1

பாருக்கு நல்லன வாய்த்திடு மேயெனப்
பச்சை மனத்தினுள் நச்சிநின்றேன் – அமைதி
வேருக்குள் பாய்ச்சினன் காய்ச்சிய நீரினை
வெந்து தளர்ந்துளம் மாழ்கிநின்றேன் 2

யாருக்கும் யாவையும் வாய்த்திடு மேயென
யானொரு கற்பனை செய்து கொண்டேன்– விண்ணில்
போருக்கு வல்லவன் யாரெனப் பார்த்திடப்
போர்ப்பறை கொட்டினன் கேட்டுநொந்தேன் 3

ஆடவர் அஞ்சிட மாதரும் அஞ்சிட
ஆங்கிளஞ் சேய்களும் அஞ்சிநின்றார் – எந்த
நாடரும் அஞ்சிட நாய்வெறி கொண்டதால்
நாளெலாம் அஞ்சியே வாடுகின்றார் 4

மண்ணுங் கெடுத்தனர் விண்ணுங் கெடுத்தனர்
வாரியின் நீருங் கெடுத்தனரே – தீய
எண்ணம் உடுத்தவர் என்னென்ன கேடுகள்
ஈங்கினும் செய்யப் படித்தனரோ? 5

விண்வெளிப் போருக்கோ விஞ்ஞானங் கற்றனர்
வேதனை நெஞ்சினில் விஞ்சுதடா – மக்கள்
பண்ணிய குண்டுகள் மக்களை மாய்த்திடப்
பாரதைக் கண்டு பொறுத்திடுமோ? 6

மக்களைக் கொன்றபின் மாநிலம் ஏதடா?
மாமதி யொன்றை மறந்தனரோ? – நம்மைக்
கொக்கென எண்ணினர்; கொக்கரிப் போர்தமைக்
கூடி யெதிர்த்தல்நம் வேலையடா! 7

உலகிற் பிறந்தவர் ஒவ்வொரு மாந்தரும்
உரிமை படைத்தவர் உண்மையிதாம் – இங்குக்
கலகம் விளைத்திடின் காய்ந்து தடுத்திடக்
கையை உயர்த்துதல் வேண்டுமடா 8

உண்மையிற் போர்வெறி ஓட்டிட யாவரும்
ஒன்று திரளுதல் வேண்டுமடா – இந்த
எண்ணம் மிகுந்தவர் எம்மவர் தோழரென்
றெண்ணி நடந்திட வேண்டுமடா. 9

---

**பாடற் குறிப்பு:–** 20.05.1987 ஆம் நாள் பாடியது

## 83. விழா மட்டும் போதுமா?

**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

நேற்றாண்ட மன்னவனை நினைவுறுத்தும்
தோற்றத்தாய், நினக்கு நாட்டில்
நூற்றாண்டு விழாவென்றார் நுவலரிய
மகிழ்வுற்றேன்; நுணுகிப் பார்த்தேன்
காற்றாண்ட திசையெல்லாம் கவிச்சுவையைப்
பரப்பலன்றிக் கருத்திற் கொள்ளார்;
ஏற்றாண்டு நின்கருத்தை ஏனின்னும்
செயற்படுத்தா திருக்கின் றாரோ? 1

பார்திருத்தப் பாடுபட்டாய் பகுத்தறிவை
வளர்த்துவிட்டாய் பாவின் வேந்தே
சீர்திருத்தப் பாமொழிந்தாய் சீரழிந்து
பாவுலகஞ் சிதைந்த தையா!
யார்திருத்தப் போகின்றார் யாப்புலகை?
மயங்குகிறேன் யாது செய்வேன்?
ஓர்பொருத்தம் இல்லாத உரைநடையைப்
பாடலென உரைக்கின் றாரே! 2

சரிந்துவிட்ட தமிழர்க்குத் தமிழியக்கம்
எனும்நூலைத் தந்து சென்றாய்;
திருந்திவிட்ட தமிழரினிச் செயற்படுவர்

என்றிருந்தேன்; தெளிய வில்லை;
குருந்துவிட்ட மழலையர்க்கும் கொடுக்கின்றார்
அயன்மொழியை; கொடுமை யன்றோ?
மருந்துவிட்டென் மனப்புண்ணை ஆற்றுவர்யார்?
மானத்தை மறந்தே போனார். 3

சாதிக்கு நீ கொடுத்த சாட்டையடி
போதாதோ? தமிழர் இன்னும்
மோதிக்கொண் டழிகின்றார்; முற்போக்குப்
பாதைசெல முயல வில்லை;
[1]மேதித்தோல் போர்த்தவுடல் மேதியினிற்
பெற்றனரோ? மேடை யேறிப்
போதிக்க மட்டுமவர் மறப்பதில்லை
பாழாகிப் போன மாந்தர். 4

எவன்விட்டான் சாதியினை? எவன்செய்தான்
கலப்புமணம்? எவனோ எங்கோ
தவறிவிட்டான் செய்துவிட்டான் தவிக்கின்றான்;
மற்றவனோ சாதி தன்னைச்
சுவர்வைத்துக் காக்கின்றான் சொல்வீரங்
காட்டுகிறான் துணிய வில்லை;
இவன்கெட்ட கேட்டுக்கு நூற்றாண்டு
விழாவெடுக்க எழுந்தும் விட்டான். 5

---

**பாடற் குறிப்பு:—** பாவேந்தர் நூற்றாண்டு விழாவுக்குப் பாடியது.

**அருஞ்சொற் பொருள்: 1.** மேதி — எருமை.

## 84. புரட்சிப் பாவலன்

**(நூல்:—தாய்மொழி காப்போம்)**

ஒப்பரிய யாப்பென்னும் அணையைக் கட்டி
உணர்ச்சியெனும் பெரும்புனலைத் தேக்கி வைத்தான்;
அப்புனலுள் மூழ்கியதன் ஆழங் காணல்
அரிதெனினும் கரையோரம் நின்று கொண்டு
செப்புகின்றேன் சிலமொழிகள்; புதிய பாங்கில்
செய்தமைத்த பாட்டுக்குள் வெறியை ஏற்றும்
அப்பனவன் பரம்பரையில் நானோர் பிள்ளை
ஆதலினால் அவன்பெருமை பாடு கின்றேன். 1

பாவேந்தன் தீப்பிழம்பின் வெம்மை சேர்த்துப்
படைத்தளித்த தீந்தமிழின் உணர்ச்சிப் பாட்டை
நாவேந்திப் பாடிவிடின் உடலி லுள்ள
நரம்பனைத்தும் முறுக்கேறும்; மொழிக ளெல்லாம்
[1]ஏவேந்திப் போர்தொடுக்கும்; விழிக ளெல்லாம்
எரிகக்கும்; தோள்விம்மும்; போரில் எந்தக்
கோவேந்தன் வந்தாலும் எதிர்த்து நிற்கக்
கொடுங்கோலைப் புறங்காண உணர்ச்சி நல்கும்
2

விழுதுவிட்ட ஆலமரம் சாதி என்றால்
வேர்பறியச் சாய்ந்துவிழச் செய்த பாட்டு;
பழுதுபட்ட கண்மூடிக் கொள்கை என்னும்
பழங்கோட்டை சரிந்துவிழச் செய்த பாட்டு;
தொழுதுகெட்ட தமிழினத்தார் நிமிர்ந்து நிற்கத்
துணிவுதனை உணர்ச்சிதனைத் தந்த பாட்டு;
பொழுதுபட்டுப் போனாலும் உணர்ச்சி பட்டுப்
போகாமல் நிலைத்திருக்கும் புலவன் பாட்டு.
3

தமிழ்மொழியைத் தமிழ்மகனைப் பழித்து ரைக்கும்
தருக்குடையார் முதுகெலும்மை நொறுக்கிக் காட்டும்
அமிழ்தனைய பாட்டுரைத்தான்; சினந்தெ ழுங்கால்
அன்னைவந்து தடுத்தாலும் விடவே மட்டேன்;
நிமிர்ந்தெழுந்து போர்தொடுப்பேன் எனவெ குண்டு,
நினைத்தாலும் மெய்சிலிர்க்கும் பாட்டு ரைத்தான்;
இமைகுவியா வீரத்தை எடுத்துக் காட்டி
எக்களிக்கும் போர்ப்பாட்டை நமக்க ளித்தான்.
4

இருட்டறையில் உள்ளதடா உலகம் என்றான்;
இனியுலகம் விழித்தெழவே அவ்விருட்டை
வெருட்டுகிற வழிசொன்னான்; ஒளியுந் தந்தான்;
விளக்கெடுத்து வெளிச்சத்தால் உலகைக் காணத்
தெருட்டுகிற பாட்டுரைத்தான்; அந்தப் பாட்டைத்
தெளிந்துணர மனமின்றிப் பாட்டிற் காணும்
கருத்தெடுத்துப் பரப்புதற்கு முயற்சி யின்றிக்
கண்மூடித் துயில்கின்றோம் உணர்வே இன்றி.
5

மழைபெய்தும் விளைவறியாக் களிமண் ணாக
வன்பாறை நிலமாகக் கிடக்கின் றோம்நாம்;
கழைபெய்த சாறிருந்தும் அதனை மாந்திக்
களிக்காமல் எதைஎதையோ பருகு கின்றோம்;
விழைவெல்லாம், பாவேந்தன் எண்ண மெல்லாம்
வெறுங்கனவாய்ப் பகற்கனவாய்ப் போவ தென்றால்
நுழைமதியன் பாவேந்தன் தனது நெஞ்சம்
நொந்தழிந்து போகானோ? நன்றோ சொல்வீர்.
6

பாரதிக்குத் தாசன்தான் எனினும் அந்தப்
பாவலனை விஞ்சிநிற்கும் பாட்டு வேந்தன்
காருதிர்க்கும் மழைபோலப் பொழிந்த பாட்டுக்
கற்பனைக்கு நிகரேது? பாடல் தந்த
சாறெடுத்துக் குடித்தவர்தாம் உண்மை காண்பர்;
சாற்றிடுவர் அவனுலகப் புலவன் என்றே;
வேறெடுத்துக் குடித்தவரோ புழுதி வாரி
வீசிடுவர் மயங்கிமிகத் தூற்றி நிற்பர். 7

வங்கத்திற் பிறந்திருப்பின், இலக்கி யத்தை
வளர்த்து வருங் கேரளத்திற் பிறந்திருப்பின்;
எங்கட்குத் தலைவனவன் மேலை நாட்டில்
எங்கேனும் பிறந்திருப்பின் அங்கு வாழ்வோர்
சிங்கத்தை நிகர்கவிஞன் புகழைப் போற்றிச்
சிறப்பனைத்தும் உலகெங்கும் செப்பிச் செப்பிப்
பொங்கித்தம் உளங்களிப்பர்; தன்னே ரில்லாப்
புலவனிவன் தமிழ்நாட்டிற் பிறந்து விட்டான்.
8

ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டின் வரிக ளெல்லாம்
அணிவகுத்து நிற்கின்ற படையின் கூட்டம்;
சீர்ப்பாட்டைத் தொட்டதொட்ட இடத்தி லெல்லாம்
சீறியெழும் உணர்ச்சியைத்தான் காணல் கூடும்;
வேர்ப்பாட்டாம் அவன்பாட்டு விளைத்தி ருக்கும்
வீரமிகும் உணர்ச்சிக்குக் குறைவே யில்லை;
சாப்பாட்டுக் கலைந்துவரும் நம்மி டந்தான்
சற்றேனும் உணர்ச்சியிலை மான மில்லை.
9

மானமெனும் ஒருணர்ச்சி இருந்தி ருப்பின்
மதிகெட்டுத் தமிழ்மொழியைத் தமிழர் நாட்டில்
ஈனமுற எதிர்ப்போமா? நமக்கு முன்னே
எதிர்ப்பிருக்க விடுவோமா? இசைய ரங்கில்
வானமுதத் தமிழிருக்க அதைவி டுத்து
வந்தமொழிப் பாடல்களைப் பாடு வோமா?
ஏனுயர்வு தமிழ்க்கில்லை தமிழர் நாட்டில்?
இனியேனும் மானத்தைக் காப்போம் வாரீர்.
10

---

**பாடற் குறிப்பு:—** பெங்களூர் உலகத் தமிழ்க் கழகம் நடத்திய பாவேந்தர் விழாக் கவியரங்கில் பாடியது—25.8.1979.

அருஞ்சொற் பொருள்:– 1. ஏவேந்தி – அம்பேந்தி.

## 85. தட்டி எழுப்பிய தலைவர்கள்
**(நூல்:–புதியதொரு விதி செய்வோம்)**

நிலைமண்டில ஆசிரியப்பா

தமிழக மாந்தரைத் தட்டி எழுப்பிய
தமிழினத் தலைவர் தம்புகழ் பாட
வேட்டெழுந் திங்கே பாட்டரங் கமைத்துக்
கூட்டி மகிழ்ந்தீர், கூப்பினேன் கைகள்;
எட்டுணை யாகினும் எழுமுணர் விலராய்ப்
பட்ட மரமெனப் பள்ளியிற் கிடந்து
கெட்டழிந் தோரைக் கிளர்ந்தெழுந் திங்கே
தட்டி யெழுப்பிய தலைவர் பற்பலர்;
பாரோர் இகழப் பான்மைகள் கெட்டும்
ஒரா திருந்தே உறங்கும் மாந்தரைப்

'பாமரர் விலங்குகள் பழுதுறு செவியர்
ஊமையர் குருடர்' என்றெலாம் உரைத்துத்
திட்டி எழுப்பிய திண்ணியர், நம்மைச்
சுட்டிய சொற்கள் சுடவே இல்லை;
சூடு சுரணை அனைத்துந் தொலைத்து
நீடு துயிலில் நிலைத்திருந் தோரை
"மடமையில் உழல்வீர் மானம் எங்கே?
கடையர் என்றுமைக் கழறுதல் கேளீர்;
சாதிகள் எத்தனை! சமயம் எத்தனை!
ஓதிய இவற்றை உறுதிப் படுத்தும்

வேதம் எத்தனை! வீணிற் படைத்த
கதைகள் எத்தனை! கடவுளும் எத்தனை!
சதையை வளர்த்தீர் மதியை வளர்த்திலீர்
மட்டிகள் போலினும் வாழ்வீர்" என்றெலாம்
குட்டி எழுப்பினார் கூர்மதிப் பெரியார்;
"சிறுநரிக் கூட்டம் சிங்கக் காட்டில்
உரிமையிற் செங்கோல் ஓச்சுதல் முறையா?
[1]தரியலர் நுழைவால் தமிழகம் தாழ்ந்திடல்
சரியிலை இனிமேல் தமிழா! தலைநிமிர்!
உலகம் வியந்திட உயரிய பண்புகள்

பலபல கண்டது பண்டைத் தமிழகம்
அந்தத் தமிழகம் அடிமையில் வீழின்
இந்தப் புல்லுயிர் இருந்துதான் என்பயன்?
ஒருமுறை போகுமிவ் வுயிரை நாட்டின்
உரிமையைக் காத்திட உவப்புடன் ஈவோம்;
கீழைத் திசையில் கிளர்கதிர் விரித்துக்
காலைச் சுடரொளிக் கதிரோன் எழுந்தனன்
விழித்தன புள்ளினம் விரித்தன சிறகுகள்
கொழித்திடும் அலைப்புனற் குளந்தொறும் குலவிடும்
தாமரைப் பூக்கள் தம்முகம் மலர்ந்தன;

காமலர்க் கொடிகள் கண்மலர்ந் தசைந்தன;
அஞ்சிறைத் தும்பி செஞ்சுவைக் கொழுந்தேன்
கொஞ்சிக் கொஞ்சிக் குடித்துச் சுவைத்துப்

பாணர் யாழெனப் பாடிப் பறந்தன;
யாணர்ப் புத்துணர்வு யாண்டும் விரிந்தன;
ஆவினம் மாவினம் அன்புப் பெருக்கால்
தாவின மாங்குயில் கூவின யாங்கும்;
நீயோ இன்னும் நீள்துயில் கொண்டனை;

[2]பாயா வேங்கையின் நின்றிடல் பண்போ?
விழிஎழு சிறகை விரிபற உன்னினப்

பழிதுடை தலைநிமிர்" என்றெலாம் பகர்ந்து
பள்ளி யெழுச்சிப் பாடல்போல் பலபல
அள்ளித் தந்து துள்ளி எழுந்திடக்
கற்றவர் மெச்சும் காஞ்சிச் செம்மல்
உற்றுணர் வண்ணம் சொற்றவை பற்பல;
வடபுல மொழியால் வாடிய தமிழ்மொழி
விடுதலை பெறவே விளைத்தநற் போரால்
தனிமைச் சிறையில் தாம்துயர் உழந்தும்,
'இனிமைத் தமிழ்ப்பெயர் இருப்பதை நீக்கி
வடவர் பெயரை இடுவது முறையோ?

தமிழர் நாட்டில் தால்மியா புரமா?
உமிழும் செய'லென உருத்தெழு சமரில்
இரும்புப் பாதையில் விரும்பித் தலையைப்
பொருந்த வைத்துப் போர்மறங் காட்டியும்
'வடபுலம் வாழுநர் உறவுடன் வந்தால்
தடையிலை; எம்முடைத் தடங்கை நீட்டி
வரவுரை கூறி வாழ்த்துவம் மகிழ்வோம்,
கரவுடன் வருவரேல் கைகள் மடங்கும்;
உரிமைக் குரல்கள் ஓங்கி முழங்கும்;
எரியுடன் ஆடேல்' என்றறை கூவியும்,

நாடிப் புகழ்ந்தும் ஆடிக் களித்தும்
கூடிக் குலவிய குடிலர்கள் ஒடிக்
காட்டிக் கொடுத்த கயமைத் தொழிலால்
நாட்டில் நிகழ்ந்த நயவஞ் சகத்தை
நசுக்கி யழித்து நாவைப் பிடுங்கிப்
பொசுக்கி யெறிந்து புகழ்க்கொடி நாட்டியும்,
நெருக்கடி என்றொரு நெருப்பினை மூட்டி
வெறுப்புடன் அதனுள் வீசி எறிந்திடக்
குளிர்புனற் பொய்கையுள் குளித்தெழுந் ததுபோல்
ஒளிபடர் கதிரென உய்ந்திவண் வந்தும்,

மாற்றலர் பகழிகள் மார்பினிற் பாய
ஏற்றவை தாங்கி இமையா விழியொடு
போர்புரி மறவன் போலெதிர் நின்று
நேர்வரு பழிகளை நெஞ்சினில் தாங்கியும்,
அறிதுயில் கொள்வோர் உரிமையை உணர்ந்திட
முரசொலி எழுப்பி முழக்கினார் கலைஞர்;
"ஈங்கென்ன வேலை இந்தி மொழிக்குத்
தூங்கினர் தமிழர் எனவோ துணிந்தனர்?
முத்தமிழ் காக்க முனைந்தெழு தமிழா!
எத்தனைப் படைகள் இங்கே வரினும்

அத்தனை யுந்தூள் ஆக்குக நீக்குக!
கொடியோர் செயலறக் கொலைவாள் எடடா!
இடியே றெனநீ ஏறுபோல் நடடா!
கொதித்தெழும் உனையிடுங் கொடுஞ்சிறைச் சாலை
மதித்துளம் மகிழ்ந்திடும் மாங்குயிற் சோலை;
தமிழரின் மேன்மையைத் தாழ்த்திடக் கருதும்
திமிரினை நொறுக்கித் தீயினிற் கொளுத்து
கூடார் உனக்குக் கோடி தரினும்
நாடேன் என்றுசொல் நாய்போல் அலையேல்
தமிழரின் மானமும் தமிழரின் வீரமும்

நமதிரு விழிகள் நண்ணிய இமைநீ;
தமிழ்மொழி ஆய்ந்த தமிழ்மகன் ஒருவனே
தமிழ்நா டாளத் தகுதி யுடையவன்;

[3]என்புகள் இடுவார் எவரோ அவர்பால்

அன்பினைக் காட்டி அலையும் விலங்கெனக்
கும்பி வளர்க்குங் குறிக்கோள் ஒன்றே
நம்பி வாழேல்; நாடே குறிக்கோள்''
என்றுபா வேந்தர் எழுப்பினர் பாடி
இன்றும் பற்பலர் இங்கே உள்ளனர்;
இராமன் கதையை இயம்பினன் கம்பன்

பராவினர் தமிழர் பரவிய தவன்கதை;
ஆரியன் உயர்ந்தவன் திராவிடன் தாழ்ந்தவன்
எனுமொரு கருத்தை எங்கும் பரப்பினர்;
இனவுணர் வுடையார் இதனைப் பொறாது
திராவிடர் பெருமையைத் தெள்ளிதின் உணர்த்த
இராவண காவியம் இயற்றிக் காட்டி
இனவுணர் வூட்ட எழுதுக காவியம்
எனவுணர் வூட்டி எழுப்பினர் குழந்தை;
பணியை யிழப்பினும் பதவி யிழப்பினும்
அணிபெறுந் தமிழின் ஆக்கமே இலக்கெனப்

போர்புரி மறவர் புலமிகும் இலக்குவர்
யாருரை தரினும் நேரிய தன்றெனின்
சீறி எழுவார்; சிறிதும் அஞ்சார்;
சீரிய நாட்டில் ஆரிய இந்தி
மீறி வருங்கால் வெகுண்டெழுந்தார்த்துப்
புலவர் படையைத் திரட்டிப் போர்க்குரல்
குலவிட முழக்கினர் அலறிய தரசும்
உளநாள் முழுதும் உயர்தமிழ் காக்கும்
களமே கண்டவர் காட்டிய நெறிபல;
அன்பின் உருவம், அமைதியின் தோற்றம்,

பண்பின் உறைவிடம் பகையிலா நெஞ்சம்
கொண்டவர் செம்பொருள் கண்டவர் அவரைத்
தண்டமிழ் நாட்டார் தமிழ்ப்பெரி யாரெனக்
கொண்டுளம் மகிழும் கொள்கைச் சான்றோர்;
தொழிலோர் இயக்கம் தூய தமிழில்
எழுதியும் பேசியும் இயக்கிய தலைவர்;
அரசியல் விளக்கம் அன்னைத் தமிழில்
உரைசெய இயலா தென்றவர் [4]உட்க
அழகிய தமிழில் எழுதிய தமிழர்;
பழகிட நல்லவர் பைந்தமிழ் வல்லவர்

உலக ஒற்றுமை உள்ளக் கிடக்கை
ஆயினும் தம்மை ஈன்றதோர் அன்னைத்
தென்தமிழ் நாட்டைச் சிறிதும் மறந்திலர்;
இந்தி புகுந்திட எண்ணிய காலை
நொந்துளங் கனன்று நுவன்ற நல்லுரை
பொன்னிற் பொறித்துப் போற்றுந் தகையன;
நன்னர் நெஞ்சால் நாடி, இளைஞரை
'எழுக எழுக' என் றெழுச்சிகள் கூறித்
'தொழுக தொழுக தூய்தமிழ் அணங்கை
நாளைய உலகை நடத்தும் பொறுப்பு

காளையர் நுமது கடமை' என் றுரைத்துத்
தட்டித் தட்டி எழுப்பிய தலைவர்
சுட்டிச் சுட்டிச் சொன்னவை பலப்பல
''உயர்தனிச் செம்மொழி உமது தாய்மொழி
அயன்மொழிச் சொற்கள் அதனிடைக்
கலத்தல்
மொழியின் தூய்மை அழியும் வழியாம்,
பழியிது தவிர்க, பைந்தமிழ் பேணுக,
தமிழ்மகள் மேனியில் தழும்புகள் செய்யத்
தமிழர் முனைவது தகுதி யன்றாம்;
நஞ்சின் [5]கலப்பால் நல்லதோர் கலப்பால்

துஞ்சும் நிலையினைத் தோற்றுவித் தழிக்கும்;
ஆரியம் கலந்தால் அன்னைத் தமிழின்
சீரியல் அழியும் செம்மையும் மறையும்
பிறமொழிக் கலப்பினைப் பேணா தகற்றுக;
திறலுறு தீந்தமிழ் தெள்ளிதின் ஓம்புகென்
றுரைதரும் மறைமலை யடிகளின் வாய்மொழி
நிறைதுயில் கொள்வோர் நெடுஞ்செவிப் புகுந்தில;
ஆரிய இருளில் அகப்படும் உண்மையைச்
சீரிய வகையால் தெள்ளிதின் உணர்த்திய
செஞ்சுடர் ஞாயிறு தேவ நேயரை

விஞ்சிய மொழிநூல் மேலவர்க் காண்கிலம்;
நுழைபுலங் கொண்டு மொழிபல ஆய்ந்து
பிழையற வுணர்ந்து பிரித்தும் பகுத்தும்
வேர்ச்சொல் கண்டு விளக்கிடும் ஆண்மை
யார்க்கது வாய்க்கும்! யார்க்கது வாய்க்கும்!
தென்மொழிக் கடலுள் திளைத்துத்
தோய்ந்து
பன்மணித் திரள்கள் பாருக் கீந்தவர்;
பொய்ம்மொழி யாளர்க் கவரோர் புலிதான்;
மெய்ம்மொழி யாளர்க்கு மேவிய
குழந்தை;
கூட்டில் அடங்காக் காட்டுப் புலிதான்

வீட்டில் எமக்கோர் கூட்டுக் கிளியே
தவத்தாற் கிடைத்த தமிழரின் சொத்து
மனத்தால் தொழுதவர் மலரடி போற்றுவம்
கனிச்சுவை விஞ்சும் தனித்தமிழ் வளர
நுனித்தறிந் தெமக்கு நுவன்றவை பற்பல;
திரைகடல் தாண்டி உறையுந் தமிழர்
உரிமை யுணர்வும் இனமொழி யுணர்வும்
பெருகிட யாண்டும் பிறங்குதல் காண்குதும்
சருகுக ளாகிச் சாய்வதே இல்லை;
வருமிடர் பலப்பல வாயினும் வணங்கிலர்

ஒருமுக மாக ஓங்கிய குரலில்
ஓரணி யாகிப் போரணி வகுத்தனர்;
அமுத விங்கனார் அவருள் ஒருவர்;
ஈழங் கண்ட இணையிலாத் தலைவர்;
தலைவர் பற்பலர் தட்டி எழுப்பினும்;
கலைய வில்லை கண்துயில் இன்னும்
கும்ப கருணன் குலத்தவ ராகி
அம்புவி மாந்தர் ஆழ்துயில் கொண்டனர்;
மடமைகள் இன்னும் மறைய வில்லை;
கடவுளர் கதைகள் கலையவு மில்லை;

சமயப் பூசல் சரியவு மில்லை;
இமயம் குமரி இடைப்படு நாட்டில்
தொலைந்ததா சாதி? தொலையவே இல்லை;
தேர்தல் என்றொரு சேதி வருமெனில்
ஊர்வல மாசு உலாவரும் சாதி
தமிழ்தான் எங்குந் தழைத்ததா என்றால்
உமியள வேனும் உயரவே இல்லை;
வானொலிப் பெட்டி வாயைத் திறந்தால்
வீணொலி, விளங்கா வெற்றொலி முழங்கும்
சுப்பிர பாதம் சுருதிகள் ஸ்மிருதிகள்

தப்பினால் இந்தி, தடபுடா ஒலிகள்,
தியாக ராசர் தெலுங்கிசைக்
கீர்த்தனை
இப்படிப் புரியா இசையொலி கேட்கும்;
எப்படிப் பொறுப்போம்? இதுதமிழ் நாடாம்!
தமிழகக் கோவிலுள் தலையை நீட்டின்

தமிழொலி அங்கே தவழ்ந்திடக் காண்கிலம்
இனமெனப் பாரா தெதிரெதிர் நின்று
முனிவுறும் ஞமலியின் முறைப்பொலி போலக்
கரகர ஒலியே காதில் வீழும்;
திருமண முறையிலும் தெரியா மொழிதான்;
220

எங்கு நோக்கினும் எரிச்சலே மிஞ்சும்;
பொங்கி எழும்நாள் புரட்சி வரும்நாள்
இங்கே தோன்றினால் எம்மவர் விழிப்பர்;
பாடி எழுப்பிற் பயனே இல்லை;
சாடி எழுப்பின் சற்றே விழிப்பர்
பொங்குக புரட்சி பொங்குக எழுச்சி
எங்கணும் இன்பம் தங்குக இனிதே.
227

---

**பாடற் குறிப்பு:–** ஈரோடு பாவலர் மன்றக் கவியரங்கில் பாடியது–12.11.1980.

**அருஞ்சொற் பொருள்:–** 1. தரியலர் – பகைவர். 2. பாயா வேங்கையின் – வேங்கை மரம் போல். 3. என்புகள் – எலும்புகள். 4 .உட்க – வெட்கித் தலைகுனிய. 5. கலப்பால் – கலம் + பால்.